பக்கங்கள் : 18+VIII=26

உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

கடந் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 20 ஞாயிற்றுக்கிழமை (05-09-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:285

அரசுக்கு எதிராக ஐ.தே.க. தொடர் போராட்டங்கள்

கொழும்பு,செப்.5

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதைக் கண்டித்தும் சம்பள உயர்வு உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்தும் தொடர் போராட்டங்களை முன்னெடுக்க எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி முடிவுசெய்துள்ளது.

அரசுக்கு எதிராக நடத்தப்படவுள்ள இந்தத் தொடர் போராட்டங்களில் முதலாவது போராட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்பு ரயில் நிலையத்துக்கு முன்பாக இடம்பெறும்.

சுமார் 10 ஆயிரம் பேர் இந்தப் போராட்டத்தில் பங்குபற்றுவர் என்றும் -

தொடர்ந்து பல்வேறு வடிவங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் - ஐ.தே.

(16ஆம் பக்கம் பார்க்க)

புலிகளுடன் பேச்சை ஆரம்பிப்பது பற்றி கட்சிகள், குழுக்களுடன் கலந்தாலோசனை

ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

காலி,செப்.5

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை முன்னெடுப்பது தொடர்பாக ஐ.தே.கட்சி உட்பட சகல அரசியல் கட்சிகளுடனும் குழுக்களுடனும் அடுத்த இருவார காலத்தில் கலந்தாலோசனை நடத்தவுள்ளேன்.

- இப்படிக் கூறியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

காலியில் நேற்றுமாலை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 53ஆவது ஆண்டு நிறைவுப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இப்படிக் கூறினார்.

ஜனாதிபதியின் வருகையை ஒட்டி காலி கமநலசேவை மைதானப் பகுதியில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஜனாதிபதி அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது:-

பொருளாதார நிலை, எரிபொருள் விலை அதிகரிப்பு, வரட்சி, பொருள்களின் விலை ஏற்றம் ஆகியவற்றால் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கியபோதும், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதிலும் நாங்கள் அக்கறைகாட்டி வருகின்றோம்.

இனப்பிரச்சினை உட்பட சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண எனக்கு இரு வருடங்கள் அவகாசம் தாருங்கள். அதுவரை சகித்துக் கொள்ளுங்கள். (16ஆம் பக்கம் பார்க்க)

ஆயுதக் குழுக்கள் அகன்றால்தான் கிழக்கில் சுமுக நிலைமை ஏற்படும்

படையினர் - புலிகள் சந்திப்பு மட்டும் பயன்தராது என்கிறார் கௌசல்யன்

கிளிநொச்சி,செப்ரெம்பர்5

கிழக்கில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்படும் சந்திப்புக்கள் மூலம் கிடைக்கும் பயன்களை அங்குள்ள மக்கள் முழுமையாக அனுபவிப்பது என்பது இராணுவத்தின் கைகளில்தான் தங்கியுள்ளது. அங்கு முற்றாகப் பதற்றம் அகன்ற சுமுக சூழ்நிலை உருவாகவேண்டுமானால் படையினருடன் இணைந்து செயற்படும் ஆயுதக்குழுக்கள் அங்கிருந்து வெளியேற்றப்படவேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்.

தலைவர் பிரபாகரனுடன் ஆலோசனை நடத்துவதற்காக நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு வருகை தந்திருந்த கௌசல்யன் அங்கு வைத்து உதயனுக்கு செவ்வி அளித்தார்.

அந்தச் செவ்வியில் அவர் கிழக்கு மாகாண நிலைமைகளை விளக்கினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

மட்டக்களப்பு வழமைக்குத் திரும்பிவிட்டது. அங்கு மக்கள் தமது தொழில் முயற்சிகளை, அன்றாடப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். எமது அரசியல் செயற்பாடுகளையும் மேற்கொண்டுவருகின்றோம்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் எமது அரசியல் பணிகளை முன்னெடுப்பதில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எமது அரசியல் பொறுப்பாளர் சேனாதி, அரசியல் பொறுப்பாளர் பாவா மற்றும் யோகா ஆகியோர் அரசியல்

(16ஆம் பக்கம் பார்க்க)

மோ.சைக்கிள் மோதி வயோதிபப் பெண் பலி!

யாழ்ப்பாணம்,செப்5

ஏழாலையில் நேற்றுமுன்னிரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் வயோதிபப் பெண் ஒருவர் படுகாயமடைந்து பின்னர் உயிரிழந்தார்.

ஏழாலை மயிலங்காடு ஸ்ரீ முருகன் சன சமூக நிலையத்திற்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் இந்த விபத்து இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் ஏழாலை தெற்கு மயிலங்காட்டைச் சேர்ந்த பொன்னையா சின்னத்தங்கம் (வயது 76) என்ற பெண்ணே உயிரிழந்தார். வெற்றிலை வாங்குவதற்காக வீதியில் நடந்து வந்துகொண்டிருந்த இவரை மோட்டார் சைக்கிள் மோதியது.

சம்பவ இடத்தில் படுகாயமடைந்த இவர் சிகிச்சைக்காகத் தெல்லிப்பழை வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார். பின்னர்

(16ஆம் பக்கம் பார்க்க)

மல்வத்த பீடாதிபதியின் பிரதிநிதி தமிழ்ச்செல்வனைச் சந்திப்பார்

கொழும்பு,செப்.5

மல்வத்த பீடாதிபதிக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் நடைபெறும் சந்திப்புக்கு முன்பாக பீடாதிபதியின் பிரதிநிதி ஒருவர் தமிழ்ச்செல்வனைச் சந்திக்கவிருக்கின்றார்.

விடுதலைப் புலிகளைச் சந்திக்க ஏற்பாடு செய்து தருவதாக மலையக மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன், மல்வத்த பீடாதிபதிக்குத் தெரிவித்திருந்தார்.

இந்த அழைப்பை அவர் ஏற்றதையடுத்து சந்திரசேகரன் நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு வந்து தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தியிருந்தார்.

தங்களுடன் மல்வத்த பீடாதிபதி என்ன என்ன விடயங்கள் குறித்து பேச விரும்புகிறார் என்ற விவரங்களை அவரது பிரதிநிதி ஒருவர் மூலம் அனுப்பிவைக்கும் படியும் -

அவருடன் நடத்தவுள்ள பேச்சுக்களின் விவரங்களை அறிந்தபின்னர் சந்திப்புக்கான திகதியை முடிவுசெய்யலாம் என்றும் சந்திரசேகரன்

(16ஆம் பக்கம் பார்க்க)

மினிவான் மோதிய வயோதிபர் தலை நசியுண்டு மரணம்!

இருபாலைச் சந்தியில் கோரவிபத்து

கோப்பாய்,செப்.5

இருபாலைச் சந்தியில் நேற்றுப் பிற்பகல் 5.30 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் வயோதிபர் ஒருவர் தலை நசியுண்டு மரணமானார்.

வேகமாக வந்த மினிவான் ஒன்று சைக்கிளில் சென்றுகொண்டிருந்த அந்த வயோதிபரை மோதியதில் இந்த விபத்து நேர்ந்தது.

பருத்தித்துறை வீதி வழியாக யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மினிவான் ஒன்றே வயோதிபரை மோதியது. மோதிய வேகத்தில் அந்த வயோதிபர் மினிவான் சங்கரங்களில் சிக்குண்டார். அவரது தலை சக்கரத்தில் சிக்கி நொறுங்கியது. மூளை சிதறி வெளியேறிக் காணப்பட்டது.

திருமண நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டவர்களை ஏற்றி வந்த மினிவானே வயோதிபரை மோதியது வானின் சாரதி உடனடியாக இறங்கித் தப்பி ஓடிவிட்டார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

பேனாவை ஒத்த நவீன ரக துப்பாக்கி வைத்திருந்த ஒருவர் பொலீஸாரால் கைது!

கொழும்பு,செப்.5

குமிழ்முனைப் பேனாவை ஒத்த நவீன ரகத் துப்பாக்கி ஒன்றை வைத்திருந்த ஒருவரைக் கொழும்பு குற்றத் தடுப்பு பொலீஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

கிரான்ட்பாஸ் பாலத்துறை பகுதியில் வைத்தே இவர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த நவீன ரகத் துப்பாக்கிக்கு பயன்படுத்தக்கூடிய தோட்டாக்களையும் அவரிடமிருந்து கைப்பற்றியுள்ளதாகத் கொழும்பு குற்றத்தடுப்புப் பொலீஸ் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி றுவான் வெதசிங்க தெரிவித்தார்.

வனப் பகுதியில் போரிடும் இராணுவ வீரர்கள் பயன்படுத்தும் மிகப் பெறுமதிவாய்ந்த துப்பாக்கி இது என இனம் காணப்பட்டுள்ளது. இதேபோன்ற ஒரு துப்பாக்கியை இதற்கு முன்னரும் பொலீஸார் கைப்பற்றியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

கிளிநொச்சி விவசாயக் கண்காட்சி; பார்வையாளர் கூட்டம் அலைமோதுகிறது

இன்று ஞாயிற்றுக்கிழமையும் நீடிப்பு

கிளிநொச்சி,செப்.5

கிளிநொச்சி, வட்டக்கச்சியில் நடைபெற்று வரும் மாபெரும் விவசாயக் கண்காட்சியைப் பெரும் எண்ணிக்கையான மக்கள் திரண்டு வந்து பார்வையிட்டு வருகின்றனர்.

கடந்த முதலாம் திகதி ஆரம்பமான இக கண்காட்சியைப் பார்வையிடத் தொடர்ந்து பெரும் எண்ணிக்கையானவர்கள் வருவதை அடுத்து கண்காட்சியை மேலும் ஒருநாள் அதாவது இன்றுவரை நீடிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையில் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் மற்றும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், விவசாயிகள், ஆர்வலர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் பார்வையிட்டுப் பயன் பெற்றுவருகின்றனர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம், கால்நடை உற்பத்தித் திணைக்களம், விவ

(16ஆம் பக்கம் பார்க்க)

சமய சந்நிதிகளில்

வடமராட்சி,செப்.5

குடத்தனை வடக்கு மாதாகோவில் வருடாந்த உற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை இரவு நற்கருணை ஆராதனையும், மறுநாள் புதன்கிழமை காலை கூட்டுத் திருப்பலியும் இடம்பெற்றுச் சொரூப பவனியுடன் உற்சவம் நிறைவு பெறும். (10-173)

★ ★ ★

நவாலி,செப்.5

நவாலி, கலையரசி வீதி மாவடி ஞானவைரவர் ஆலயத்தின் மணவாழக்கோல விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7மணி முதல் நடைபெறும்.

இதனையொட்டி விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று வைரவப் பெருமான் வீதியுலா வருவதுடன் மாகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

(10-100)

கட்டடங்களின் தரம்பேணும் பயிற்சிக்கு தொழிலாளரை வழங்குவதற்குப் பின்னடிப்பு

ஒப்பந்தகாரர்களின் நிலைப்பாடு குறித்துத் தேசிய நிர்மாணிகள் சங்கம் கவலை

யாழ்ப்பாணம்,செப்.5

உலக வங்கியின் உதவியுடன் கட்டடப் பணிகளின் தரத்தை உயர்த்தும் நோக்குடன் நடத்தப்படவிருக்கும் பயிற்சிக்குத் தொழிலாளர்களை வழங்க கட்டட ஒப்பந்தகாரர்கள் பின்னடிக்கின்றனர் என்று முறைப்பாடு கூறப்படுகிறது.

வடக்கில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் கட்டடங்களின் தரம் குறைவாக இருப்பதாகப் பரவலாக எழுப்பப்பட்டு வந்த குற்றச்சாட்டுகளை அடுத்துக் கட்டடப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு விசேட பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் ஆலோசனையின் பேரில் உலக வங்கி வழங்கியுள்ள நிதி உதவியுடன் தேசிய நிர்மாணிகள் சங்கத்தின் வடமாகாணக் கிளை இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது.

'சம்பாதிக்கக் கற்றல்' என்ற நோக்குடன் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டம் இன்று வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியிலும், நாளை கிளிநொச்சி, யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் அங்குரார்ப்பணம் செய்யப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொழில்நுட்பக் கல்லூரியிலும் தலா 20 கட்டடத் தொழிலாளர்களுக்கும் 20 தச்சுவேலை தொழிலாளர்களுக்கும் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிக்குத் தொழிலாளர்களை அனுப்பும்படி சகல கட்டட ஒப்பந்தகாரர்களும் கேட்கப்பட்டிருந்தனர் என்றும் -

ஆனால் கட்டடத் தொழிலாளர்களை அனுப்ப ஒப்பந்தகாரர்கள் பின்னடிக்கின்றனர் என்றும் - சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர். (எ-3)

97ஆம் ஆண்டு சம்பளத்திட்டத்திற்கு ஏற்ப ஓய்வூதியம் வழங்க ஏற்பாடு செய்க!

பொது நிர்வாக அமைச்சருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,செப்.5

கடந்த 97ஆம் ஆண்டு ஜனவரி முதல் நடைமுறைக்கு வந்த அரச ஊழியர்களுக்கான சம்பளத்திட்டத்திற்கு அமைய ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வடமாநில ஓய்வூதியர்களின் சம்மேளனம் பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சரிடம் கோரியுள்ளது.

ஓய்வூதிய முரண்பாடுகள் தொடர்பாக சம்மேளனத்தின் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் முன்வைத்த இரு கோரிக்கைகளும் வருமாறு:-

1997 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புதிய சம்பளத்திட்டம் ஒன்று நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. இந்தச் சம்பளத் திட்டத்தின்படி சம்பளம் பெற்று ஓய்வூதியம் பெற்றவர்களுக்கு ஓய்வூதியத்தில் முரண்பாடு உள்ளது. அந்த முரண்பாட்டைத் தீர்க்கவேண்டும்.

18.10.90 இல் இருந்து 31.12.96 வரையான காலப்பகுதியில் ஓய்வூதியம் பெற்றவர்கள் ஓய்வூதிய உயர்வில் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்.

இவ்விரு விடயங்களில் தேவையான மாற்றங்களைச் செய்ய அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று அதில் உள்ளது. (எ-3)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நடத்திய

ஆங்கில ஆசிரியர் பயிற்சியில் சித்தியடைந்தோர் விவரம்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் நடத்தப்பட்ட ஆங்கில ஆசிரியர் பயிற்சியில் சித்தியடைந்தவர்களின் பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டுள்ளன.

சித்தியடைந்தவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிறுவன கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

சித்தியடைந்த மாணவர்கள் விவரம் வருமாறு:-

நடராஜா பஞ்சசீலன் (அச்சுவேலி), சசிகரன் ரேணுகா (யாழ்ப்பாணம்), செல்லத்துரை பிரதீபன் (கிளிநொச்சி), சாந்தநாயகி பொன்னம்பலம் (கொக்குவில்), வைதேகி சிவஞானம் (கொக்குவில்), கலைவாணி கந்தசாமி (சாவகச்சேரி), துஷ்யந்தினி தர்மராஜா (சுன்னாகம்), ஜமுனாமலர் சந்திரசேகரம் (உரும்பிராய்), கலைத்தேவி பொன்னையா (முல்லைத்தீவு), சுகந்தினி சுப்பிரமணியம் (கொக்குவில்), ஆரணி பூபாலசிங்கம் (நீர்வேலி), குணவதனி பரம்சோதி (கரவெட்டி), தங்கவடிவேல் சிவாஸ்கரன் (பரந்தன்), கவிதா சிவபாதம் (யாழ்ப்பாணம்), ஞானப்பிரகாசம் அன்ரனி தவச்செல்வம் (யாழ்ப்பாணம்), வேலும்மயிலும் கோபிராஜ் (புலோலி), அருள்மொழி சுப்பிரமணியம் (முல்லைத்தீவு), தில்லையம்பலம் கிருஷ்ணரூபன் (யாழ்ப்பாணம்), பிரவீணா சிவஞானசுந்தரம் (சுன்னாகம்), சுதந்திரன் சுதர்சினி (தாழையடி), கோமதி சுந்தரலிங்கம் (சுன்னாகம்), ஜமுத்திரா தர்மலிங்கம் (கிளிநொச்சி), கதிரவேலு டேவிஸ்வராசன் (திருநெல்வேலி), லவநிசா செல்வநாயகம் (யாழ்ப்பாணம்), குமாரசாமி மேனகா (கொக்குவில்), யுசெந்தி பாலபரமேஸ்வரன் (உரும்பிராய்).

(ஐ-3)

தனது கோரிக்கைகளை அடிக்கடி மாற்றிக்கொள்கிறார் புஸ்பமாலா

செய்தியாளர் சந்திப்பில் துணைவேந்தர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.5

மருத்துவபீட மாணவி புஸ்பமாலாவின் கோரிக்கைகள் அடிக்கடி மாறுவதால் அவருடைய பிரச்சினை தொடர்பாக முடிவுகளை பல்கலைக்கழகம் எடுக்கமுடியாது. இதேவேளை - திட்டமிட்டபடி அவருடைய விடைத்தாள்கள் மீள்பரிசீலனைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும்.

நேற்றுமுன்தினம் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதுவிடயமாக துணைவேந்தர் பேராசிரியர் சுமோகனதாஸ் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மருத்துவபீட மாணவி புஸ்பமாலாவின் கோரிக்கைகள் அடிக்கடி மாறுபட்டுவருகின்றன.

இவர் உண்ணாவிரதத்தை மேற்கொண்டபோது தன்னுடைய விடைத்தாள்கள் மீள்பரிசீலனைக்காக அனுப்பிவைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்தார்.

தற்போது மீள்பரிசீலனைக்காக விடைத்தாள்களை கொழும்புக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் தறுவாயில் விடைத்தாள்களை கொழும்புக்கு அனுப்பவேண்டாம் என்று துணைவேந்தருக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இதேவேளை -

புஸ்பமாலாவின் உறவினர்கள் என்று கூறி பலதரப்பட்டவர்கள் என்னை எனது அலுவலகத்திற்குள் 5 மணிநேரம் பூட்டிவைத்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இது மனதுக்குக் கவலை தரக்கூடிய விடயம் கூட.

மருத்துவபீட மாணவியின் விடைத்தாள் கொழும்புக்கு அனுப்பப்பட்டு முடிவுகள் வெகு விரைவில் வெளியிடப்படும். அந்தச் சந்தர்ப்பத்தில் மாணவி சித்தியடையத் தவறியிருப்பின் அவர் மீள்பரீட்சைக்குத் தோற்றுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

அத்துடன் அவருக்கு நூலக வசதிகளும் ஆய்வுகூட வசதிகளும் செய்துகொடுக்கப்படும் - என்றார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வகுமாரன் கூறியதாவது:

புஸ்பமாலாவின் கோரிக்கைகள் தொடர்பாகவும் அவருடைய பிரச்சினை தொடர்பாகவும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இனிமேல் தலையிடமாட்டாது - என்றார்.

இதற்கிடையில் - மருத்துவபீட மாணவி புஸ்பமாலாவுக்கு இதுவரை காலமும் தமது ஒன்றியம் வழங்கிய ஆதரவு தொடர்பான நிலைப்பாட்டை விளக்கி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் -

செல்வி புஸ்பமாலாவின் கோரிக்கைகள் தொடர்பாக ஆராய ஆலோசனைக்குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டது. இதனை அனைத்துப் பீட மாணவ ஒன்றியத் தலைவர்கள் முன்னிலையில் புஸ்பமாலா ஏற்றுக்கொண்டார்.

இந்த ஆலோசனைக் குழுவின் முடிவுகளை மாணவர் ஒன்றியம் ஏற்று, அதன்படி கல்வியைத் தொடருமாறு செல்வி புஸ்பமாலாவைக் கேட்டிருந்தது. ஆனால், அவர் அந்த முடிவுக்கு மாறாக வெளிநபர்கள் மூலம் எமது துணைவேந்தரைத் தடுத்து வைப்பது போன்ற அடாவடித்தனத்தில் ஈடுபடுவதும், எமது வளாகத்தில் ஒன்றியத்துக்குக் கட்டுப்படாமல் போராட்டம் நடத்துவதையும் மாணவர் ஒன்றியம் ஏற்றுக்கொள்ளாது.

அந்த முடிவுகளுக்கு முரணாக நடக்கும் புஸ்பமாலா தொடர்பாகப் பல்கலைக்கழக நிர்வாகம் எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் ஒன்றியம் உடன்படும் என்பதை அறியத்தருகின்றோம் - என்று உள்ளது. (எ-6-13)

இருபாலையில் நேற்று மினிவானின் சங்கரங்களில் சிக்கி தலை நசிந்து பலியான வயோதிபர் சடலத்தை முதல் படத்திலும் அவரது சைக்கிள் வீதியோரமாகக் கிடப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள் : பொ.இராஜேஸ்வரன்)

அரசு - பௌத்தமதம் - இராணுவம் மூன்றையும் கலாபூர்வமாக விமர்சிக்கும் படைப்புகளின் காட்சி

யாழ். பொது நூலகத்தில் இன்று மாலை அங்குரார்ப்பணம்

சேது காண்பியக் கலைக்கான கற்கை புலமும் தீர்த்த சர்வதேச கலைஞர் கூட்டிணைப்பும் இணைந்து அகம் - புறம் என்ற காண்பியக் கண்காட்சி ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளன. இன்று 5ஆம் திகதி மாலை 4 மணிக்கு தற்றுவைக்கப்படும் இக்காட்சியானது அடுத்த மாதம் 5ஆம் திகதி வரை யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இக்காட்சியில் தென்னிலங்கையில் 90 களில் அரச பயங்கரவாதத்துடனும் ஜே.வி.பி. கிளர்ச்சியுடனும் போருடனும் சம்பந்தப்பட்ட படைப்புகள் அடங்குகின்றன. போரினால் கேள்விக்குள்ளாகியிருக்கும் இலங்கையின் அரசு, பௌத்த மதம், இராணுவம் என்பவற்றையும் இப்படைப்புக்கள் கலாபூர்வமாகவும் நேரடியாகவும் விமர்சிக்கின்றன.

தென்னிலங்கையில் கூட இத்தகைய பாரிய தொகுப்பாக ஒரு காட்சி நிகழாத நிலையில் இந்த நிகழ்வானது குடாநாடு, இலங்கை, தென்னாசியா என்ற வரையறைக்குள் மிகுந்த முக்கியத்துவமடைகிறது. மொத்தம் 25 கலைஞர்களின் 75இற்கும் மேற்பட்ட படைப்புக்கள் காட்சிக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இதில் ஓவியங்கள், சிற்பங்கள், தாபனக் கலை (Installation Art) என்பன அடங்குகின்றன. மொத்தத்தில் சமூக அரசியல் முரண்பாடுகளும் நுகர்வோர் பண்பாடும் எவ்வாறு தென்னிலங்கைக் கலையில் எதிர்வினை செய்யப்பட்டுள்ளது என்பதும், அவை எவ்வாறு கலை வெளிப்பாட்டுச் சாத்தியப்பாடுகளை விரித்துள்ளன என்பதையும் இக்காட்சி எடுத்தியம்புகிறது. 50களில் தென்னிலங்கையிலிருந்து வந்த ஓவியக் காட்சிக்குப் பின் குடாநாட்டில் மிகப் பாரிய அளவில் நிகழும் காண்பியக்கலை சார் முன்னெடுப்பாக இது அமைவது குறிப்பிடத்தக்கது. கடந்த 20வருடகால எமது போர்க்கால அனுபவங்களையும் அதன் சமூக முரண்பாடுகளையும் கலாபூர்வமாகப் பதிவுசெய்தல் பற்றிய தேடலில் இக்காட்சி ஒரு கண்திறப்பாக அமைகிறது. நூலக அலுவலக நேரத்தில் இலவசமாக ஆர்வலர்கள் எவரும் பார்வையிடமுடியும்.

- சேது.

முதலீடு பற்றிய கருத்தரங்கு

முதலீடு பற்றிய கருத்தரங்கு ஒன்று இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கரவெட்டி பிரதேச சபைக்கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்கில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிறைவேற்றுநர் செல்வி ஷிவானி திருஞான சம்பந்தன் பங்குச் சந்தை முதலீடு வியாபாரம் என்னும் தலைப்பிலும், பங்குத்தரகர் செல்லத்துரை வசந்தகுமார் பங்குத்தரகரின் பங்களிப்பு என்ற தலைப்பிலும், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிதி நிர்வாக சிரேஷ்ட முகாமையாளர் விநாயகமூர்த்தி தேவதாஸ் டெக்ஸ் - அரசாங்கத் திறைசேரி உண்டியல், முறிகளில் முதலீடுதல் என்னும் தலைப்பிலும் கருத்துரைகளை வழங்குவர். (எ-201)

உதயன்

வளமே நமது வலு

"தமிழீழத் தேசம் பொருளாதாரத்தில் தன்னிறை வடையும் நாள் மிகவிரைவில் வரும்."

- இவ்வாறு நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை யில் ஆரம்பமான விவசாயக் கண்காட்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

தமிழ் மக்களின் விடுதலைப் போர் உக்கிரம் பெற்ற காலத்தில், களமுனையில் அதை அடக்கமுடியாத ஆளும்வர்க்கம், வள முனையில் அவர்களை அடக்க முயன்றது என்பது வரலாற்றுப் பாடம்.

எமது வளங்களை அழித்தொழித்து, வசதிகள் வாய்ப்புகள் கிடைக்காமல் தடுப்பதன் மூலம் தமிழி னத்தைத் தனது காலில் சரணாகதி அடையச் செய்ய லாம் என்று கனவுகண்ட பேரினவாதம், அந்த நய வஞ்சக நடவடிக்கையை சட்டரீதியாகவும் தார்மீகத் துக்கு முரணாகவும் நமது இனத்தின் மீது திணித்தது.

பொருளாதாரத் தடை என்ற பெயரில் விவசாய உள்ளீடுகள் முதல் மிக அத்தியாவசிய மருந்துப் பொருள்வரை எல்லாவற்றுக்குமே தடையை அனுப வித்தது இந்தமண்.

ஆனால், வள வசதிகளை அடக்க முடிந்த ஆட்சி யாளர்களால், நமது, மண்ணின் உள உறுதியை உடைக்க முடியவில்லை. அதுதான் உண்மை.

அடக்குமுறைக்கு மத்தியிலும் - அடிபணியாமல்- மனந்தளராமல் - துவளாமல் - நிமிர்ந்துநின்றது நமது தேசம். தலைசாய்க்க மறுத்த தமிழினத்தின் முன்னால் தடைகள் வலுவிழந்து போயின.

உலக விடுதலைப் போராட்ட வரலாறுகளை எடுத்துப் பார்த்தால், ஈழத்தமிழரின் போராட்டம் வித்தியாசமானது; தனித்துவமானது. மற்றைய போராட்டங்களுடன் ஒப்பிடமுடியாத ஏக சிறப்பியல்பு கள் பல அதற்கு உண்டு.

தமது விடுதலைப் போரைச் சுயாதீனமாக - வேறு எவற்றிலும் தங்கியிராமல் - தாமே தனித்து முன் னெடுக்கும் சிறப்பு உலகின் ஏனைய விடுதலைப் போராட்டங்களில் இல்லாத, தமிழரின் விடுதலை வேள்வியின் தனிப் பண்புகளில் முக்கியமானது.

'தன் கையே தனக்குதவி' - என்பார்கள்.

விடுதலைப் போராட்டத்தில் இன்று இமயத்தின் உச்சியினைத் தொட்டு நிற்கும் வீரவரலாற்றைக் கொண்ட ஈழத்தமிழினத்தின் சிறப்பே இந்த ஒருவரி மொழிக்குள் அடங்கியுள்ளது.

உலகின் வேறு எந்தவொரு நாட்டினதோ அல் லது அமைப்புகள் சக்திகளினதோ, நேரடி அல்லது மறைமுக உதவியோ, ஆதரவோ, அனுசரணையோ இல்லாமல், தன்னுடைய விடுதலைக்கான வீரவர லாற்றின் பக்கங்களைத் தமிழினம் தானே தனித்து நின்று எழுதிக் கொண்டிருக்கின்றது. கணிசமான வெற்றிகளோடு அந்தச் சரித்திரம் இறுதி இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

இந்த வீரவரலாற்றை வெற்றிகரமாக நமது இனம் பூரணப்படுத்த வேண்டுமானால், வீரத்திலும் தியா கத்திலும் ஈகத்திலும் மட்டும் தனித்து நின்று சாதனை படைப்பவர்களாக நாங்கள் இருந்தால் போதாது.

எமது வளத்தையும் தனித்து நின்று வளப்படுத் தும் ஆற்றலையும் நாம் மேன்மேலும் வளர்த்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான், களமுனையில், நமது மறவர்கள் பெறும் வெற்றியைத் தாயகமண் ணில் நிரந்தரமாக நிலைநிறுத்தும் வாய்ப்பையும் சாத்தியத்தையும் நாம் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

சுற்றிவரக் கடலையும் பேரினவாத தேசத்தின் நிலப் பரப்பையும் எல்லையாகக் கொண்டது இந்த தமிழ் மண்.

அடக்கியாள முயலும் சக்திகளின் முற்றுகைக்கும், தடைகளுக்கும் வாய்ப்பான - வசதியான - பூகோள அமைப்பு இது. இதற்கு மத்தியிலும் எமது விடுதலைப் போரில் நாம் மேலும் உறுதியாக நிற்பதற்கு மன உறு தியும் வீரமும் மட்டும் போதுமானவை அல்ல. மன உறு தியைத் தகர்த்துவிட இடமளிக்காத வள உறுதி யையும் நாம் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இயற்கை அன்னை மண்ணிலும் கடலிலும் எமக் குத் தந்த வளங்களை எமக்கு ஏற்றால்போல் உச்சமாக வளப்படுத்திக் கொள்ளும் உத்தியும் நமக்கு அவசியமானது.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அதில்தான் கரிசனையும் சிரத்தையும் காட்டுகின்றது.

அதன் ஓர் அங்கமே இத்தகைய விவசாயக் கண்காட்சி.

அரசியல் பொறுப்பாளர் கூறுவது போல, பொருளா தாரத்திலும் வள வசதிகளிலும் நாம் தன்னிறைவை ஏற்படுத்திக் கொள்ளாவிட்டால், வலு மிக்க சிங்கள தேசத்திடம் இருந்து எமது விடுதலையை - எமது உரிமையை - நாம் ஈட்டுவது சாத்தியமாகாது.

அதை மனதில் நிறுத்தி - எமது மண்ணையும் தேசத்தையும் வளம் கொழிக்கும் பூமியாக்கி அதன் மூலம் எமது பொருளாதாரப் பலத்தையும் வலுப்ப டுத்துவோம்.

ஈழத் தமிழருக்கான குரலை வலிமையாக ஒலிப்போம்!

வைகோ அடிபணியாது சூளுரை

ஈழத்தமிழர்களுக்காக ஒலிக்கின்ற எமது குரல் என்றும் ஒலிக்கும். எந்த அடக்குமுறையும் எந்த மிரட்டலும் எங்கள்

கருத்தை மாற்றாது என ம.தி.மு.க. தலை வர் வைகோ தெரிவித்துள்ளார்.

'பொடா' சட்டத்தின் கீழ் வைகோ மீதான வழக்கைத் தமிழக அரசு விலக்கு வதாக அறிவித்தும் பொடா சிறப்பு நீதிமன்றம் தமிழக அரசின் மனுவைத் தள்ளுபடிசெய்து, தொடர்ந்து வழக்கை நடத்தப்போவதாக அறிவித்தது. இது குறித்துக் கருத்து வெளியிட்டபோதே வைகோ இவ்வாறு தெரிவித்தார்.

19 மாத சிறைவாசத்தின் அனுபவத் தில் 'பொடா' நீதிமன்றத்தின்மூலம் தீர்ப்பு இப்படித்தான் வரும் என்பதை அறிவேன். இதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. எதிர் பார்த்ததுதான்.

தமிழக அரசு நயவஞ்சனையான முறையிலேயே எனது வழக்கை விலக்கு வதாக அறிவித்தபோதும், அந்த மனுவில் என்மீது கடுமையாகக் குற்றம் சுமத்தி எனது ஈழத்தமிழர் ஆதரவு தேசத் துரோக மானது எனவும் கூறியிருந்தது.

எனவே, இதைத்தான் எதிர்பார்த்தேன். கருத்துச் சுதந்திரத்திற்காக உச்ச நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்து அதில் பெரிய வெற்றி கிடைத்தது.

தொடர்ந்தும் இதை எதிர்த்துப் போரா டுவோம். இறுதியில் நீதியும், அறமும் வெல்லும் - இவ்வாறு அவர் மேலும் குறிப்பிட்டார். (எ-க)

மானிப்பாயில் தொண்டு நிறுவனம் கடந்த மாத இறுதியில் அங்குரார்ப்பணம்

நவாலி,செப்.5

மானிப்பாயில் 'சமூக அமைப்புக்களின் வலையமைப்பு' என்ற பெயரில் தொண்டு நிறுவனமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் மூலம் இப்பிர தேசத்தில் வாழும் மக்களின் தேவைகள், பிரச்சினைகள் என்பவற்றைக் கையாளு தல் மற்றும் பல்துறை அபிவிருத்திப் பணி கள் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன.

இவ்வமைப்பு தற்போது சமூக சேவை யில் ஈடுபட்டுவரும் 5 பேர் தெரிவு செய் யப்பட்டுள்ளனர். இவர்கள் கிராமப் புறங் களில் நிலவும் குறைபாடுகள், மேற் கொள்ளவேண்டிய அபிவிருத்தி வேலை கள் என்பவற்றை அங்குள்ள பிரதிநிதி கள் மூலம் பெற்றுப் பிரதேச செயலரின் சிபார்சுடன் வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்வர்.

இது சம்பந்தமான கூட்டமொன்று கடந்த 28ஆம் திகதி மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இணைப்புச் செயலா ளர் ஜி.சுபத்திரா தலைமையில் இடம் பெற்றது. வலி.தென்மேற்கு பிரதேசத்தி லுள்ள சகல பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருந்தனர். (10-100)

நல்லூர் ஆலய உள்வீதியில் இன்று பெரும் இசையர்ச்சனை

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கார்த்திகைத் திருவிழாவையொட்டி ஆலய உள்வீதியில் இன்று மாபெரும் இசை அர்ச்சனை இடம்பெறவுள்ளது.

கந்தனின் திருவீதியுலாவைத் தொடர்ந்து மாலை 6.30 மணியளவில் இந்த நிகழ்வு ஆரம்பமாகும்.

கார்த்திகைத் திருவிழாவையொட்டி 4 ஆவது ஆண்டாக இம்முறையும் இந்த நிகழ்வு இடம்பெறுகிறது. இசை அர்ச்ச னையின்போது ஆலய உள்வீதியில் அனைத்து விளக்குகளும் ஏற்றப்படும்.

இலங்கையின் மூத்த கலைஞர்களு டன் வளர்ந்துவரும் கலைஞர்களும் இணைந்து ஆலயத்தின் எண்திசையும் இசை அர்ச்சனை செய்யவுள்ளனர்.

இந்த நிகழ்வில் குறிப்பாக யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாண வர்களும் யாழ்.தேசிய கல்வியியற் கல் லூரி ஆசிரிய மாணவர்களும் கலந்துகொள் ளவுள்ளனர்.

சுமார் 2மணித்தியாலங்கள் இந்த இசை அர்ச்சனை தொடர்ந்து நடைபெ றும். (10-204)

சிறுமியை ஏமாற்றிக் குழந்தையை வாங்கிச் சென்று நகைகள் அபகரிப்பு

வலி.வடக்கு,செப்.5

சிறுமியுடன் இருந்த கைக்குழந்தையை ஏமாற்றி வாங்கிச் சென்றவர் நகைகளைத் திருடிவிட்டுக் குழந்தையை அநாதரவாக விட்டுச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் தொண்டைமானாறு சந் நிதி ஆலயத் தேர்த்திருவிழாவன்று இடம் பெற்றுள்ளது.

தனது ஏழு வயதுடைய மகளிடம் 6 மாதக் கைக்குழந்தையைக் கொடுத்து விட்டுத் தாயார் ஆலய உட்புறம் சென்று வழிபட்டுவிட்டுத் திரும்பி வந்து பார்த்த போது சிறுமி மட்டும் தனித்து நின்றுள்ளார்.

தாயார் விடயத்தை அறிந்தவுடன் பதறியடித்துக்கொண்டு ஆலயப் பகுதி யில் இருந்த பருத்தித்துறைப் பிரதேச செயலகக் கிராம அலுவலரிடம் முறை யிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஆலயச் சுற் றாடலில் உள்ள பல இடங்களிலும் தொண்டர் அமைப்புக்களின் உறுப்பினர் களும் மற்றும் பொதுமக்களும் தேடிய போது சனநடமாட்டம் அற்ற இடத்தில் இருந்து குழந்தை அழுத நிலையில் மீட்கப்பட்டது.

ஆனால், குழந்தை அணிந்திருந்த நகைகள் யாவும் திருட்டுப் போயிருந்தன. (10-86)

அகம் -புறம் காண்பியம் கண்காட்சி

யாழ்ப்பாணம்,செப்.5

சேது காண்பியக் கலைகளுக்கான கற்கைப்புலம் மற்றும் தீர்த்த சர்வதேச கலைஞர்களின் கூட்டிணைப்பு ஆகியவற் றின் ஏற்பாட்டில் அகம் - புறம் காண்பி யக் கலைக் கண்காட்சி இன்று ஞாயிற் றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ் பொது நூலகத்தில் அங்குரார்ப்பணம் செய்யப் படவுள்ளது. (10-201)

நல்லை ஆதீன முதல்வரின் உருவப்படம் இலவச விநியோகம்

யாழ்ப்பாணம்,செப்.5

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம் பந்த பரமாசாரிய சுவாமிகளின் படம் காங்கேசன்துறை வீதியிலுள்ள மில்க் வைற் தொழிலகம் மற்றும் நல்லை ஆதீனம் ஆகிய இடங்களிலும் வைத்து அன பளிப்பாக வழங்கப்படுகின்றது என்றும்-

தேவையானோர் குறிப்பிட்ட இடங் களில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தொழிலதிபர் சிவநேயர் இ.தவ கோபால் அறிவித்துள்ளார். (எ-203)

நாலாம் தர மாணவர்களுக்கு புதிய கணிதநூல் கிடைக்கும்

கல்வி வெளியீட்டு ஆணையாளர் அறிவிப்பு

வலி.தெற்கு,செப்.5

2005ஆம் ஆண்டு பாடசாலை மாண வர்களுக்கு நாலாம் தரத்துக்கான புதிய கணித நூல் வழங்கப்படவுள்ளது.

பாடசாலை மாணவர்களின் எண் ணிக்கைக்கு அமைய பாடசாலைகள் தமக்குத் தேவையான கணித நூல்களைக் கோரவேண்டும் எனக் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் எஸ்.எல். குண வர்த்தன அறிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடநூல் களை வழங்குவது தொடர்பான நட வடிக்கைகளைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

அடுத்த ஆண்டுக்குத் தேவையான பாட நூல்களைக் கோருமாறு பாட சாலை அதிபர்களுக்குக் கோட்டக் கல்வி அலுவலகங்களூடாக அறிவிக்கப் பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு இலவசப் பாட நூல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள புதிய தகவல்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:-

★ 4ஆம் ஆண்டு மாணவர்களுக் குப் புதிய கணிதபாட நூல்கள் வழங் கப்படும்.

★ முதலாம், இரண்டாம், 10ஆம் தர மாணவர்கள் அனைவருக்கும் அனைத்து நூல்களும் வழங்கப்படும்.

★ ஒவ்வொரு மாணவருக்கும் அவர்கள் சார்ந்துள்ள சமய நூல்கள் வழங்கப்படும்.

★ புதிய கல்விச் சீர்திருத்தத் துக்கு அமைய 7ஆம் தர மாணவர்க ளுக்குப் பல் பாடநூல்கள் வழங்கப்படும்.

சென்றவருடம் ஆறாம் தரத்துக்கு வழங்கப்பட்ட பல் பாடநூல்களின் பௌதி கப் பண்பு உயர்நிலையில் உள் ளமையால் மூன்று ஆண்டுகளுக்கு அவற்றை மீளப் பயன்படுத்தமுடியும்.

★ ஆங்கில மொழிமூல வகுப்புகள் இருக்கும் பட்சத்தில் ஆறாம் தரத்துக் கான ஆங்கில மொழியிலான சுகாதார மும் உடற்கல்வியும் என்ற புதிய நூல் வழங்கப்படும்.

★ 9ஆம் தரத்தில் ஆங்கில மொழி யில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானமும் தொழில் நுட்பமும், சமூகக்கல்வியும் வரலாறும், சுகாதாரமும் உடற்கல்வியும் ஆகிய நூல்கள் வழங் கப்படும்.

★ 10ஆம் தரத்துக்கான தேசப் படக் கல்வி என்னும் நூல் தொடர்ந்து வழங்கப்படமாட்டாது.

★ 4 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்களைக் கொண்ட பாடசாலைக ளுக்கான இலவச பாடநூல்கள் திணைக் களத்தினால் நேரடியாக விநியோகிக்கப் படும்.

(எ-152)

நாளை

ஆவணி 21
திங்கட்கிழமை
(06.09.2004)
திதி : சப்தமி
முன்னிரவு 9.27 வரை.
நட்சத்திரம்: ரோகிணி
பின்னிரவு 4.47 வரை.
ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி
சுபநேரம்: 12.04 - 1.34
ராகுகாலம்: 7.34 - 9.04
(பழைய நேரப்படி)

உதயவாக்கு

உலகிலுள்ள அனைத்தும் தனக்கு வேண்டும் என்று கேட் பவன் தான் உண்மையான ஏழை.

உதயன் 02.09.2004 ஆம் திகதிய இதழின் 10ஆம் பக்கத்தில் பிரசுரமான

London Language School நிறுவன விளம்பரத்தில்

இலச்சினைக்குப் பதிலாக

London English College

இன் இலச்சினை தவறுதலாக அச்சாகி விட்டது. இதனால் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய மனவுளைச்சல்களுக்கு வருந்துகின்றோம்.

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்

பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. லொறி சுத்திகரிப்பாளர் - 01
2. விற்பனைப் பயிற்சியாளர் - 07

விண்ணப்ப முடிவு திகதி - 19.09.2004

மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்,
பண்டத்தரிப்பு.

(C/37450)(42-16-17)

கண்ணீர் அஞ்சலி

அருணாசலம் யோகானந்தா

எமது பௌதிகவியல் ஆசானும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான **அ.யோகானந்தா** அவர்களின் மறைவையொட்டிக் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். அவரது ஆத்மா சாந்திடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- 2003 A/L மாணவர்கள்.

(36096)(42-16-17)

College of Information Technology

LONDON INF TECH

Sivan Lane, Avarangal, Puttur

யாழ். மண்ணில் முதன் முறையாக!

MULTI MEDIA கற்கை நெறியினை அறிமுகப்படுத்தும் நோக்கில் கொழும்பு முன்னணி நிறுவனமான London Info Tech நிறுவனத்துடன் இணைந்து நடத்தும்

மாபெரும் இலவச கருத்தரங்கும்

(Including Subject Adobe premiere 6.5, 3D Max, Max 5, flash Mx photo shop - 7, Corel draw - 10, Sound editing)

தமிழ் சீடி வழிப்பயிற்சி இறுவட்டு வெளியீட்டு விழாவும்

வலிகாமத்தில்
இடம்: ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபம்
காலம்: 07.09.2004 செவ்வாய்க்கிழமை
நேரம்: மாலை 4மணி

வடமராட்சியில்
இடம்: நெல்லியடி மத்திய கல்லூரி
காலம்: 09.09.2004 வியாழக்கிழமை
நேரம்: மாலை 4மணி

* கருத்தரங்கில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் இலவச சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன் பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு விசேட சலுகைக் கட்டணத்தில் கற்கை நெறிகள் மேற்கொள்ளப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

T.P.: 0777 - 589703

e.mail:- avarangalcit @ yahoo.com

(36016)(42-16-17)

கொழும்பு MOON BEAUTY CARE இன் DIPLOMA IN BEAUTY CULTURE AND ADVANCE DIPLOMA COURSE

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

★ தென்மராட்சி :- ஏசியன் கல்வி நிறுவனம் புத்தூர் சந்தி, மீசாலை.
காலம்: 2004.09.08 நேரம் 4.30 (பு.நே.)

★ யாழ்ப்பாணம் :- இல. 94, பிருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
காலம்: 2004.09.07 நேரம் 4.00 (பு.நே.)

★ ஏற்கனவே பதிவை மேற்கொண்டவர்களும் புதிதாக சேர விரும்புகிறவர்களும் தொடர்புகொள்ளவும்.
★ Faciàls மட்டும் படிக்க விரும்புவோரும் Facials செய்யவிரும்புவோரும் தொடர்புகொள்ளவும்.
★ Hair Care (தலைமுடி சம்பந்தமான அனைத்தும்) பயில விரும்புவோரும், சேவை பெற விரும்புவோரும் தொடர்புகொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு:
0777 570138, 021 2263365
திருமதி B.அகிலா
(அழகுக்கலை நடன ஆசிரியை)

(36101)(33-42-16-17)

வீடு வாடகைக்குத் தேவை

காரியாலய தேவைக்கு, பணியாளர் தங்க வசதியுள்ளதுமாக இரு படுக்கை அறைஉடன் நாவலர் வீதி, காங்கேசன் துறை வீதி, பலாலி வீதி அண்மித்த பகுதியில் உடனடியாகத் தேவை.

தொடர்பு:
R.இராசாராம் ச.நீ,
C/o.சட்டத்தரணி மதியாபரணம் இல்லம்,
சுதுமலைவீதி, தாவடி,கொக்குவில்.
0777 – 238528.

(36103)(42-16-17)

நீங்கள் ஒரு இணையத்தள வீருத்தியாளரா அல்லது உங்கள் நிறுவனத்திற்கு இணையதளம் இல்லையா?

Complete Web Solution from
SAAMSTECH

இலங்கையின் முன்னணி தகவல் தொழில்நுட்ப வழங்குநர்கள்
.com, .net, .info, .org
Domain Registration:Rs.400/= Per year
Hosting 100MB, Unlimited Bandwith on Windows or Linux Servers
Rs.4000/= Per year
(குறிப்பிட்ட நாள்களுக்கு மட்டும்)
(c 37444)

SAAMSTECH
Jaffna: 841, Hospital Road, Jaffna.
Colombo: 22-1/4, Galle Road, Dehiwala
Phone: 011–5540200

கருத்தரங்குகள்

குருநகர்,செப்.5

ஊர்காவற்றுறை சனசமூக நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகளில் ஆசிரியர்களாக சேவைபுரிபவர்களுக்கான சுகாதாரக் கருத்தரங்கு எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிக்கு ஊர்காவற்றுறைப்பிரதேச சபையில் நடைபெறவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கு ஊர்காவற்றுறை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.மகேந்திரன் தலைமையில் நடைபெறும். (எ-51)

***

யாழ்ப்பாணம்செப்5

'தமிழ் சீடி வழிப்பயிற்சி' மூலம் கணனிக் கல்வியைக் கற்பது தொடர்பான இலவசக் கருத்தரங்கு ஒன்று இடம்பெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்கு நாளை திங்கட்கிழமையும், எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமையும் பாடசாலைகளிலும், எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் இணுவில் கணனிக் கல்லூரியிலும் இடம் பெறும். (201)

புனித மரியன்னை பிறப்புவிழா புனித அன்னாள் ஆலயம் இளவாலை - 08-09-2004

07.09.2004 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்குத் திருப்புகழ் மாலை (வேஸ்பர்) ஆராதனை ஆரம்பமாகும்.

08.09.2004 புதன்கிழமை காலை 7.00 மணிக்கு திருப்பலி ஆரம்பமாகும்.

இதனைத் தொடர்ந்து திருச்சுரூப பவனியும் இடம்பெறும்.

இளவாலை. (37461)(38-14) -ஆலயத்தினர்.

மரண அறிவித்தல்கள்

அருணாசலம் நாகேஸ்வரி

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் நாகேஸ்வரி 03.09.2004 வெள்ளிக்கிழமை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலத்தின் மனைவியும் பண்டாரம் - நாகம்மா தம்பதிகளின் மூத்தமகளும் உதயகுமார் (ஜேர்மனி), வசந்தாதேவி (நீர்கொழும்பு), சிவகுமார் (ஜேர்மனி), சாந்தகுமாரி (ஜேர்மனி),ஜெயக்குமாரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.09.2004) திங்கட்கிழமை சிலாபம் மாதம்பையிலுள்ள அவரது மருமகள் வீட்டில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
0312251057. (36107)(42-16-17)

தகவல்:
பெறாமகன்
க.மகிந்தன்.

திருமதி சுப்பிரமணியம்பிள்ளை சரஸ்வதி

பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம்பிள்ளை சரஸ்வதி நேற்று (04.09.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - இராமாசிப்பிள்ளை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற வைரமுத்து சுப்பிரமணியம் பிள்ளையின மனைவியும் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் சிவசுப்பிரமணியம், சின்னத்துரை, காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை மற்றும் பூதநாதன், காலஞ்சென்ற ஆறுமுகசாமி ஆகியோரின் சகோதரியும் சோதிவடிவேற்பிள்ளை (அமைப்பாளர், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), குமாரதேவி (கொழும்பு), காலஞ்சென்ற சண்முகரத்தினம், மற்றும் பாலச்சந்திரன், மகேஸ்வரிதேவி ஆகியோரின் தாயாரும் கமலராணி சண்முகசுந்தரம் (கொழும்பு), கலாவதி, சிவசுப்பிரமணியம் (இத்தாலி) ஆகியோரின் மாமியாரும் வனஜா, செந்தில் குமரன, வாசுகி, தேசிகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2004) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
பன்னாலை, தெல்லிப்பழை.
எஸ்.சோதிவடிவேற்பிள்ளை(மகன்)
அமைப்பாளர், இலங்கைக்காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்.
(36106)(39-16-17)

திருமதி மார்க்கண்டு கனகம்மா

ஆரலியைப் பிறப்பிடமாகவும் 34/9, இராமநாதன் வீதி, கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு கனகம்மா நேற்று (04.09.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் நாகேஸ்வரி (ராணி)யின் பாசமிகு தாயாரும் துரைரத்தினத்தின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற இரத்தினம், பொன்னார், பூமணி சின்னராசா, சிங்கராசா, துரைராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் திரு திருமதி பரமேஸ்வரன் சுஜாந்தினி (பிரான்ஸ்), மதன் (லண்டன்), சுதாகர், தயேந்தினி, சாளினி, கபில்ராஜ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2004) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணிக்கு அவரின் பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.34/9,இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். (36100)(38-16-17)

தகவல்:
நா.துரைரத்தினம்
(துரை-மருமகன்).

அருணாசலம் யோகானந்தா

(உதவிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி வலயம்)

சாவகச்சேரியைச் சேர்ந்தவரும் 49, இராசவீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான அருணாசலம் யோகானந்தா நேற்று (04.09.2004) சனிக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலம்சென்றவர்களான அருணாசலம் இராசமணி ஆகியோரின் அன்பு மகனும் லோகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் மாறன், மகிழன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற மகாதேவா மற்றும் விவேகானந்தர் (பவுனுகம, கொழும்பு), பரமேஸ்வரி (கனடா), புவனேஸ்வரி (நுவரெலியா) ஆகியோரின் அருமைச் சகோதரரும் பாலேந்திரன் (கனடா), மகாதேவா (நுவரெலியா), மனோகரிதேவி, இந்திராணி (பமுனுகம) ஆகியோரின் மைத்துனரும் வித்யாவின் மாமனாரும் செந்தூரியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்துக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 49, இராஜவீதி, நல்லூர். (36091)(39-38-16-17)

தகவல்:
மகிழன், மாறன்- மகன்மார்
மற்றும் குடும்பத்தினர்.

சமாதான உதைபந்தாட்ட இறுதிப் போட்டிக்கு மன்னார் சென்.சேவியர், யாழ்.பற்றிக்ஸ் தகுதி

யாழ்ப்பாணம்,செப்.5

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியினால் ஏற்பாடுசெய்யப்பட்ட கொழும்பு, மன்னார் அணிகள் உட்பட ஏழு கல்லூரிகளின் அணிகள் கலந்துகொண்டுள்ள சமாதானத்துக்கான உதைபந்தாட்டத்தின் இறுதி ஆட்டத்திற்கு மன்னார் புனித சேவியர் கல்லூரியும் யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரியும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டங்கள் இரண்டும் பார்வையாளர்களுக்குப் பரவசமூட்டும் ஆட்டங்களாக அமைந்திருந்தன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மன்னார் புனித சேவியர் கல்லூரியும் மோதிக்கொண்ட ஆட்டத்தில் மன்னார் புனித சேவியர் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணக் கல்லூரியை வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டது.

மற்றோர் அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் போட்டி ஆரம்பமாகிய நேரம்முதல் சளைக்காமல் கோல்களைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டபோதிலும் இரு அணிகளுமே கோல்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்பட்டது. இரு அணிகளுமே கோல்கள் பெறும் எதிர் அணியினரின் முயற்சிகளை முறியடித்து விளையாடியதுடன் கோல்களைப் பெறும் முயற்சியிலும்பெரும் பிரயத்தனம் காட்டினார்கள்.

ஆட்டம் முடிவடையும் போது இரு அணிகளுமே கோல்கள் பெறாது ஆட்டம் சம நிலையில் முடிவுற்றது. வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன.

முதலில் வழங்கப்பட்ட ஐந்து உதைகளில் இரு அணிகளும் தலா மூன்று உதைகளை கோல்களாக்கி மீண்டும் சம நிலை பெற்றன. தொடர்ந்து ஒவ்வோர் உதைகளாக மேலதிகமாக இரண்டு உதைகள் வழங்கப்பட்டபோது யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி இரு உதைகளையும் கோல்களாக்கிக் கொண்டது. இறுதி உதையை சென்பீற்றர்ஸ் கல்லூரி கோல்களாக்கத் தவறியமையினால் பற்றிக்ஸ் கல்லூரி 5:4 என்ற கோல்கணக்கில் சென்.பீற்றர்ஸ் கல்லூரியை வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டது. (10-86-161)

தேசிய விளையாட்டு விழா

தென்மராட்சி,செப்...

30 ஆவது தேசிய விளையாட்டு விழா நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் 11 ஆம் திகதி வரை பதுளையில் நடைபெறவுள்ளது.

தேசிய விளையாட்டுப்போட்டிகளில் கலந்துகொள்ளும் வடக்கு - கிழக்கு மாகாண குழுநிலை விளையாட்டு வீரர்கள், தடகள விளையாட்டு வீரர்கள் ஆகியோரை அழைத்துச் செல்ல அந்தந்த மாவட்ட செயலகங்களினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (10 - 117)

இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப்.5

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

பிற்பகல் 3.30 மணி - கழுகுகள் வி.க. அணி எதிர் சென்.தோமஸ் வி.க.அணி

மாலை 4.30 மணி - கரவெவாய் மத்தி இளைஞர் வி.க. அணி எதிர் அல்வாய் நண்பர்கள் வி.க. அணி. (10)

யாழ்.மாவட்ட அணிக்கு இரண்டாவது வெற்றி

யாழ்ப்பாணம், செப்.5

16 வயதுக்குட்பட்ட யாழ்.மாவட்ட அணிக்கும் வவுனியா மாவட்ட அணிக்கும் இடையே கடந்த வியாழக்கிழமை தம்பிஎர்ணிஜிரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ். மாவட்ட அணி 2 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா மாவட்ட அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 99 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. அணியின் சார்பில் பிரகாஸ் 41 ஓட்டங்களையும் கோகுலராஜ் 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

யாழ். மாவட்ட அணியின் சார்பில் பந்து வீச்சில் ஏ.றஜீவன் 27 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் வை.விதுபாலா 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கே.ராஜ்குமார் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்மாவட்ட அணி 8 விக்கெட்டுக்களை இழந்து உரிய இலக்கை அடைந்து வெற்றியீட்டியது. அணியின் சார்பில் அந்தண்றோய் 13 ஓட்டங்களையும் தர்சன் 13 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வவுனியா மாவட்ட அணியின் சார்பில் டினேஸ் 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கோகுலராஜ் 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் திலீபன் 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (10)



யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணியினரைப் படத்தில் காணலாம். கல்லூரி அதிபர் , பயிற்றுவிப்பாளர் மற்றும் ஆசிரியர்களும் படத்தில் உள்ளனர். கொழும்பில் நடைபெற்று வரும் தேசியமட்டப் போட்டியில் இந்த அணி கலந்துகொண்டுள்ளது. (10)

தாச்சிச் சுற்றுப் போட்டியில் இணுவில் கலாஜோதி அணி வெற்றி

வலி.தெற்கு, செப்.5

யாழ்ப்பாண மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்திய இவ்வருடத்துக்கான தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் இணுவில் கலாஜோதி விளையாட்டு அணி வெற்றியீட்டியது.

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்திய தாச்சிச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் மற்றும் காட்சித் தாச்சிப்போட்டி என்பன சுதுமலையில் உள்ள நாவலர் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றன.

இறுதிப் போட்டியில நவாலி தென்றல் விளையாட்டு அணியினரும் இணுவில் கலாஜோதி விளையாட்டு அணியினரும் போட்டியிட்டனர்.

குறிக்கப்பட்ட விளையாட்டு நேரத்தில் இரு அணியினரும் சம நிலையில் புள்ளிகளைப் பெற்றிருந்தமையால் மேலும் ஐந்து நிமிட நேரம் விளையாடச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இதனைச் சரியான முறையில் பயன்படுத்திக்கொண்ட கலாஜோதி அணி மேலும் ஒரு புள்ளியைப் பெற்று வெற்றியீட்டிக்கொண்டது. 3:2 என்ற புள்ளி அடிப்படையில் இணுவில் கலாஜோதி அணி வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

காட்சித் தாச்சிப்போட்டி யாழ். தெரிவு அணிக்கும், கிளிநொச்சி தெரிவு அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் யாழ்.தெரிவு அணி வெற்றியீட்டியது. (10 -152)

கடந்த வியாழக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆரம்பமான சமாதான உதைபந்தாட்டப் போட்டியின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்ட யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் உட்பட மேலும் சிலரையும், ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்ட அணிகளையும் படங்களில் காணலாம்.
படங்கள் வலி.வடக்க செய்தியாளர்.

இளவாலை யங்கென்றீஸ் சம்பியனானது

வலி.வடக்கு, செப்.5

அமரர் தம்பிராசா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக வலிகாமம் உதைபந்தாட்ட லீக் கினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கிற்கு உட்பட்ட 28 கழகங்கள் கலந்துகொண்ட இப்போட்டி ஏழு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு லீக் முறையில் நடத்தப்பட்டது.

இறுதிப்போட்டியில் இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக்கழகமும், தாவடி காளிஅம்பாள் விளையாட்டுக்கழகமும், அளவெட்டி வருணோதயக் கல்லூரி மைதானத்தில் நேரம் முதல் மிகவும் விறுவிறுப்பாக விளையாடிய போதிலும் முதல்பாதி ஆட்டத்திலும் இரண்டாம் பாதி ஆட்டத்திலும் இரு அணிகளுமே கோல்களைப்பெற பல்வேறு பிரயத்தனங்களை மேற்கொண்டபோதிலும் கோல்கள் எதனையும் பெறமுடியவில்லை.

மேலதிகமாகக் கொடுக்கப்பட்ட நேரத்தில் கோல்களை இரு அணிகளாலும் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

ஆட்டத்தின் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன.

சமநிலை உடைப்பு உதையின்போது இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக்கழகம் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக்கழகத்தை வெற்றிகொண்டதன் மூலம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (10-86)

சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி

வலி.வடக்கு,செப்.5

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

14, 16, 18 வயதுப் பிரிவினர்களுக்கிடையே இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன.

14 வயதுப்பிரிவில் மொத்தம் பத்துப் பாடசாலைகள் கலந்துகொள்ளவுள்ளன. நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு லீக் முறையில் இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன.

'ஏ' பிரிவில் மாதகல் சென்.யோசேப் வித்தியாலயம், நவாலி மகாவித்தியாலயம், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை ஆகியனவும் 'பி' பிரிவில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி ஆகியனவும்-

'சி' பிரிவில் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி, பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயம் ஆகியனவும் -

'டி' பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆகியனவும் - இடம்பெற்றுள்ளன.

16 வயதுப் பிரிவில் ஒன்பது பாடசாலைகள் கலந்துகொள்ளவுள்ளன. நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு லீக் முறையில் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

'ஏ' பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயம் ஆகியனவும் -

'பி' பிரிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி, ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், மாதகல் சென்.யோசேப் வித்தியாலயம் ஆகியனவும் -

'சி' பிரிவில் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி, சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம் ஆகியனவும் -

'டி' பிரிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி, பண்டத்தரிப்பு பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம் ஆகியனவும் - இடம்பெற்றுள்ளன.

18 வயதுப் பிரிவில் நான்கு அணிகள் மட்டுமே கலந்துகொள்கின்றன. இவை இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் இடம்பெறவுள்ளன.

'ஏ' பிரிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரியும், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலையும் -

'பி' பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியும், இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியும் - இடம்பெற்றுள்ளன.

போட்டிகள் யாவும் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மற்றும் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானங்களில் இடம்பெறவுள்ளன.

போட்டிகளுக்கான ஏற்பாடுகளைச் சண்டிலிப்பாய் கோட்ட உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் மு.லோகநாதன் மேற்கொண்டுள்ளார். (10-86)

சின்னஞ்சிறு விளம்பரங்கள்

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள திறிபேஸ் மோட்டர்கள் 1½ H.P. - 1410 R.P.M. உம் 40 H.P-1450 R.P.M.உம் உண்டு. தொடர்பு: திருமதி நா.திருநாவுக்கரசு, "அசோகா", அரசடி லேன், தாவடி வடக்கு. (36025)

2200W Sony VCD.Set 1500 kw Honda ஜெனமரட்டா திண்டுக்கல் அயர்ன் சேவ் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ராஜா 021-226 3016. (36065)

செலக் II LML மோட்டர் சைக்கிள் (NPGS தொடர் இலக்கமுடையது) நல்லநிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 123, கண்டி வீதி, (பெந்திகோஸ் சபைக்கு அருகாக) யாழ்ப்பாணம். (36066)

காணி விற்பனைக்கு

இல.11 கே.கே.எஸ். வீதி பூநாறி மரத்தடியில் 1¾ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 021-222 3790. (36083)

யாழ்ப்பாணம், அச்சுவேலி, இராசவீதி, கருங்காலிகாட்டில் (நெசவு ஆலைக்கு முன்) அமைந்துள்ள கிணற்றுப்பங்குடன் கூடிய 4 பரப்புக் காணி (வீடு கட்ட/தோட்டம் செய்ய உகந்தது) உடன் விற்பனைக்குண்டு. கூடுதலான விலை கேட்போருக்கு காணி கொடுக்கப்படும். T.P. 0112 589555 (மாலை 6 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும்) (சி-37345)

கல்வியங்காடு, பருத்தித்துறை வீதியில் நல்ல சூழலில் அமைந்த கிணற்றுடன் கூடிய வீட்டுடன் 4 பரப்புக் காணியும் 3½ குழியும் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 222 6954. (36071)

கொடிகாமத்தில் கண்டிவீதியில் இருந்து 250யார் தூரத்திலும் கச்சாய் வீதியாலும் போகக்கூடிய மின்சார வசதியும் தென்னை வரும்படியும் உள்ள 50 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: V.N. சோமசுந்தரம் இல.393/17, கோயில் வீதி, நல்லூர் T.P. 021 222 6461. (36027)

பழைய பூங்காவீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சுரேஸ் T.P. No. 3837. (36092)

வீடு விற்பனைக்கு

முடக்காடு வீதி, கரவெட்டியில் 4 அறைகள் கொண்ட வீடும், 3 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ.சிவராசா, "சிவா திருமணசேவை", கொடிகாமம் வீதி, துன்னாலை தெற்கு, கரவெட்டி.T.P.:077 6243114.(36060)

யாழ்ப்பாணம், அரசடி வீதி, கந்தர்மடத்தில் 2½ பரப்புக் காணியில் 4 அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 115/1, அரசடி வீதி (யூனிவேர்சல் ரியூட்டரி இருந்த ஒழுங்கை), கந்தர்மடம், யாழ்ப்பாணம். (35816)

வவுனியா குட்செட் வீதியில் 2 பரப்புக் காணியில் 3 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 024-222 3108. (35930)

பண்டத்தரிப்பு சந்தையிலிருந்து யாழ்.வீதியில் 200 m தொலைவில் சகல வசதிகளுமுள்ள வீட்டுடன் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: க.உதயபுத்திரன் 41/2, ஞானவைரவர் லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (36085)

இல.21/1, கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணத்தில் நான்கு அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு உடனடியாக விற்பனைக்கு/வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு எஸ்.சொலவேந்தன், இல.77, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். (36086)

பழைய வீடு விற்பனைக்கு

1200 சதுரஅடி பரப்புள்ள ஓட்டுவீடு, கதவுகள், நல்ல நிலையில் உள்ள நிலைகள், யன்னல்கள், வளைகள், கைமரங்கள் முதலியவற்றோடு விற்பனைக்குண்டு. தொடர்பு: ம.கங்காதரம், சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (35931)

வீடு, காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை வீதி, கணக்கர் சந்திக்கு அருகில் 6 பரப்புக்காணி நாற்சார் வீட்டுடனும் விதானையார் வீதி, கொழும்புத்துறையில் (பிள்ளையார் கோயில் முன்வீதி), 2 பரப்புக் காணி வீட்டுடனும் புங்கன்குளம் வீதி, சிவதொண்டன் மடத்திற்கு அருகில், 2¼ பரப்பு வெறுங் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ.சுந்தரலிங்கம், 85, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (35932)

கார்கள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Moris Minor (Cream) 1ஸ்ரீ, 9ஸ்ரீ (BlacK) ஆகிய இருகார்கள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0777 047278, 071 4941826. (36094)

வியாழ, சனி மாற்றம் உங்களுக்கு எப்படி?

வியாழ மாற்றம் 30-08-2005 வரை எல்லா இராசி பலன்கள் ரூபா 15/- புத்தபிரான் போன்றநான் யார்? தத்துவ விசாரணை கர்த்தா ஸ்ரீ ரமண பகவானின் தெய்வீக வரலாறும் அடங்கியது. நூலாசிரியர் 'சத்யா' ஆனைக்கோட்டை 021 - 222 2753 எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (36075)

வாடகைக்கு

முனீஸ்வரா வீதியில் E.N.T. கிளினிக் மேல் மாடியில் புதிதாக அமைக்கப்பட்ட 4 அறைகளும் (பல்கனியும்) வாடகைக்குண்டு. (நிறுவனங்களுக்கு உகந்தது). வாகனத் தரிப்பிட வசதியுமுண்டு. தொடர்பு: T.பொன்னம்பலம் 222 2792. (36087)

யாழ்ப்பாணம், நாவலர் வீதி 148 (178) இலக கத்திலுள்ள 5 அறைகள் கொண்ட வசதியான வீடு அரசாங்க அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அல்லது கொம்பனிகளுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: தொ.பே. இல 2555. (சி-37446)

வீடு தேவை

இளைப்பாறிய அரச அதிகாரி குடும்பத்திற்கு 3 அல்லது 4 அறைகளுடன் வீடு இவ வருடத்திற்குள் வாடகைக்குத் தேவைப்படுகின்றது. காங்கேசன்துறை வீதி, பலாலி வீதிகளை அண்மித்த பகுதிகள் விரும்பத்தக்கவை. தரகர் ஈடுபாடு விரும்பத்தகாதது. தொடர்புகளுக்கு: சண்முகநாதன் தொ.பே. 0777 570211. (35830)

மணமகள் தேவை

1972இல் பிறந்த, 2இல் செவ்வாயுள்ள, சொத்துக்கள் உள்ள கௌரவ இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த பிரபல வர்த்தகருக்கு மெல்லிய சிவந்த மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2366, மே/பா உதயன், யாழ்ப்பாணம். தொடர்பு: விளம் பர இல. 2366. (சி-37445)

மணமகன் தேவை

யாழ்.வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1964ஆம் ஆண்டு பிறந்த விசாகம் நட்சத்திரம், 2ஆம் பாதம், படித்த அழகிய மணப்பெண்ணுக்கு உத்தியோகம், சுயதொழில், வெளிநாட்டு மணமகன் தேவை. ஜாதகம் பொருந்துமிடத்து சீதனம் பற்றி தீர்மானித்துக் கொள்ளலாம். தொடர்பு: விளம்பர இல. 2361 மே/பா உதயன். (35972)

மணமக்கள் தேவை

டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், விரிவுரையாளர்கள் அரச உயர்பதவி வகிப்பவர்கள் வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்று நல்ல பணியில் உள்ளவர்கள், விவாகரத்தானவர்கள், விதவைகள் இந்து கிறிஸ்தவ அனைத்து சமுகத்தவர்களுக்கும் தகுந்த வரன் தேவைக்கு: திரு.S.K. சிவகரன் DFT, சிவாலயா சர்வதேச திருமண நிலையம், ஸ்ரீ வைகுந்த ஆச்சிரமம், 68/15 சட்டநாதர் வீதி, நல்லூர். T.P 021 - 222 7844. (36082)

கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima, Broiler விலை ரூபா 35/- மற்றும் Prima layer Brown/White குஞ்சுகள் விலை ரூபா 50/- 13.09.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறைக் கிளையிலும் Suddi farm வட்டுக்கோட்டை, சாவகச்சேரி முருகனிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (36057)

தவறிவிட்டது

03-09-2004 இல் யாழ்ப்பாணத்துக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் 077 6149813 இலக்கமுடைய கைத்தொலைபேசி தவறிவிட்டது. தயவுசெய்து எடுத்தவர் விக்னா கல்வி நிறுவனத்தில் அல்லது புனித அந்தோனியார் கல்லூரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி37445)

தேசிய கல்வியியல் கல்லூரி அனுமதிக்கான படிவம், விவரம் இங்கு கிடைக்கும்.

Computer - Type Setting வகுப்புக்கள் (காலம் - 3 மாதம்) உடனடி வேலைவாய்ப்பு சான்றிதழ் வழங்கப்படும் - விவரம் அலுவலகத்தில

திகழ் கல்வி நிறுவனம் - இணுவில்.

வீடு தேவை

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு காரியாலய உபயோகத்திற்காக உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலை வீதி அல்லது அதன் சுற்றாடலில் ஓர் வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவையாக உள்ளது. இது சம்பந்தமாகத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி : இணைப்பாளர், மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு. அறை எண். 30 யாழ்.போதனா வைத்தியசாலை.

(சி-37431) தொ.பே.இல: 222256 57

தோட்ட வேலைக்கு ஆள் தேவை

தோட்டம் ஒன்றைப் பராமரிக்க அனுபவம் உள்ள வேலையாளுடன் சமையலுக்கும் ஒருவர் தேவை. பொறுப்புகள் அற்ற சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. தங்குமிட வசதி வழங்கப்படும்.

தொடர்பு: 40, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P.: 021 - 2223790

(036056)(01)

நன்னீர்க் கிணறுகள் இறைத்துத் துப்புரவு

தற்பொழுது நிலவும் கடும் வரட்சி காரணமாக எழுவைதீவுப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள குடி தண்ணீர்த தட்டுப்பாட்டை அடுத்து கவனிப்பாரற்ற நிலையில் இருந்த இரண்டு நன்னீர்க்கிணறுகள் ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் இறைத்துத் துப்புரவு செய்யப்பட்டு பொது மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

அதேவேளை - அங்குள்ள பொதுக கிணறுகள் அனைத்திற்கும் தொற்று நோய்கள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு குளோரின் இடப்பட்டு வருவதாக ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செயலாளர் கு.கணேசலிங்கம் தெரிவித்தார். (எ-16)

மதிப்பீட்டுப் பரீட்சை

தென்மராட்சி,செப்.5 மாதிரிப் பாடசாலைகள் செயற்திட்டத்தின கீழ் தெரிவு செய்யப்பட்ட தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகளுக் கான ஓகஸ்ட் மாத மதிப்பீடு பரீட்சைகள் நாளை திங்கட்கிழமை அந்தந்தப் பாடசாலைகளில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். வலயத்தைச் சேர்ந்த கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், கைதடி முதலுக்குமாரசாமி மகா வித்தியாலயம் ஆகியவை மாதிரிப் பாடசாலைகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளன. (எ-117)

வாகனச்சாரதிக்கு 10ஆயிரம் ரூபா பிணை

தென்மராட்சி,செப்5 மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திய சாரதியை 10ஆயிரம் ரூபா பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த வியாழனன்று மாலை சாவகச்சேரி நகர்ப் பகுதியில் வீதியில் சென்றவரை மோதி விட்டு கார் ஒன்று நிறுத்தாமல் தப்பிஓடியது. அப்பகுதியில் கடமையில் நின்ற பொலீஸார் துரத்திச் சென்று காரை மறித்தனர்.

காரின் சாரதியான நாகலிங்கம் அருளம்பலம் என்பவரை நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் சாவகச்சேரிப் பொலீஸார் ஆஜர் செய்தனர். நீதிவான் இவரை மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தியதற்காக 10ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார்.

காரினால் மோதுண்டு காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பொன்னம்பலம் சுகந்தனின் வைத்திய அறிக்கை கிடைத்ததும் சாரதிமீது மற்றொரு வழக்குத் தாக்கல் செய்யப்படுமென பொலீஸார் தெரிவித்தனர். (எ-117)

மேல்மாடி வாடகைக்கு

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் இல. 629 இல் அமைந்துள்ள 1600 சதுர அடி கொண்ட விசாலமான மேல்மாடிக்கட்டடம் வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:

கு.முருகவேள்

இல.629 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(36080) (38-21-19-16)

இவர்கள் இருவரையும் காணவில்லை

பருத்தித்துறை ஓடக்கரையைச் சேர்ந்த

செல்வன் நவரட்ணம் ஸ்ரீராம்

வயது 14

செல்வன் செல்வமோகன் அகிலன்

வயது 13

ஆகிய இவர்கள் இருவரையும் 02.09.2004 வியாழக்கிழமை முதல் காணவில்லை. இவர்களைக் கண்டவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் தகவல் தரவும்.

ந.ரஜனி
ஓடக்கரை, பருத்தித்துறை.
T.P. 077 3024467 - 077 6305153

(36079)(38-21-19-16)

ST.PATRICK'S COLLEGE புதிய அனுமதி - 2005

விண்ணப்பப்படிவம், பரீட்சைக் கட்டணம் உட்பட ரூபா.300/=

எதிர்வரும் 06.09.2004இல் இருந்து ஞாயிறு, பொதுவிடுமுறை நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப.12.30 மணிவரை கல்லூரியின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 25.09.2004ஆம் திகதி பி.ப.12.30 மணிக்கு முன் கல்லூரியின் பிரதான அலுவலகத்தில் நேரில் வந்து ஒப்படைக்கவும்.

தபால்மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

முதலாம் தரத்துக்கு அனுமதிகோரும் பிள்ளைகள் 01.02.1999ஆம் திகதிக்கும் 31.01.2000ஆம் திகதிக்குமிடையில் பிறந்திருக்கவேண்டும்.

5ஆம் தரத்துக்கு அனுமதி கோரும் பிள்ளைகள் 01.02.1995இல் அல்லது அதற்குப்பின் பிறந்திருக்கவேண்டும்.

6ஆம் தரத்திற்கு அனுமதி கோரும் பிள்ளைகள் 01.02.1994 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருக்கவேண்டும்.

அனுமதிப்பரீட்சை 02.10.2004 சனிக்கிழமை மு.ப.9.00 மணிக்கு ஆரம்பமாகும். சமுகம் கொடுக்கவேண்டிய நேரம் மு.ப.8.30 மணி.

(C/37432)(42-21-19) **அதிபர்.**

நல்லதொரு வாய்ப்பு

Institute of Computer Studies
கணனிக் கல்வி நிறுவனம்

Main Street, Pandateruppu. — I.C.S — பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

Certificate Courses

Micro soft Windows
Micro soft Excel
Micro soft Power Point
Micro soft Word
Micro soft Access

சிறுவர்களுக்கான
Micro soft Kids Programme

உங்கள் கணனித் தொழில்நுட்பத்தை வளர்த்துக்கொள்ள எங்களுடன் இணைந்துகொள்ளுங்கள். (35994)(38-14-16)

பிரத்தியேக ஆங்கில வகுப்புகள் ஒழுங்கு செய்யப்படும்.

இணையத் தளம் ஊடாக 24 மணி நேரமும் உலகெங்கும் ஒலிக்கிறது

WORLD TAMILAR
உலகத் தமிழர் வானொலி

இணைய முகவரி: WWW.Wtrfm.com
அதன் ஒரு வருட பூர்த்தியைச் சிறப்பிக்க நல்லூர் திருவிழாக்கால நேரடி ஒலிபரப்பு
26 உற்சவ நாள்களிலும்
(ஓகஸ்ட் 21 முதல் செப்ரெம்பர் 16 வரை)
உலகின் எந்த மூலையிலிருந்தும் இணையத்தளம் மூலம் செவிமடுத்து மகிழலாம்).

உலகத் தமிழர் வானொலியுடன்

நேரடியாக இணைய
MSN messenger chat மூலம்: live @ wtrtm.com
தொலைபேசி மூலம்: 2673969

(சி-36863)

உலகத் தமிழர் உறவுப் பாலமாக உலகத் தமிழர் வானொலி

ஊடக அனுசரணை:- 'உதயன்'

மனம் ஏற்றுக்கொள்கிற உண்மைகளும் உடல் ஏற்றுக்கொள்கிற உணவுகளும் நீண்ட மகிழ்ச்சியான வாழ்வின் இரகசியம்

வாசகர்கள் விரும்புகின்றார்கள். அதனால், இப்படி எழுதுகிறோம் என்று கூறிக்கொண்டு சிறுவர்களினதும் இளைஞர்களினதும் உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்து அவர்களைக் குப்பைகளில் தள்ளி, வாழ்க்கையைச் சீரழிக்கக் கூடிய நூல்களை எழுதி வெளியிட்டுக் கொண்டிருக்கும் இன்றைய பல 'திறமைமிக்க' எழுத்தாளர்கள் மத்தியில் -

வாசகர்கள் விரும்புவதை எழுதவில்லை; அவர்கள் விரும்ப வேண்டியதை எழுதுவதே எழுத்தாகும். அதுவே ஓர் எழுத்தாளனுக்குச் சிறப்பு ஆகும் என்ற பற்றுறுதியுடன் சமயம் தொடர்பான பல நூல்களைத் தெல்லிப்பழையில் இருந்து ஓர் அறிஞர் எழுதி அச்சுப் பதித்துத் தொடர்ச்சியாக வெளியிட்டு வருவதாக அறிந்தேன்.

முத்தான முதியவர்களின் அனுபவங்களையும் வாழ்க்கை முறைகளையும் கேட்டறிந்து வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளும் இரண்டாவது முயற்சியாக அப்பெரியாரைச் சந்திக்கத் தெல்லிப்பழைக்குச் சென்றேன்.

தெல்லிப்பழை காசிவிநாயகர் தேவஸ்தான பிரதம குருவான சிவஸ்ரீ சிவகடாட்ச காசிலிங்கக்குருக்கள் தான். நான் சந்திக்கச் சென்ற அப்பெரியவர்.

தேவஸ்தானத்தை நான் சென்றடைந்த போது ஆலய வாசலில் நின்றிருந்த குருக்களை அடையாளம் கண்டுகொண்டேன். அவரை நெருங்கி வணக்கம் கூறி என்னை அறிமுகப்படுத்திக்கொண்டு நான் சென்றதன் நோக்கத்தைத் தெரிவித்தேன்.

ஆலயப் பின்புற மண்டபத்துக்கு என்னை மகிழ்ச்சியோடு அழைத்துச்சென்று உட்கார வைத்த அப்பெரியாருடன் உரையாட ஆரம்பித்தேன்.

சிவாசாரியார்களுக்கே உரித்தான தோற்றத்தில் கோல உடையில் காணப்பட்ட அப்பெரியாரின் முதுகு சற்று வளைந்து கூனல் தோற்றத்தில் காணப்பட்டது. இருப்பினும், அவரது உரையாடல்களிலும், நடையுடை பாவனைகளிலும் எந்தவொரு கூனலும் இல்லாதிருந்தமை என்னை ஆச்சரியப்படவைத்தது.

அவரிடம் கேட்டறிந்தவற்றை 'சூரியகாந்தி' வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறோம்.

❒ கேள்வி:- வணக்கம் ஐயா! பெரியவரே, உங்கள் வாழ்க்கை பற்றி சிறிது கூறுங்கள்....?

❍ பதில்:- எனது தந்தையார் சிவஸ்ரீ மு. சிவகடாட்சக் குருக்கள். எனது தாயார் செல்லம்மா. எனக்கு வயது இப்போது எண்பது. ஆரம்பக் கல்வியின் பின் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் எனது உயர்கல்வியைப்

பெற்றுக்கொண்டேன். அதன்மேல் பாலபண்டிதர், பண்டிதர் பரீட்சைகள் எழுதி சித்தியடைந்தேன். ஆசிரியராகும் வாய்ப்பும் வசதியும் விருப்பமும் எனக்கு இருந்தன. எனது தந்தையார் என்னை ஆசிரியப் பணிக்கு அனுப்ப விரும்பவில்லை. எமது குலப்பணியாகிய சிவாசாரியப் பணியையே மேற்கொள்ளுமாறு தெரிவித்தார். தந்தை சொல்மிக்க மந்திரமில்லை, தந்தையின் சொல்லை மீறி நடக்கத் தெரியாத பண்பால், நான் விரும்பிய ஆசிரியத் தொழிலை மறந்து சிவாசாரியத் தொழிலை மேற்கொண்டேன். நயினைக் குருமணி சிவஸ்ரீ ஐ.கைலாசநாதக் குருக்கள் எனது தீட்சா குருவாக அமைந்து, எனக்கு ஆச்சாரியாபிஷேகம் செய்து வைத்தார். அதன்பின் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஆலயத்தின் நித்திய, நைமித்திய பூசைகளையும் அருகே உள்ள வைரவர் ஆலயப் பூசைகளையும் நானே செய்து வருகிறேன்.

❒ கேள்வி:- நீங்கள் தொடர்ச்சியாகச் சில நூலகளை எழுதி வெளியிட்டு வருவதாக அறிகிறேன். அவை என்னென்ன வகையான நூல்கள் எனக் கூறமுடியுமா?

❍ பதில்:- சிறுவர்களின் மொழி ஆற்றலை வளர்த்தல், கலை ஆர்வத்தைத் தூண்டுதல், பொது அறிவை வளர்த்தல், செயற்றிறனை வளர்த்தல், அவர்களுக்குச் சமய உணர்வுகளை ஊட்டுதல் போன்ற இன்னோரன்ன வழிகளில் சிறுவர் இலக்கியம் அமைத்தலே ஆரோக்கிமானதாகும். அந்தவகையில் சிறுவர் இலக்கியங்களைச் சிறுவர்கள் தாங்களாவே படித்து விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் சமய நூல்களை எழுத வேண்டுமென விரும்பி

முத்தான முத்தவர்கள் - 3

அவற்றை எழுதிவெளியிட்டு வருகிறேன்.

❒ கேள்வி:- இத்தகைய நூல்களை எழுதி வெளியிடவேண்டும் என்ற உணர்வு எப்படி ஏற்பட்டது?

❍ பதில்:- சைவப்பிள்ளைகள் தமது இளம் வயதில் புராணக்கதைகளைச் சிறிய அளவிலாவது அறிந்திருக்கவேண்டும். அப்படி அறிந்திருந்தால்தான் அவர்கள் பெரியவர்களாக வரும்போது மேலும் புராண, இதிகாச நூல்களைக் கற்கமுடியும். சமய நூல்களைச் சிறுவர்கள் கற்பதன்மூலம் அவர்களிடையே இறைபக்தி, சமய நம்பிக்கை என்பன மேலோங்கும். இளவயதில் சமய அறிவைப் பெருக்கிக கொண்டால் அவர்களது வாழ்க்கையும் நல்லதாக அமையும்.

நாவலர் வகுத்தவழியில் நின்று, சைவத்தை வளர்க்கும் பணியில் என்னை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பினேன். அதனால் ஔவையாரின் ஆத்திசூடி முதல் நாவலரின் ,சைவ வினாவிடை, பாலபாடம் மற்றும் பல சமய அறிவை வளர்த்துக்கொள்ளக்கூடிய புராணக் கதைகள், திருமுறை வரலாறுகள் போன்ற நூல்களை இலகுநடையில் எவரும் வாசித்துப் புரிந்துகொள்ளக்கூடியதாக எழுதிவெளியிட வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. காலத்துக்குக் காலம் பல நூல்களை எழுதி வெளியிட்டுவருகிறேன்.

வளரும் இளம் தலைமுறையினரின் சமய, பண்பாட்டு அறிவு வளர்ச்சிக்கென பல சமய நூல்களை எழுதியும் பதிப்பித்தும் வருகிறேன். எனது பணிகளுக்குத் தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபை ஊக்கம்தந்து நூல்களை வெளியிடும் பணியையும் செய்துவருகிறது.

❒ கேள்வி:- பாலர் ஞானோதய சபையின் செயற்பாடுகள் பற்றி விளக்கிக் கூறமுடியுமா?

❍ பதில்:- 58 ஆண்டுகளுக்கு முன் தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலயத்தில் அரும் பணியாற்றி சிவாசாரியத் தொண்டாற்றி வந்தவர் எனது தந்தையாரான அமரர் சிவஸ்ரீ மு. சிவகடாட்சக்குருக்கள். அவரது இதயக் கமலத்தில் தோன்றியதே இந்த பாலர் ஞானோதய சபை. இவரது அயராத முயற்சியாலும்

சந்திப்பு: நிறைமுனைவன்

ஆலயச் சூழலில் வாழ்ந்த மக்களின் ஆதரவாலும் 1946ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சபை பல வழிகளில் வளர்ச்சிகண்டுள்ளதுடன், இங்கு பயின்ற பலர் இன்று சமய அறிவு கைவரப் பெற்ற அறிஞர்களாகத் திகழ்கின்றனர். எனது தந்தையாரின் மறைவுக்குப் பின் நானே இச்சபையின் தலைவராக இருந்து நிர்வாகச் சபையினரின் ஒத்துழைப்புடன் சிறப்புற நடத்தி வருகிறேன்.

சுமார் 150 ஆண்டு வரலாற்றுச் சிறப்புக் கொண்ட காசி விநாயகர் ஆலயத்தைச் சுற்றி வாழும் மக்களின் சமய வாழ்வு வளம்பெற தேவஸ்தானத்தின் அனுசரணையோடு பாலர் ஞானோதய சபை செயற்பட்டு வருகின்றது. மாணவர்களுக்குச் சமய பாட வகுப்புக்களையும் நுண்கலை தொடர்பான பயிற்சிகளையும் இலவசமாக வழங்கிவருகின்றது.

சமயம், சங்கீதம், நடனம், வயலின் ஆகிய துறைசார் வகுப்புகள் நடைபெறுகின்றன. சென்ற வருடம் இச்சபையின் 57ஆவது நிறைவு விழா சிறப்பாக நடைபெற்றது. எனது சமய நூல்களை அவ்வப்போது இச்சபையே வெளியிட்டுவருகிறது.

❍ கேள்வி:- இதுவரை எத்தனை நூல்களை வெளியிட்டுள்ளீர்கள்?

❒ பதில்:- மாணவர்கள் சமயத்தைப் பற்றி அறிந்துகொள்ளவேண்டும்; சமய தத்துவங்களை அறிந்து அதன்படி ஒழுகவேண்டும் என்ற விருப்பத்தில் சமய நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டு வருகிறேன். பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், விநாயக புராணம், திருத்தொண்டர் புராணம், திருவாதவூரடிகள் புராணம் போன்ற புராண வகை நூல்களையும் சிறுவர்களுக்கேற்ற மூதுரை, நல்வழி, திருத்தொண்டர் வினாவிடை போன்ற 46 வரையான நூல்களை இதுவரை வெளியிட்டுள்ளேன். 47ஆவது நூல் தற்போது அச்சாகிக் கொண்டிருக்கிறது. 48ஆவது நூலும் ஆயத்தமாகி வருகிறது. 50 புத்தகங்கள் வரை வெளியிடலாம் என எண்ணியுள்ளேன்.

அத்துடன், 'ஞானோதயம்' என்றொரு சஞ்சிகையையும் மாதந்தோறும் வெளியிட்டு வருகிறோம். ஒவ்வொரு பௌர்ணமி தினத்தில் அன்றும் இந்நூல் வெளியிடப்படுகிறது. கடந்த ஒரு வருடகாலமாக இந்நூலை வெளியிட்டு வருகிறோம். மாணவர்களுக்கேற்ற சமயக் கட்டுரைகள், சமய விளக்கங்கள் இச்சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன.

❒ கேள்வி:- உங்களின் இச்செயற்பாட்டுக்கு மக்களின் ஆதரவு எந்தளவுக்குக் கிடைக்கிறது?

❍ பதில்:- எனது நூல்களைப் பாலர் ஞானோதய சபையினர் மிகக் குறைந்த விலையில் வெளியிடுகின்றனர். மிகவும் விலை கூடிய பல நூல்களை எளிய தமிழில் இலகு நடைமுறையில் எழுதி மலிவு விலையில் வழங்குவதால் மக்களின் ஆதரவு நிறையவே கிடைக்கிறது. அச்சிடப்படும் நூல்கள் எவையும் இருப்பில் மிஞ்சுவதில்லை.

❒ கேள்வி:- உங்கள் வாழ்க்கையில் உங்களை மகிழ வைத்த அல்லது மறக்க முடியாத சம்பவங்கள் ஏதும் நிகழ்ந்ததுண்டா?

❍ பதில்:- வித்துவான் கணேசையரிடம் நான கல்வி கற்றவன். கணேசையரும் மிக ஆர்வத்துடன் எனக்குக் கற்பித்தவர். எனது திறமையை அறிந்து, 'எதிர்காலத்தில் நீ நல்ல அறிவாளியாக இருப்பீர்' என என்னை ஆசீர்வதித்தார். அவரின் அந்த ஆசீர்வாதமே என்னை இன்று இந்தநிலைக்குக் கொண்டுவந்துள்ளது. இதனை என்னால் மறக்கமுடியாது.

எனது திறமையைப் பாராட்டி இந்துக் கலாசார விவகார அலுவல்கள் அமைச்சு எனக்கு விருதும் பணப்பரிசும் வழங்கியுள்ளது. இது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

❍ கேள்வி:- உங்கள் வாழ்க்கை அனுபவத்தை வைத்து இளம் தலைமுறையினருக்கு என்ன புத்திமதி கூறப்போகிறீர்கள்?

❒ பதில்:- வாழ்க்கை வசதிகளை அதிகமாகப் பெருக்கிக்கொள்ளக்கூடாது. சிறிய அளவில் அவற்றை வைத்துக்கொண்டால் என்றும் மகிழ்ச்சியாக இருக்கலாம். மனம் ஏற்றுக்கொள்ளக்கூடிய சமய உண்மைக் கருத்துக்களையும் உடல் ஏற்றுக்கொள்ளக்கூடியதான உணவு வகைகளையும் கைக்கொள்ளப் பழகிக்கொண்டால் நீண்டகாலம் வாழமுடியும்.

தெய்வ நம்பிக்கைதான் எமக்கு மிக முக்கியமானது. அதுவே எமது பலமாகவும் அமைகிறது. விநாயகரை வேண்டிக்கொண்டு எந்தக் கருமத்தை மேற்கொண்டாலும் அவற்றில் சித்தி நிச்சயம்.

✷

மொத்தம் ஐம்பது நூல்களையாவது எழுதி வெளியிடும் துடிப்புடன் இவர்

மாணவர்கள் சமயத்தைப் பற்றி அறிந்துகொள்ளவேண்டும். சமயத் தத்துவங்களை அறிந்து அதன்படி ஒழுகவேண்டும் என்ற விருப்பத்தில் பல சமய நூல்களை எழுதி வெளியிட்டு வருகிறேன்....

இதுவரை 46 வரையான நூல்களை வெளியிட்டுள்ளேன். 50 நூல்கள் வரையும் தொடரவேண்டும் என்று விரும்புகிறேன்....

மிகவும் விலை அதிகமான நூல்களை எளிய தமிழில் - இலகு நடையில் - எழுதி மலிவு விலையில் வெளியிடுவதால் மக்களின் ஆதரவு கிடைக்கிறது. அச்சிடப்படும் நூல்கள் எவையும் இருப்பில் மிஞ்சுவதில்லை என்றார். இந்த வாரம் முத்தான முத்தவர்கள் வரிசையில் இடம்பெறும் எண்பது வயதான குருக்கள்.

இலங்கைப் பங்குச்சந்தையின் கிளை அடுத்த மாதம் முதல் யாழ்ப்பாணத்தில்

இலங்கைப் பங்குச் சந்தையானது உலகின் சிறந்த தொழிற்பாட்டையுடைய பங்குச் சந்தைகளுள் ஒன்றாகத் திகழ்வதோடு ஆசியாவின் மிகச் சிறந்த பங்குச் சந்தையாகவும் திகழ்ந்து வருகிறது.

பங்குச் சந்தை நடவடிக்கைகள் உலகில் முதன் முதலாக 1790ஆம் ஆண்டு பிலடெல்பியாகலும் (Philladelphia) 1896ஆம் ஆண்டு இலங்கையிலும் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப காலகட்டத்திலே இவை பங்குத்தரகர் ஒன்றியத்தினால் (Share Brokers Association) நடத்தப்பட்டு வந்தன. பின்னர் 1985ஆம் ஆண்டு கொழும்பு பிணைகள் பரிவர்த்தனை (Colombo Securities Exchange - GTE) உருவாக்கப்பட்டு அதன்கீழ் பங்குச் சந்தை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1990 ஆம் ஆண்டு கொழும்புப் பிணைகள் பரிவர்த்தனை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை (Colombo Stock Exchange) எனப் பெயர் மாற்றம் பெற்றது.

கொழும்புப் பங்குச் சந்தையானது தற்சமயம் பங்குச்சந்தை பற்றிய விழிப்புணர்வை நாடளாவிய ரீதியில் ஏற்படுத்தி வருவது மட்டுமன்றி அனைத்து மக்களும் பங்குச்சந்தையில் நேரடியாக முதலிடக்கூடியவகையில் கிளைத் திறப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. அந்தவகையில், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணத்திலும், வருட இறுதியில் குருநாகலிலும் கிளைகள் திறக்கப்படும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் கிளைகள் தற்சமயம் மாத்தறையிலும், கண்டியிலும் இயங்கிவருகின்றன.

கடந்த ஜூலை மாதம் கொழும்பு பங்கு பரிவர்த்தனையானது பங்குச் சந்தையில் முதலிடுதல் மற்றும் அரச திறைசேரி உண்டியல் முதலிடுதல் தொடர்பான கருத்தரங்கினை யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்திலும் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவப் பீடத்திலும் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. அதன் தொடர்ச்சியாக இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கரவெட்டிப் பிரதேச சபைக் கேட்போர் கூடத்தில் இலவசக் கருத்தரங்கு ஒன்று இடம்பெறும். இதில், பங்குச்சந்தையில் முதலிடுதல், பங்குத்தரகரின் பங்களிப்பு மற்றும் அரச திறைசேரி உண்டியல் முறிகளில் முதலிடுதல் தொடர்பான விடயங்கள் விவரிக்கப்படும்.

அதுமட்டுமன்றி, நல்லைக்கந்தன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு பங்குச்சந்தை தகவல் கொட்டகையொன்று கடந்த 6ஆம் திகதி முதல் எதிர்வரும் 15ஆம் திகதி வரை இல. 252, (பொஸ்கோ) பருத்தித்துறை வீதி, நல்லூர் என்ற முகவரியில் செயற்படவுள்ளது. இதில் ஆஷா.'.பிலிப் பங்குத்தரக நிறுவனம், பாட்லீட் மலோறி பங்குத் தரக நிறுவனம், கப்பிற்றல் எலயன்ஸ் ஹோல்டிங்ஸ், எச்.என்.பி.பங்குத்தரக நிறுவனம் மற்றும் லங்கா செக்யூரிடீஸ் போன்றன கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் அனுசரணையுடன் நேரடி சேவைகளை வழங்கவுள்ளன.

Thusha Opticians & Dental Works

துஷா பல், மூக்குக் கண்ணாடியகம்

544, Hospital Road, Jaffna.
☎ 021 222 3461
0777 150032.

சீனமுறையில் சங்குப் பற்களைச் சிறந்தமுறையில் கட்டிட, மிதப்புப் பற்களுக்கு "கிளிப்" செய்து மிகவிரைவில் சீர்செய்துகொள்ள மிக நவீன முறையிலான பிறேம்களில் மூக்குக் கண்ணாடி, சண்கிளாஸ் வகைகளை மிகவிரைவில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்!

துஷா பல், மூக்குக் கண்ணாடியகம்

(26-19)
(சி-37391)

வலி. தெற்கு அகதிமுகாம்களில் குழாய்க்கிணறு நிறுவும் பணிகள்

குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன், சி.எச்.எப். (CHF) நிறுவனம் வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நலன்புரி முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு குழாய்க் கிணறுகளை அமைத்து உதவி வருகின்றனர்.

கந்தரோடை இக்கிரானை முகாம், சுன்னாகம் ஸ்ரேசன் முகாம், சுன்னாகம் பிள்ளையார் முகாம், சுன்னாகம் கண்ணகி குடியிருப்பு முகாம் ஆகிய இடங்களிலேயே இவ்வாறு குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், சி.எச்.எவ். நிறுவனம், உடுவில் கிழக்கு சபாபதிப்பிள்ளை முகாமில் தங்கி வாழும் சகல குடும்பங்களுக்கும் அரை நிரந்தர வீடுகளையும் அமைத்துக்கொடுத்து வருகின்றது. ஒவ்வொன்றும் சுமார் 75 ஆயிரம் ரூபா செலவிலான 64 வீடுகள் ஏற்கனவே நிறுவனத்தால் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன. ஏனைய குடும்பங்களுக்கான அரை நிரந்தர வீடுகள் அமைக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.(எ-152)

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் அறிவித்தல்

கூறுவிலை கோரல்

01. சங்கத்தில் பாவனையற்று இருக்கும் மின் நெசவு தறிகள் (32) விற்பனைக்கு உள்ளன.
02. பாவித்த கைத்தறிகள் விற்பனைக்கு உள்ளன.
03. மின் பிறப்பாக்கி (றொயின், 3கே.வி) விற்பனைக்கு உள்ளது.

பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் பார்வையிட்டு இதற்கான கூறுவிலையை 21-09-2004 இற்கு முன்னர் *"பொதுமுகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு"* என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்,
பண்டத்தரிப்பு

(சி-37410) (26-19)

அரனடி சேர்ந்து ஆண்டொன்று ஆனதம்மா!

அன்னை மடியில் 22 - 04 - 1927

அரன் அடியில் 20 - 08 - 2003

திருமதி பேரம்பலம் பாக்கியலட்சுமி

திதி: அபரபக்க ஸப்தமி (05-09-2004)

அம்மையே! பாக்கியலட்சுமி பேரம்பலம் என்னும்
அன்பு நிறை பண்புமிகு அன்புத் தாயே!
எம்மைவிட்டு நீர்பிரிந்து சென்றபோதும்
எம் உள்ளம் உனையென்றும் மறவாதம்மா
இம்மண்ணில் எழுபத்தாறாண்டு வாழ்ந்து
இறையடி (சென்று) நீர் இன்பம் கண்டீர்!
உம்பிள்ளைகள் அனைவருமே உலகமெல்லாம்
உம் நினைவை நிதம் தாங்கி வாழுகின்றோம்
செம்மை சேர் பேரப்பிள்ளை யெல்லாம்
சிரம்தாழ்த்தி உமை நினைந்து போற்றுகின்றார்
இம்மண்ணை விட்டகன்று நீர் சென்றபோதும்
இறைவனடி உமது வீடாகிற்றன்றோ!
நம்மன்னை நம்மாமி நம் பாட்டியென்று
நயமுடனே நின் நாமம் நினைந்து வாழ்வோம்!
அம்மையே நீர் ஆசிரியை ஆகி நின்று
ஆற்றிய நற்சேவைக்கு ஈடுமுண்டோ?

வைரேம்பலம்,
தலையாழி,
கொக்குவில்.

என்றும் தங்கள் நினைவில் வாழும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(36046) (26-19)

தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள மருந்தகத்தில் பணிபுரிவதற்கு அனுபவமுள்ள ஊழியர்கள் தேவை.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
இளவரசன் மருந்தகம்
462D, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(35813)

மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடாவில் நிரந்தர பிரஜாவுரிமையுடைய, நற்குணமும், நற்பண்புமுடைய, 1968ஆம் ஆண்டு பிறந்த, கணனிப் பொறியியலாளருக்கு (I.B.M) (விவாகரத்துப் பெற்றவர்) 30வயதுக்குள் அழகான (குறைந்தது A/Lகணக்கியல்) படித்த மணமகள் தேவை.
தொடர்பு: 27/11, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தாமடம். T.P.021-222 5131.

15.09.2004 ஆம் திகதிக்குப்பின்
21,A.V.HENRI BARBUSSE
93120 LACOURNUVE, FRANCE.
T.P.: 0033148351321.

(35940)

சிங்கப்பூரில் திருமண சேவை

சிங்கப்பூரில் திருமணஞ்செய்ய வருவோருக்கும், விடுமுறையைக் கழிக்க வருவோருக்கும் சகல வசதிகளும்கொண்ட வீடும் மற்றும் திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த செலவில் திருப்திகரமாகச் செய்துதருவோம். மேலும் எங்கள் இடம் "குட்டி இந்தியா" என்று அழைக்கப்படும் இடத்தில் இருப்பதால் வேண்டிய பொருள்களை நடந்து சென்றும் வாங்கலாம். மேலும் விவரமறிய எந்தநேரத்திலும் தொடர்பு கொள்ள வசதியாக கைத்தொலைபேசி எண்: 0065 9751 4941, தொலைநகல்: 0065 6481 6144

சிங்கப்பூரில் சுற்றுலா அனுமதி கிடைப்பது சிலசமயங்களில் கஷ்டம். அதனால் 3 கிழமைக்கு முதலில் எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

LINGAM WEDDING SERVICES
10, Anson Road, # 15-14, International Plaza, Singapore 079903.

(26-13-19-24) (26954)

யாழ்.மக்களே!

உங்கள் பற்களின் முரசு கரைகிறதா? கவலையை விடுங்கள்!
இதோ இருக்கின்றது

மூலிகை மெடிமிக்ஸ் பல்மருந்து

✪ பல் ஈறு கரைதல் ✪ பற் கூச்சம்
✪ பல் ஈற்றிலிருந்து இரத்தம் வருதல்
✪ வாய் நாற்றம் ✪ பல் அசைந்து வலி
✪ பற்களில் சீழ் வந்து இரத்தம் வடிந்து

விலை 20/-

"பயோரியா" நோய் (குந்தவாய்வு) முதலான வியாதிகளைக் குறுகிய காலத்தில் முற்றாகக் குணமாக்கும் தன்மையுடையது.
☞ இந்த வியாதிகள் வராமல் தடுக்க சிறந்த ஔடதம்.
ஆகவே, தொடர்ந்து பாவித்து வாருங்கள்.
சகல ஆயுர்வேத ஆங்கில மருந்தகங்களிலும் கிடைக்கும்.
விநியோகஸ்தர்:

வனிக்கா மெடிக்கல்
85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
☎ 21 222 2445
21 222 6291

பூச்சிப் பற்கள் உள்ளவர்களும், பூச்சிப்பற்கள் வராமல் தடுக்க விரும்புபவர்களும் உபயோகிக்கலாம்.

(சி-37421) (26-19)

35ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 10 - 05 - 1920

மறைவு 02 - 08 - 2004

அமரர் சின்னையா சிதம்பரப்பிள்ளை

ஆயிரம் பிறைகண்ட உத்தமன் நீ
சைவ நெறி தவறாச் சான்றோனே
எமக்கு வேண்டுவன வெல்லாந் தந்து
கல்வி, ஞானம், கற்றோர் சேர்க்கை
இவற்றுடன் நல்வாழ்வுந் தந்த
அப்பா, அம்மப்பா, அப்பப்பா
நீ எந்நாளும் இறைவன் நிழலில்
இன்புற்று வாழப் பிரார்த்திக்கிறோம்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

பிள்ளைகள்,
மருமக்கள், பேரர்மார்.

(36053) (26-19)

பொதுமக்களின் கவனத்திற்கு.... பகிரங்க அறிவித்தல்

காரைநகர் சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீசிதம்பரேஸ்வரர் தேவஸ்தான ஆதீனகர்த்தாக்கள்

பொதுமக்களுக்கு விடுக்கும் பகிரங்க அறிவித்தல்

மேற்படி ஆலயத்தின் தேர்த்திருவிழா உபயகாரர்கள் பொதுமக்களிடம் தேர்த்திருப்பணிக்கு நிதி சேர்த்து வருகின்றார்கள் என்று அறியவந்துள்ளது. ஆலய ஆதீனகர்த்தாக்கள் ஆகிய நாம் தேர்த்திருவிழா உபயகாரர்கள் தேர்த்திருப்பணிக்கு என்று பொதுமக்களிடம் நிதி சேகரிப்பதற்கு எத்தகைய அனுமதியையும் வழங்கவில்லை என்பதைப் பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.

மேலும் மேற்படி தேவஸ்தானத்தின் பெயரை உபயோகித்து எவருக்கும் எத்தகைய நிதியையும் சேகரிப்பதற்கு ஆலயத்தின் ஆதீனகர்த்தாக்கள் ஆகிய நாம் அனுமதி எதுவும் வழங்கவில்லையென்றும் அவ்வாறு நிதிகோரி வருபவர்களுக்கு எவ்வித நிதியையும் வழங்கவேண்டாம் என்றும் பொதுமக்களை அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

மேற்கூறப்பட்ட வேண்டுகோளினை மீறி நிதி சேகரிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் இத்தால் எச்சரிக்கை விடப்படுகின்றது.

மேலும் மேற்படி தேவஸ்தானத்தின் திருப்பணி வேலைகள் தொடங்க இருப்பதால் திருப்பணிகளுக்காக அன்பளிப்புச் செய்யும் அம்பிகை அடியார்கள் குறித்த ஆலயத்தின் வங்கிக் கணக்கிற்கோ அல்லது எம்மால் நியமிக்கப்பட்ட ஆலய தர்மகர்த்தா பரிபாலன சபையினரிடமோ நேரடியாகவோ அன்பளிப்புத் தொகைகளை அனுப்பிவைக்கலாம் என்றும் இத்தால் அறியத்தருகின்றோம்.

ஆலயத்தின் வங்கிக் கணக்கின் விவரம்:

வங்கி: **இலங்கை வங்கியின் காரைநகர் கிளை, காரைநகர்.**
வங்கிக் கணக்கின் பெயர்: **சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தான பரிபாலன சபை**
கணக்கு இலக்கம்: **846**

மேற்படி தேவஸ்தானத்தின் பெயரை உபயோகித்து திருவிழா உபயகாரர்களோ அல்லது ஏனையோரோ எவ்வித திருப்பணிக்கும் எமது பூரண அனுமதியின்றி நிதி சேர்க்கமுடியாது என்பதைப் பகிரங்க அறிவித்தல் மூலம் மீண்டும் வலியுறுத்துகின்றோம். இதனை மீறிச் செயற்படுபவர்களுக்கு தேவஸ்தான அடியார்களாகிய நீங்கள் அவர்களை ஊக்குவிக்காது விழிப்புடன் செயற்பட வேண்டுமென்று பணிவுடன் வேண்டுகின்றோம்.

சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தானம்,
பண்டத்தரிப்பான்புலம்,
காரைநகர்.

ஆதீனகர்த்தாக்கள்
சிவஞானம் - சிவபாலன்,
சிவஞானம் - சிவநேசன்.

(35962) (26-19)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 - 04 - 1920

உதிர்வு 17 - 09 - 2003

அமரர் வல்லிபுரம் நாகமணி

மனிதப்பிறவி எடுத்து மாணிக்கமாய்த் திகழ்ந்தீர்
புனிதப் பணி செய்து நல்ல புகழுடன் திகழ்ந்தீர்
எந்நாளும் உம்மை நினைத்தே இப்பூவுலகில்
நாம் வாழ்கின்றோம் ஆத்மசாந்தி வேண்டி.

இன்று (05-09-2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(36022) (26-19)

விடுதலைப் புலிகள் யுத்தவெறியர்கள் அல்லர் சிங்கள மக்களுக்கு இதைப் புரியவைப்போம்

கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சிக்கு வருகைதந்த மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெரியசாமி சந்திரசேகரன் உதயனுக்கு வழங்கிய விசேட செவ்வி இது.

நல்லதைச் செய்தால் அரசுக்கு ஆதரவுவழங்க முன்வருவோம்

● கே.: அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீளப் பேச்சுக்களை ஆரம்பிக்க தெற்கில் மாற்றங்கள் ஏதும் தென்படுகின்றனவா?

■ ப.: பேச்சைப் பொறுத்தவரையில் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்த தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றார்கள். பேச்சுக்கள் இடைநியுத்தப்பட்டிருக்கின்றன என்றால் - முறுகல் நிலையை அடைந்திருக்கின்றன என்றால் - அதற்கு பேச்சில் ஈடுபடும் அரசுதான் காரணமே தவிர, தமிழீழ விடுதலைப் புலிகள் காரணம் அல்ல என்பதைத் தெளிவுபடுத்த விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தயாராக இருக்கின்றார். சிங்கள மக்கள் மத்தியில் இதைத் தெளிவுபடுத்தவேண்டும் என்று அவரிடம் நான் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளேன்.

புலிகளை வெறுமனே துப்பாக்கி ஏந்திப் போராடும் வெறியர்களாகச் சாதாரண சிங்கள மக்கள் நினைக்கக்கூடாது. ஆகவே, சிங்களப் பாமர மக்களுக்குத் தெளிவு படுத்தப்படவேண்டியதன் அவசியத்தை அவரிடம் எடுத்துக் கூறினேன்.

இந்த வேண்டுகோளை தமிழ்ச்செல்வன் ஏற்றுக்கொண்டார். சிங்கள மக்களுக்குத் தமது நிலைப்பாட்டைப் புரியவைக்க ஏற்பாடு செய்ய விருப்பதாக அவர் கூறினார்.

எம்மைப் பொறுத்தவரையில் இனப் பிரச்சினைக்கு விரைவான தீர்வு காணப்படவேண்டும். கடந்த 50 வருட கால வரலாற்றிலே திருப்பம் ஒன்று ஏற்படவேண்டும். இதில் அக்கறைகாட்டுவதாகத் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

● கே.: தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து வேலைத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளார்கள். தமிழ்த் தேசியத்தின் நிலைப்பாட்டையும் விடுதலைப் புலிகளின் - தமிழ் மக்களின் - நிலைப்பாட்டையும் விளக்கும் வகையில் இந்த வேலைத் திட்டம் செயற்படுத்தப்படவிருக்கின்றது. இத்திட்டத்தில் மலையக மக்கள் முன்னணியும் இணைந்துகொள்ளுமா?

■ ப.: மீண்டும் பேச்சுக்களை நடத்துவதற்கான அழுத்தத்தைக் கொடுக்கும் விடயத்தில் மலையக மக்கள் முன்னணி அக்கறை காட்டிதான் வருகின்றது. தமிழ்க் கூட்டமைப்பு சில முயற்சிகளில் ஈடுபட்டால் அவர்களுக்கும் ஒத்துழைப்புக் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம்.

● கே.: மலையகத்தில் ஜே.வி.பி. ஊடுருவிப் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளது. மலையகத் தொழிலாளர்களுக்குச் சம்பள அதிகரிப்பு வழங்குவதாக உறுதி கூறுகிறார்கள். அது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

■ ப.: ஜே.வி.பியைப் பொறுத்தவரையில், நீண்டகால வரலாற்றைக் கொண்ட அரசில் கட்சி, எந்தக் காலகட்டத்திலும் மலையக மக்களுக்காக அவர்கள் பேசியது கிடையாது. "இந்திய வம்சாவழி மக்கள் எப்படியாவது இந்த நாட்டை விட்டு அப்புறப்படுத்தப்பட வேண்டிய மக்கள். நாடு கடத்தப்படவேண்டியவர்கள், இந்த நாட்டைச் சுரண்டி வாழ்பவர்கள் என்று பிரசாரம் செய்து கொண்டிருந்தவர்கள் தான் ஜே.வி.பியினர். இதுவரை அப்படித்தான் அவர்கள் இருக்கிறார்கள்.

மலையக மக்களின் சம்பள உயர்வுக்காக ஆதரவு தருவதாக இப்போது சொல்லியிருக்கிறார்கள். அப்படி உண்மையாகவே, உளப்பூர்வமாகவே செயற்பட்டால் அதனை ஆதரிப்பதற்குத் தயாராக இருக்கின்றேன்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை நிராகரிக்கின்றவர்கள் இந்திய வம்சாவழி மக்களுக்கு எதிரான அரசியல் கொள்கையைப் பாடமாகவே கட்சியில் முன்வைத்தவர்கள். இன்றுபேசும் பேச்சு உண்மையானதுதானா என்று காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

● கே.: தொண்டமான் அரசுடன் இணைந்தது குறித்துத் தங்கள் அபிப்பிராயம் என்ன?

■ ப.: அதுபற்றி அபிப்பிராயம் சொல்லமுடியாது. தெளிவாகக் கூறமுடியாது.

● கே.: அரசுடன் இணையும் நோக்கம் உங்களுக்கு உண்டா?

■ ப.: எம்மைப்பொறுத்தவரையில் அரசாக இருக்கட்டும் எதிர்கட்சியாக இருக்கட்டும் எங்களுக்கு நல்லதைச் செய்பவர்களுக்கு ஆதரவு கொடுப்போம். ஏனையோருக்கு எதிராகச் செயற்படுவோம் இதுதான் எமது கொள்கை.

அரசில் இணையவேண்டும், அமைச்சுப்பதவி பெறவேண்டும் என்ற நிலையில் எங்கள் அரசியல் கொள்கையைத் தீர்மானித்துக் கொள்பவர்கள் நாங்கள் அல்லர்.

செவ்வி: குகா

தனியாகப் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு வெற்றி பெற்றிருக்கின்றோம். ஆகவே, எம்மைப் பொறுத்தவரையில் ஆளும் கட்சியோ எதிர்க்கட்சியோ நல்லது செய்கின்ற நேரத்தில் ஆதரவு கொடுப்போம். தமிழ் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகுமாக இருந்தால் எமது தெளிவான அரசியல் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவோம்.

● கே.: இடைக்கால நிர்வாகசபை அடிப்படையில் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்க வேண்டும் என்று அரசுக்குத் தாங்கள் அழுத்தம் கொடுத்து, அந்த அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுமானால் அரசுக்கு ஆதரவு வழங்குவீர்களா?

■ பதில்: நிச்சயமாக மீண்டும் ஒரு பேச்சு ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதுதான் எனது விருப்பமும் எமது மக்கள் முன்னணியின் விரும்பமுமாகும். தமிழீழ விடுதலைப் புலிகளும் அதற்கு எதிரான கருத்தைக் கொண்டவர்களாக இல்லை. அவர்கள் யுத்தவெறியர்கள் அல்லர்.

ஆனால், ஏமாறமாட்டோம். 20 வருடகால யுத்தத்தை அர்த்தமற்றதாக்கிவிடமாட்டோம். லட்சக்கணக்கான இளைஞர்களின் உயிரிழப்புக்களை நாங்கள் கொச்சைப்படுத்தி விடமாட்டோம். இதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். ✲

புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையிலேயே பேச்சு ஆரம்பிக்கப்படவேண்டும்

இ.தொ.க. தலைவர் தொண்டமான் தகவல்

"விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக ஆலோசனையின் அடிப்படையிலேயே பேச்சு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதுதான் எங்கள் நிலைப்பாடு" என்று இ.தொ.காவின் தலைவர் எஸ்.ஏ.தொண்டமான் உறுதிபடத் தெரிவித்தார்.

அரசுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக அவர் நேற்றுமுன்தினம் கூட்டிய செய்தியாளர் மாநாட்டிலேயே இப்படிக் கூறினார்.

இந்த மாநாட்டில் தெரிவித்த விடயங்களின் ஒருபகுதி நேற்றைய பதிப்பில் வெளியாகியிருந்தது. எஞ்சிய பகுதி வருமாறு:-

● கே.: எந்த வகையில் ஆதரவு வழங்கப் போகின்றீர்கள்?

■ ப.: நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கும் எல்லாவிடயங்களுக்கும் ஆதரவு வழங்குவோம்.

● கே.: வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிப் பீர்களா?

■ ப.: நிச்சயமாக ஆதரிப்போம்.

● கே.: தடைப்பட்ட சமாதானப் பேச்சை ஆரம்பிக்கவேண்டும் என்கிறீர்கள். அது எந்த அடிப்படையில் ஆரம்பிக்கப்படவேண்டும்?

■ ப.: எனது பாட்டனார் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் அப்பொழுதே சொன்னார் 'ஐந்து வருடங்களுக்குப் புலிகளிடம் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைப்போம்' என்று. அப்போது பரிகாசம் செய்தனர்.

இப்பொழுது அந்த நிலைக்குள்தான் நாடு தள்ளப்பட்டுள்ளது. புலிகளின் இடைக்கால நிர்வாக ஆலோசனையின் அடிப்படையிலேயே பேச்சு ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதுதான் எங்களுடைய நிலைப்பாடு.

● கே.: இடைக்கால நிர்வாகம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று ஜே.வி.பி. முரண்டு பிடிக்கிறதே அப்படியானால் சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்படும் நோக்கம் நிறைவேறுமா?

■ ப.: அவர்களைத் திருப்திப்படுத்தி வழிக்குக் கொண்டுவரவேண்டியது அரசின் பொறுப்பு.

● கே.: நீங்கள் ஆக எட்டுப்பேர் மட்டுமே அரசுக்கு முண்டுகொடுக்கப்போகின்றீர்கள். இதனால் ஏற்கனவே உள்ளே இருக்கும் 39 ஜே.வி.பியினரும் பிய்த்துக்கொண்டுபோய்விட்டால் நீங்கள் நினைக்கும் பெரும்பான்மை அரசு அமையுமா? இப்படியொரு நிலை ஏற்பட்டால் உங்களுடைய நிலைமை என்ன? நீங்களும் ஆதரவைத் திரும்பப் பெற்றுக்கொள்வீர்களா?

■ ப.: அதை அப்போது பார்ப்போம்.

● கே.: உங்களுடைய பதிலில் தெளிவு இல்லை. அரசுக்கு ஆதரவு என்கீறீர்கள்? எங்கேயும் அமரலாம் என்கிறீர்கள்? இப்படித்தானே ஜாதிக ஹெல உறுமயவும் சொல்கின்றது அதைப் போன்ற ஆதரவா, இல்லை அரசுடனேயே இணைந்து ஆதரவு வழங்கப் போகின்றீர்களா?

■ ப.: இதில் குழப்பியடிக்க எதுவுமில்லை. அரசுக்கு ஆதரவு வழங்கப்போகிறோம். இதில் மாற்றம் இல்லை.

● கே.: தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான கூட்டு ஒப்பந்தம் என்ன ஆனது?

■ ப.: யார் யாரோ கூச்சல் போட்டுக் கொண்டு கொடி பிடித்துக்கொண்டு அலைகின்றனர். நாங்கள் திட்டமிட்டுப் பேசுகின்றோம். இந்த வார இறுதியிலும் பேசப் போகின்றோம்.

- இப்படி ஆறுமுகன் தொண்டமான் பிடி கொடுக்காமல் மழுப்பலான பதில்களையே கூறினார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் இ.தொ.கா. பிரதித் தலைவர் எம்.எஸ். செல்லச்சாமி எம்.பி. மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். ஜெகதீஸ்வரன், வீ.புத்திரசிகா மணி, பைஸல் முஸ்தபா ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-க)

கட்டாக்காலி நாய்களை அழிக்க நடவடிக்கை

வலி.தெற்கு,செப்.5

வலி.வடக்கு பிரதேசசபைப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரத்தில் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயப் பகுதிகளில் ஏராளமான கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கை வலிகாமம் வடக்கு பிரதேச சபைப் பகுதிகளில் தொடர்ந்து இடம் பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டில் நாய்களை வளர்ப்போர் அவற்றுக்கான உரிமத் தகடுகளைப் பிரதேச சபையில பத்து ரூபா செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் -

நாய்களின் கழுத்தில் அவற்றைக் கட்டித் தொங்கவிடுமாறும் - பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர்.

உரிமத்தகடு இல்லாத நாய்கள பிரதேச சபையினரால் பிடிக்கப்பட்டால் அவற்றுக்கு உரிமை கோரும் நாயின் சொந்தக்காரர்கள் அதற்கான தண்டப்பணத்தைச் செலுத்த வேண்டி நேரிடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-152)

வெளிச்சவீடுகளைப் புனரமைக்குமாறு குடத்தனை மீனவர் கோரிக்கை

செம்பியன்பற்று,செப்.5

வடமராட்சி கிழக்கு கரையோரப் பகுதியில் வசிக்கும் மீனவர்கள் ஆழ்கடல் பகுதிக்குச் சென்று தொழில் செய்து திரும்புகின்றார்கள். இவர்கள் கரைதிரும்புவதற்கு வெளிச்சவீடு ஒன்று இல்லாததால் கரைதிரும்புவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மாரிகாலம் அண்மித்துவருவதால் கடும் காற்று, மழையிருள் சூழ்ந்த காலங்களில் ஆழ்கடலில் மீன்பிடிப்போர் கரை திரும்புவதில் மேலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சி கிழக்கில் உள்ள இரு வெளிச்சவீடுகளும் செயலற்ற நிலையில் இருக்கின்றன. இவற்றில் ஒன்று குடாரப்பிலும் மற்றையது வெற்றிலைக்கேணியிலும் அமைந்துள்ளன.

இந்த இரு வெளிச்சவீடுகளையும் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்குமாறு கடற்றொழிலாளர் சார்பில் சம்பந்தப்பட்ட திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-36)

மகளைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்திய

குற்றவாளியை இலங்கைக்கு நாடுகடத்தியது அமெரிக்கா

கொழும்பு,செப்.5

கொழும்பு உயர் நீதிமன்றத்தால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்ட நபர் ஒருவரை அமெரிக்கா இலங்கைக்கு நாடு கடத்தியுள்ளது.

தேவனிக்க அஸ்வின் குமார் சின்னத்தம்பி என்ற நபரே நாடு கடத்தப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

தனது மகளைப் பாலியல் ரீதியில் துன்புறுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட சின்னத்தம்பி, மேல் நீதிமன்றத்தால் 2002ஆம் ஆண்டு குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டார். நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்குவதற்கு முன்னரே சின்னத்தம்பி நாட்டைவிட்டுத் தப்பியோடி அமெரிக்காவில் பதுங்கிக்கொண்டார்.

சின்னத்தம்பி இல்லாமலேயே விசாரணைகளை நடத்திய உயர்நீதிமன்றம், அவருக்கு ஆகக் கூடிய 36 வருட கால சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாகிவிட்டார் என்பதால் அவர் மீது பகிரங்கப் பிடியாணை ஒன்றையும் நீதிமன்றம் பிறப்பித்திருந்தது.

இப்போது தண்டனையை அனுபவிப்பதற்காக சின்னத்தம்பியை அமெரிக்கா இலங்கையிடம் ஒப்படைத்துள்ளது. 'இந்தக்குற்றவாளியைக் கண்டுபிடித்து இலங்கைக்கு நாடு கடத்த முடிந்தமை குறித்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்' என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகப் பொறுப்பதிகாரி ஜேம்ஸ் என்ட்விஸ்ல் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

'எல்லாத்துறைகளிலும் போன்றே நீதி அமுலாக்கல் துறையிலும் இரு நாடுகளின் அரசுகளுக்கும் இடையில் உள்ள சிறந்த ஒத்துழைப்புக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்று தனது அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-137)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
17
–
03
–
1924

விண்ணில்
05
–
09
–
2003

M.A.செல்லையா றெனோல்ட் சற்குணசிங்கம்

பாசத்துடன் பழகி நேசத்துடன் உலாவி
பண்போடு வாழ்ந்த அன்பு டடா
இன்றோடு ஓராண்டு மறைந்து போய்விடினும்
உங்கள் நினைவு மட்டும் மறையவே மறையாது.

அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"பூர்ணிமா",
தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

(C/37438)(42-19)

கிறிஸ்ரல் சென்ரர் நெல்லியடி
A/L Day Class
பொருளியல் - S.வரதராஜன்
ஆரம்பம்: 06.09.2004 ந.ப. 12 மண
2006 A/L பி.ப. 3.30–6.00 வரை
(C/37425)(42-19)

விற்பனையாளர்கள் தேவை

புடைவை வியாபாரத்தில்
அனுபவமுள்ள விற்பனையாளர்களும்
பழக விரும்புபவர்களும்
உடனே தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:
(35999) விளம்பர இல. 2362
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

COMPUTER
REPAIRS
நெல்லியடியில்

MICRO PC SYSTEMS
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையத்திற்கு அருகில்)
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5893

இன்று நல்லைக் கந்தன் கார்த்திகைத் திருவிழாவில்

புதிய நதியா நகை மாடத்தினர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில்
(ஞாயிறு 05.09.2004)

தானமும் தவமும் ஓங்க
தமிழர் தம் வாழ்வு ஓங்கும்
ஞானமும் சீரும் உண்டாம்
நலம்பெற சைவம் ஓங்கும்
வானவர் வியந்து போற்றும்
வண்ணமார் நல்லூர் தன்னில்
ஆன நல் சேவை ஆற்றும்
அன்னை தங்கம்மா கண்ட

வானவர் போற்றும் துர்க்கா மணிமண்டபத்தே
வள்ளல் புதிய நதியா நகை மாடத்து
பொன்னொளிர் புதிய நதியா உவந்து நல்கும்
புண்ணிய அன்னதானம் தன்னில்
அன்பொடு நீவீர் அனைவரும் வந்து கூடி
கார்த்திகைத் திருவிழாக் கண்டு
இன்புற மகிழ்ந்து ஈசன்
இறையடி பணிய வாரீர்.

ஆக்கம்:
விகடகவி.

புதிய நதியா நகைமாடம்
இல.103, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 3261
(36068)(42)

SAAMSTECH

இலங்கையின் முன்னணி தகவல் தொழில்நுட்ப வழங்குநர்கள்

❑ MULTIMEDIA துறையில் முன்னோடிகள்

இலங்கையில் 80 இற்கும் மேற்பட்ட தமிழ் மூலமான கற்கைநெறி வழிகாட்டி CD விருத்தியாளர்கள்

அரிச்சுவடி, சிறுவர் வழிகாட்டி CDக்கள், கதைகள், கணிதம், விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், தமிழ் மூலம் Word, Excel, Access, HTML, Java Script, ASP, Flash, Page Maker, Photo Shop மற்றும் ஏராளம்.

ஒவ்வொன்றும் ரூபா 500/= மட்டும்.

குறிப்பு: அறிமுகப்படுத்தப்பட்டு வரும்தரக் குறைவான கற்கைநெறி CDக்களை வாங்கி ஏமாறாதீர்கள்.

❑ ஆங்கில சிங்கள நேரடி வகுப்புகள்

2,3 வயதுக் குழந்தைகள் 200, 300 சொற்களை மட்டும் தெரிந்துகொண்டு சரளமாக ஒரு மொழியை கதைக்கும்போது 20, 30 வயதிலும் நாம் ஆங்கிலம் கதைக்க கஷ்டப்படுவது ஏன். இந்த ஆராய்ச்சியின் முடிவு இன்று இலங்கையில் 40,000 பேருக்கு மேல் பயிற்சி பெற்று நிரூபிக்கப்பட்ட **SAAMSTECH** இன் மொழிக் கற்கைக்கான நேரடிவகுப்புகள்.

❑ முழுமையான இணையத்தள சேவை

இணையத்தள விருத்தியாளர்களுக்கும் மற்றும் இதுவரை இணையத்தளம் இல்லாத நிறுவனங்களுக்குமான இலங்கையின் முன்னணி இணையத்தள சேவை.

.com .net .info .org

Domain Registration: 400/= Per Year
Hosting 100 MB. Unlimited Bandwith on Windows or Linux Servers
Rs.4000/= Per Year
(குறிப்பிட்ட நாள்களுக்கு மட்டும்)

குறிப்பு: பாடசாலைகளுக்கும், அங்கீகரிக்கப்பட்ட பழைய மாணவர் அமைப்புகளுக்கும் இலவச இணையத்தள விருத்தியாக்கம்.

(C/37443)(42-19)

SAAMSTECH

Jaffna: 841, Hospital Road, Jaffna. Colombo: 22-1/4, Galle Road, Dehiwala
Phone: 011–5540200

ST.JOHN'S COLLEGE, JAFFNA
CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA
ADMISSION - 2005

1. பின்வரும் வகுப்புகளில் வெற்றிடங்கள் உள்ளன. தரம்1, தரம் 6.
2. அ) விண்ணப்பப் படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01. 09. 2004 முதல் 15. 09. 2004 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ) எக்காரணம் கொண்டும் 15. 09. 2004 இற்குப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா.
   இ) எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
   ஈ) விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் **இறுதிநாள் 20.09.2004** அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
3. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.
4. தரம் ஒன்றுக்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோ ஸ்ரட்கொப்பி) இணைக்கப்படவேண்டும்.
5. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஒரு படிவத்திற்கான கட்டணம் ரூபா. **400.00**
7. **வயதெல்லைகள்:**
   அ) தரம் - 1 விண்ணப்பதாரி 01. 02. 1999இற்கும் 31. 01. 2000 இற்கும இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ) தரம் - 6 விண்ணப்பதாரி 01. 02. 1994 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
8. **பிரவேசப் பரீட்சை:**
   தரம் - 6 வகுப்புக்கு 09. 10. 2004 காலை 9. 00 மணிக்குப் பரீட்சை ஆரம்பமாகும்.
9. ஏனைய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்களையும் காரியாலயத்தில் இதே நாள்களில் பெற்றுக்கொள்ளலாம். பரீட்சை மார்கழியில் நடத்தப்படும். வெற்றிடங்களைப் பொறுத்தே விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படும்.

(C/37203)(42-19)

- அதிபர்கள்.

A/L முடிவுகள் வந்துவிட்டன!

சிலவேளை, உங்கள் இலக்கு தவறி இருக்கலாம்!

"Foundation Degree Programme for Higher Education / Career" இழந்த சந்தர்ப்பங்களை மீட்டுத்தருகின்றது!

உடனடித் தொழில் வாய்ப்பொன்றை பெற வேண்டும் ஆனால் போதிய தகைமையில்லை.

பல்கலைக்கழக வாய்ப்பினை இழந்த நீங்கள் கணணி, வணிகம் போன்ற துறைகளில் உள்நாட்டில் பட்டப்படிப்பினை தொடர வேண்டும். ஆனால் அடிப்படை ஆங்கில, கணணி பற்றிய அறிவு போதுமானதாக இல்லை.

UK, Canada, Australia, Newzealand போன்ற நாடுகளில் உயர் கல்வியை தொடர வேண்டும். ஆனால் இந்நாடுகளுக்கான Student Visa க்களை பெற்றுக்கொள்ள போதிய தகுதியில்லை.

நிச்சயமாக நீங்கள் இவற்றுள் ஏதாவது ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுப்பீர்கள். கவலை வேண்டாம். Foundation Degree Programme for Higher Education / Career எனும் 3 மாத கால பாட நெறியை பயில்வதன் மூலம் உங்களை ஒரு தகைமை வாய்ந்தவராக மாற்றிக்கொள்ள முடியும்.

கற்கை நெறிக்கான அடிப்படை தகைமை: G.C.E. O/L

பாடப்பரப்பு : ஆங்கிலம், ஆளுமை விருத்தி, கணணி ஆகிய துறைகளில் அடிப்படை முதல் நிக விரிவான கற்கை நெறி முறை.

பாட நெறி காலம் : 3 மாதங்களைக்கொண்ட முழு நேர பாட நெறி.

பாடநெறி முடிவில் சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழ்கள்

கற்கை நெறி முடிவில் UK, Canada, Australia, Newzealand, போன்ற நாடுகளில் உயர்கல்வியை தொடர விரும்பும் மாணவர்களுக்கு விஷேட இலவச ஆலோசனைகளும் பூரண VISA ஒழுங்கு முறைகளும் London Institute இனால் மேற்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள் :

LONDON INSTITUTE OF FURTHER EDUCATION
27, Hospital Road, Dehiwala. Tel : 011- 5518666, 0777-715788

பஸ்ஸிலிருந்து தவறி வீழ்ந்து காயம்!

தென்மராட்சி,செப்.5

ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸிலிருந்து பயணி ஒருவர் தவறி வீழ்ந்து காயமடைந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

சரசாலையைச் சேர்ந்த கேகுணபாலன் (வயது 40) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(எ-117)

நல்லை ஆதீனத்தில் பீடாரோஹண விழா

இன்று நல்லை ஆதீனத்தின் 38 ஆவது பீடாரோஹண விழா மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. சைவத்தையும் தமிழையும் போற்றி வளர்த்த நல்லை ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதா தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் அரும்பணியினால் வளர்ந்து வருகின்ற ஆதீனம் நல்லூர் ஆலயவீதியில் அமைந்திருக்கின்றது.

சைவப்பாரம்பரியமும் சைவக்கோட்பாடுகளும் சைவமக்களால் மீறப்பட்டு விடாமல் பாதுகாக்கப்படவேண்டும் என்ற நோக்கோடு அரும்பாடுபட்டவர் நல்லை சுவாமிகள். அவர் இந்தியாவுக்குச் சென்று மதுரை ஆதீனத்திலே காஷாயம் பெற்றுத் துறவறம் மேற்கொண்டு ஈழத்துக்கு மீண்டு 1966 ஆம் ஆண்டு ஆவணிக் கார்த்திகை நாளிலே அமைக்கப் பெற்றதே நல்லை ஆதீனம்.

சைவமக்கள் உண்மையான சைவர்களாக வாழவேண்டும் என்று ஒவ்வொரு கதாப்பிரசங்கத்திலும் வற்புறுத்தி - வலியுறுத்தி வந்த சுவாமிகள் ஓரளவுக்கு அதில் வெற்றியும் பெற்றார். வீதி பஜனை சைவசமயபாட வகுப்புகள், பாலர் வகுப்புகள், சங்கீத வகுப்புகள், யோகாசன வகுப்புகள், கோல பயிற்சி வகுப்புகள், தையல் பயிற்சி வகுப்புகள் முதலிய நற்பணிகளை யாற்றி அரிய சேவையாற்றிய ஆதீனம் சைவமக்களுக்குக் கிடைக்கப் பெற்ற ஓர் அரும் பொக்கிஷம் ஆகும்.

தேடற்கரிய செல்வமாகிய தேவாரத திருப்பதிகங்களை எல்லாம் இளம் சமுதாயத்தினரைக் கொண்டு பண்போடு பாடி பிழையின்றி ஓதி நற்கதி யடைய இளம் சமுதாயத்தினரும் முயற்சி செய்கின்ற இன்றைய காலகட்டதிலே நல்லை ஆதினம் தேவாரப் பண்ணிசை வகுப்புகளைச் சீர்செய்து தேவாரத்தை பயிலும வண்ணம் செய்கின்ற அரிய தொண்டு வரவேற்கத்தக்கது.

திருத்தொண்டு செய்வதன் மூலம் ஆன்மா ஈடேற்றத்தைப் பெறலாம். நற்றொண்டு ஆற்றும் பண்பிலே முதல் இடம்பெறலாம் என்பவற்றை எடுத்தியம்புவதாக நல்லை ஆதினப் பீடாரோரண விழா அமைகின்றது.

தமது குரல் வளத்தினாலே செலுமிய சமய அறிவினாலேயே சிவ தொண்டாற்றி சைவம் வளர்த்த தம்பிரான் சுவாமிகள் எல்லோரது அன்புக் குரியவராகவும் விளங்கினார்.

அழியும் இந்தத் தேகத்தை நிலையானதென்று நம்ப வேண்டாம். என்றோ ஒருநாள் இந்த உடம்பை விட்டு உயிர் போகத்தான் போகிறது. அவ்வாறு போய்விட்டால் சீவன் சிவனாகி விடுகிறது. இந்தத் தத்துவத்தை எல்லோருக்கும் உணர்த்துவதற்கே நல்லை ஆதீன முதல்வர் அரும் பாடுபட்டார்.

இன்று நடைபெறுகின்ற பீடாரோஹண விழாவில் வழமைபோல கொழு பூஜை ,தீபாராதனை ; பீடாரோஹண ஆராதனை, பட்டணப் பிரவேசம், என்பன இடம்பெறும்.

சைவ உலகிற்கும்,மானவ உலகிற்கும் ,மூத்தோருக்கும், மதிப்புக் கொடுக்கும் வகையில் சேவை மனப்பான்மையுடன் தொண்டாற்ற வேண்டும் என்று எமக்கு வாழ்ந்து காட்டிய ஆதின முதல்வர் ஒரு சிறந்த வழிகாட்டியாவார்.

- அடியான் -

ஆகவே சைவம் பேணும் நாம் ஆதனப் பணிகளையும் பேணி சைவத்திற்கும் தமிழிற்கும் தொண்டு செய்தவர்களாக வாழ்ந்து காட்டுவோம் என்று இன்று திடமாக உறுதி பூணுதலே ஏற்புடையதாகும். ★

நல்லூர் ஆலயச் சூழலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகத் தொடர்பகத்தினால் நடத்தப்படும் கண்காட்சியில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. மேற்படி தொடர்பகத்தினால் வெளிநாடுகளில் வெளியிடப்பட்ட பிரசுரங்களை முதலாவது படத்திலும் அவற்றைப் பொதுமக்கள் பார்வையிடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: வலி.வடக்குச் செய்தியாளர்)

தேவைகளை இனங்கண்டு விவரம் அனுப்ப ஏற்பாடு

மானிப்பாய் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக அப்பகுதியில் உள்ள தேவைகளை இனங்கண்டு தமக்கு அனுப்பிவைக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளரிடம் கேட்டுள்ளார்.

வீதிகள், போக்குவரத்து, மின்சாரம், மருத்துவம், குடிதண்ணீர், விளையாட்டு, பொதுக்கிணறுகள், குளங்கள், வாய்க்கால்கள் மற்றும் முன்பள்ளிகள், தொழில் நிலையங்கள் போன்றவை தொடர்பான விவரங்களைத் தமக்கு அனுப்பிவைக்குமாறும் -

இவற்றுக்கான அமைவிடம் அளவுகள், செலவுகள் போன்றவையும் விவரமாகக் குறித்து அனுப்புமாறும் அவர் கேட்டுள்ளார். (எ-152)

இன்று நல்லைக்கந்தன் ஆலயத்தில்
பதினாறாந் திருவிழா
பகல் திருவிழா காலை 10.30 மணிக்கு
இரவு கார்த்திகைத் திருவிழா
பூச்சப்பரம் - மாலை 5.30 மணிக்கு
வள்ளி-முத்துக்குமாரசாமி
- தெய்வானை வீதி வலம்
கார்த்திகைக் குமரா! கந்தா கதிர்வேலவனே!
நேர்த்திகள் செய்தோம் காத்திட வாருமையா!
விளம்பர அனுசரணை:-
HERO HONDA World No.1
RG
இரத்தினகோபால்
65,63 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
TVS Lanka Private Ltd.
இன் அங்கீகரிக்கப்பட்ட (3S) யாழ். முகவர்
0777-340056 ☎ : 021-222-6185
(C/37370)

சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா இருத்தடா

நல்லூர் ஆட்டக்காரா நீசெய்யடா ஓர்மாயம்
அல்லும் பகலுமற்று அதுவும் இதுவுமற்றுச்
சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா இருத்தடா
எல்லையில்லா இன்பம் என்னை விழுங்கவேண்டும்
சொல்லை அமுதமாக்கி உல்லாச மாய்த்திரிய
வில்லை முறியடித்து வெற்றிமுரசு கொட்டடா
கல்லை ஒத்தமனம் கரைய அருள்தாடா
இல்லையென்ற சொல்லை இல்லாமல் ஆக்கடா
முழுதும் உண்மையென்று முனிவன் சொன்ன வாக்கு
எழுத முடியுமோ என்னைக்காப் பாயடா
பத்துவரியும் படிப்போர் கேட்போ ரெல்லாம்
முத்தா ஆகுவார் முழுவதும் உண்மையே.
- யோகர்சுவாமிகள்.

முன்பள்ளிக் கல்விக் கண்காட்சி

காரைநகர்,செப்.5

காரைநகர் பிரதேச முன்பள்ளிகள் இணைந்து நடத்தும் முன்பள்ளி கல்விக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி தொடக்கம் காரைநகர் சுப்பிரமணியம் வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப வைபவம் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய உபதலைவர் க.தில்லையம்பலம் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக சங்கானை மற்றும் காரைநகர் பதில் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் கலந்துகொள்வார். (ஜ-73)

நல்லூர் ஆலயச் சூழலில் இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,செப்.5

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினர் நல்லூர் துர்க்கா மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடத்தி வரும் தெய்வீக இசையரங்கு நிகழவில் இன்று ஞாயிற்றுக்கிழமை நாதஸ்வர, தவில் கச்சேரி இடம்பெறவுள்ளது.

இதில் நாதஸ்வரக் கலைஞர்களாக - வி.கே. கானமூர்த்தி, வி.கே.பஞ்சமூர்த்தி, பி.ரஜீந்திரன், வி.கே.கே.கிருஷ்ணதாசன், வி.கே.பி. குமரேஸ், என்.கோவர்த்தனன் ஆகியோரும் -

தவில் கலைஞர்களாக - ரி.சுந்தரலிங்கம், பி.ரவீந்திரன், ஆர்.ஆனந்தகணேஸ், என்.நந்தகுமார், பி. நர்மதன், வி.நீதிகாந்தன் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர். (10)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வுகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு கலை ஞானமாமணி சத்தியதாஸ் குழுவினரின் வில்லிசை இடம்பெறும். (10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.5

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றுவரும் கம்பராமாயணத் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா 'நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு' என்னும் காட்சி பற்றி உரையாற்றுவார். (10)

நல்லூர்க்கந்தன்

பெருந்திருவிழாக் கோலச் சிறப்படிகளும்

(கார்த்திகைத் திருவிழா)

நல்லைக் கார்த்திகை விழா

இரா: ரகுபதிப்பிரியா தா: ஆதி

பல்லவி

கார்த்திகை மைந்தன் கதிர்வே லாயுதன்
சீர்த்தி மேவு திருநல்லைக் குமரன்
(கார்த்திகை)

அனுபல்லவி

பார்த்துக் களிக்கப் பரவச முட்ட
பன்னியர் தம்முடன் பாங்கரில் வருவான்
(கார்த்திகை)

சரணம்

பச்சை மயில்மேல் பகலுலா வருவான்
பக்தர்கள் பஜனைகள் பாடிப் பின்வருவர்
மெச்சும் மாவிளக்கு போட்டு வணங்குவர்
வெளியே காவடி வந்துகொண் டிருக்கும்
(கார்த்திகை)

மாலையில் முத்துச் சப்பரம் மீது
மாலைகள் மார்பில் தவழ்ந்திட வருவான்
மாண்புடன் பல்லோர் வடம்தொட் டிழுக்க
காண்போர் நெஞ்சம் களிநடம் புரியும்.

-பண்டிதர் சி.கா.சேந்தன்.

ஆறுபொறிப் பேரொளியே!

தில்லைப் பரமனருள்
தீப்பொறிப் பேரொளியே!
தொல்லைபல நம்மைத்
தூரத்துவதேன்? ~ வேலழகா!
அல்லும் பகலுமாய்
ஆளுமினம் எம்மினத்தை
மல்லுக் கிழப்பதை மாற்று

- அங்குசன்

கார்த்திகை நாளிலே கண்திற!

கார்த்திகை மகளீர் மடியில் தவழ்ந்தவா! வருக! ~ எங்கள்
கண்களில் தீர்த்தநீரைத் தந்தவா வருக! ~ உந்தன்
சீர்திகழ் பதியை நாடச் செய்தவா வருக! ~ என்றும்
சிந்தையில் உன்னை எண்ணவைத்தவா வருக! ~ எங்கள்
ஆர்த்திடும் மனங்கள்ஏறி அற்புதா வருக! ~ நீயும்
அழிதிடும் விழியில் வழியும் கண்ணீராய் வருக! ~ இந்தக்
கார்த்திகை நாளிலேவம் கடிதிலே வருக! ~ நாளும்
காத்துளேன்! உந்தன் வேலின் அருளினைக் கூட்டிவருக!

-தாட்சாயணி

அழகோடு புன்னகை பூர்க்கின்றாய்

பல்லவி

அன்பினால் திளைத்தேனடா - முருகா
அனைத்துமே நீதானடா

அனுபல்லவி

ஆனந்தம் நீ என்று கண்டேனடா - அதனால்
என்னையே உன்னிடம் இழந்தேனடா
(முருகா- அன்பினால்)

சரணம்

வள்ளி தெய்வாணையுடன் நீ முருகா
வலம் வரும் அழகினை இரசிப்பேனடா
இரட்டித்த கோடி கண்கள் உனைமொய்க்க - நீ
பன்னிரு விழிகளினால் இரசித்திருப்பாய்
(முருகா - அன்பினால்)

அன்பே அன்பேயென்று நான் அழைத்துநிற்க - நீ
அழகோடு புன்னகை பூர்க்கின்றாய்
நல்லை நகர் பக்தியில் திளைக்குதடா - உன்
அருள் கண்டு மகிழக் துடிக்குதடா
(முருகா - அன்பினால்)

-மலர் சின்னையா

கார்த்திகைக் கந்தனே! காத்திட வேண்டும்!!

கார்த்திகை நாதா காத்திட வேண்டும்
காரியம் யாவும் நிறைத்திட வேண்டும்
நேர்த்திகள் உனக்கு ஆயிரம் வைத்தோம்
நிரந்தர தீர்வினைத் தந்திட வேண்டும்
ஏத்தியே நாளும் முறையிட்டுக் கேட்கிறோம்
அடியவர் கோரிக்கை ஏற்றிட வேண்டும்
போற்றியே உன்னுடன் வாழ்ந்திட வேண்டும்
புதிய தீர்வது தமிழர்க்கு வேண்டும்

- மதுரகவி காரை.எம்.பி. அருளானந்தன்

பேரொளியைத் தந்த பெருமகனார்

ஆறு முகவதித்தே ஆணவத்தைப் போக்கியதைக்
கூறுங் திருக்கார்த் திகைவிழா ~ பேறுபெறப்
பேரொளியைத் தந்த பெருமானார் நல்லூரிற்
பாரொளியாய் நிற்பான் பணி.

-சி.இராசரத்தினம் (இறைமணி)

10 வருடங்களாக...

அவர் பிறந்தது இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர். அதாவது 1953ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி.

முதன்முறையாக 1994 ஓகஸ்ட் 16இல் நாடாளுமன்றத்திற்குத் தெரிவானார் . இதுவே அவரது அரசியல் வாழ்க்கையின் ஆரம்பப் படியாகும். அதனைத் தொடர்ந்து, கடந்த பத்து வருடங்களாக யுத்தத்தால் பாதிப்புற்று அல்லற்படும் மக்களைத் தேடிச் சென்றுள்ளார்.

யுத்தம் உக்கிரமாக இருந்த அன்றைய காலகட்டங்களில் ஒருவரும் வன்னிக்குச் செல்லமுடியாத நிலை இருந்தது. ஆனால், அவர் துயருற்ற மக்களைத் தேடி வன்னிக்குச் சென்றார். அப்போது வன்னி மக்கள் எதுவித வைத்திய சிகிச்சையோ நோய்க்கு மருந்தோ பெற்றுக்கொள்ளமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்கள். அம்மக்களின் குறைதீர்க்க வன்னியில் வைத்திய முகாம், கண் சிகிச்சை முகாம் ஆகியவற்றை நடத்தி மக்களுக்குச் சிகிச்சை வழங்கினார்.

அவ்வாறு மனிதாபிமானமுறையில் செய்த உதவிகளுக்காக அவரைத் 'தேசத் துரோகி', 'நாட்டைக் காட்டிக் கொடுத்தவன்' என்றெல்லாம் குற்றம் சுமத்தினார்கள். அவரது வாழ்க்கைக்கு மட்டுமன்றி, அவரது குடும்ப அங்கத்தவர்களுக்கும் மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. மேலும், அவரை "புலிகளின் ஒத்துக்காரர்" என்றார்கள். இதனால், அவரது குழந்தைகள் இருவருக்கும் பாடசாலைக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது.

ஆனால், அவர் எந்தக்குற்றச்சாட்டுக்கும், கண்டனத்திற்கும் மனம் தளராது அவற்றுக்கு முகம் கொடுத்தார்; நாட்டைவிட்டு வெளியேறவில்லை; தமிழ் மக்களுக்காகச் செய்த சேவையை நிறுத்தவில்லை; வடக்கு, கிழக்கு மக்கள் படும் அவஸ்தைகள், கஷ்டங்களை சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச்சென்றார்.

2001ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலின் பின்னர் புனரமைப்பு, மீள்குடியமர்த்துகை, அகதிகள் விவகார அமைச்சரானார்.

தொடர்ந்து லட்சக்கணக்கான அகதிகளைப் பராமரிக்கும் பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான கண்ணிவெடிகளை அகற்றும் முயற்சியில் ஈடுபட்டார். கொடிய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கிராமங்கள் மற்றும் நகரங்களை மீண்டும் கட்டியெழுப்பவும் அகதிகளை மீளக்குடியேற்றவும் முன்னின்று உழைத்தார்.

ஏ-9 பாதை திறப்பதற்கு அடித்தளமிட்டார்.

வீதிச் சோதனைச்சாவடிகளை அகற்றப் பாடுபட்டார்.

வன்னி, வடக்கு - கிழக்குக்கு அத்தியாவசியப் பொருள்களை அனுப்பத் தன்னாலான நடவடிக்கைகளை மேற்கொண்டார். வன்னியில் புலம்பெயர்ந்து வாழ்ந்த 26ஆயிரம் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்கினார்.

இந்தக் குறுகிய கால அவகாசத்திற்குள் மக்களுக்காக முழுமையான சேவை செய்வதற்கு முடியாமல் போனது. எனினும், சேவைகளைச் செய்வதற்காகப் பல முயற்சிகளை மேற்கொண்டதன் மூலம் நீண்ட பயணத்திற்கு அடித்தளமிட்டார் என்பது அவரது அரசியல் வரலாறாகும்.

தமிழர்களின் தோழன், சிறுபான்மை மக்களின் உற்ற நண்பன்

டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன எம்.பி.

(C/37447)

துயருறுவோர் ஆறுதல் பெறுவர்

தமிழ் மண்ணில் மலர்ந்த ஒவ்வொரு மனி தனது வாழ்வு 'இழப்பு' என்ற வார்த்தையுடன் இரண்டறக் கலந்துள்ளது. இழப்புக்கள் என்ற வார்த்தை வாழ்வை சுருக்கமான முறையில் விளக்கி நிற்கின்றது.

நாங்கள் இழந்தது அதிகம், பிறந்தபோது கருவறை தந்த பாதுகாப்பை இழந்தோம். பாட சாலை சென்றபோது குடும்பம் தந்த பாது காப்பை இழந்தோம், படித்துப் பட்டம் பெற்றுப் பதவியில் அமர்ந்தும் இளைஞருக்குரிய சுதந் திரத்தை இழந்தோம், திருமணத்தில் புகுந்த தும் வாழ்வில் இருந்த சுதந்திரமான தெரிவு களை இழந்தோம், வருத்தத்தில் உடல்

தி.வசந்தசீலன்

வலிமை இழந்தோம், வயோதிபத்தில் வளமான இளமையின் அழகை இழந்தோம், இவைகளை மனித வாழ்வில் ஏற்படும் சாதாரண, இயற்கை யான இழப்புகள் என்று கூறலாம்.

ஆனாலும் ஆழமான தழும்புகளை மன தில் விட்டுச் செல்லும் இழப்புக்கள், மண்ணில் நிஜமான நிகழ்வுகளாகி, வரலாற்றில் பதியப் பட்டுவிட்டன. ஆயுத கலாசாரத்தினால் பாது காப்பை இழந்தோம். போரின் வெறியாட்டத்தி னால் உடைமையை, உரிமையை, உயிரை இழந்தோம். இடம்பெயர்வினால் நெருக்கமான உறவுகளை இழந்தோம். பட்டினியால், பசியி னால், விபத்தினால், நோயினால் ஒவ்வொரு கணமும் ஏதோ ஒன்றை இழந்துகொண்டிருக் கின்றோம். எல்லாவற்றுக்கும் மேலாய் எமது சுயநிர்ணய உரிமையை இழந்து நிற்கின் றோம்.

ஞாயிறு நற்பிரசாதம்

இவைகள் பொதுவான இழப்புக்களாக அமைந்துவிட்டன. தனிப்பட்ட வாழ்வில் கொண்ட இலட்சியத்தை அடையமுடியாது வாழ வையே இழந்து நிற்கின்றனர் பலர். கண்ட கனவுகளை, வகுத்த திட்டங்களை, நனவாக்க முடியாது வாழ்வின் சோபை இழந்து கதறு வோர் பலர். இவ்வாறாக இழப்புக்கள் பல்வேறு வடிவங்களில் மனிதர்களின் வாழ்வில் கணத் திற்குக் கணம் கருக்கட்டி, உருப்பெற்று, பிர சவித்து கொண்டிருக்கின்றது. மனதினுள் புதிய சக்தி உருவாகின்றது. அந்தச் சக்தி உலகத் தில் உள்ள அனைத்து இழப்பைச் சந்தித்த உள்ளங்களோடு சங்கமமாகுகின்றது. அகதி கள், சிறைக்கைதிகள், எயிட்ஸ் நோயாளிகள் என்று அந்தப் பட்டியல் வளர்ந்து செல்கின் றது. இத்தகைய இழப்புக்களோடு உள்ள மனிதர்களுடன் சங்கமமாகும்போது 'எனது' இழப்பு 'எமது' இழப்பாக மாறி அனைவருக் கும் ஆறுதலளிக்க மனம் தூண்டப்படுகின் றது.

இந்த ஆறுதலளிக்கும் பயணத்தில் இழப்பு களைச் சந்தித்த உள்ளங்களிற்கு வாழ்வளிப் பது 'துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில், அவர்கள் ஆறுதல் பெறுவர்' என்ற யேசுவின் வார்த்தைகள் தான்.

இழப்புக்கள் இறப்புக்களை விளைவிக்கக் கூடாது. இழப்புக்கள் புதிய இதயங்களைப் பிறப்பிக்கவேண்டும். அதன்மூலமே மண்ணிற் புதிய இனம் மலர்ந்து, இறைவனில் இளைப் பாறுதல் பெற்று அதிக பயன்தரும் விருட்சங் களாக வாழ்வு வளரும். ✷

அரச ஊழியருக்கு இடைக்காலக் கொடுப்பனவு

அரச ஊழியருக்கு இடைக்கால சம்பளக் கொடுப்பனவு வழங்கும் ஆலோசனை முன் மொழியப்பட்டுள்ளது. ஐம்பது சதவீத சம்பளக் கொடுப்பனவாக இது அமையும்.

இதற்கான பிரேரணை அமைச்சரவையில் அடுத்தவாரம் சமர்ப்பிக்கப்படவுள் ளது. பொது நிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட இதனை முன்மொழிந்துள்ளார். நிதி அமைச்சரி டம் இதுதொடர்பாகக் கருத்தறிந்து முடி வெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறைந்தது ரூபா மூவாயிரமும், கூடியது ஐயாயிரமும் அரச ஊழியருக்கு வழங் கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

திஸ்ஸ தேய்வேந்திர ஆணைக்குழுவின் சம்பளம் தொடர்பான சிபார்சு கருத்திற்கொள் ளப்படும். இதுதொடர்பில் நிதியமைச்சின் ஆலோ சனையும் பெறப்படும் என அமைச்சர் தொடங் கொட தெரிவித்தார்.

எனினும், இந்த இடைக்காலச் சம்பளக் கொடுப்பனவின்போது, சுகாதார ஊழியர் கள் கருத்திற்கொள்ளப்படமாட்டார்கள் எனத் தெரி விக்கப்படுகிறது.

சுகாதார ஊழியர்களுக்கு அண்மையில் சம்பள உயர்வு வழங்கப்பட்டது தெரிந்ததே.

திடீர் வாழ்க்கைச் செலவு உயர்வைக் கருத் திற்கொண்டே இடைக்காலக் கொடுப்பனவை வழங்குவது குறித்து ஆலோசிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (க)

அடையாள அட்டை பெறுவதற்கு

பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியையும் அனுப்பவேண்டும்

கொழும்பு,செப்.5

புதிதாகத் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பிப்பவர்கள் தமது விண்ணப்பப்படிவத்துடன் தமது பிறப்புச் சான் றிதழின் மூலப்பிரதியையும் அனுப்பவேண்டும் என ஆள்களைப் பதிவுசெய்வதற்கான திணைக் களத்தின் ஆணையாளர் பி.பி.அரீபக்டன் அறி வித்துள்ளார்.

இந்த உத்தரவு உடனடியாக அமுலுக்கு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு அனுப் பும் கிராம சேவை அலுவலர்களால் அத்தாட்சி செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் பிறப்புச் சான்றிதழ்களின் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப் ளப்பட்டு வந்துள்ளன. இனிமேல் எதிர்காலத் தில் பிறப்புச் சான்றிதழ்களதும் ஏனைய ஆவ ணங்களினதும் புகைப்படப்பிரதிகளுடன் அவை களின் மூலப்பிரதிகளும் அனுப்பப்படவேண் டும் என ஆணையாளர் அறிவித்துள்ளார்.

ஆவணங்களின் மூலப் பிரதிகள் தேசிய அடையாள அட்டையுடன் திருப்பி அனுப்பப்படும் என்று ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ப)

பிரசவ விடுமுறை தொடர்பாக புதிய சுற்றறிக்கை வெளிவந்தது

அச்சுவேலி,செப்.5

அரச சேவையிலுள்ள பெண்களுக்கு வழங் கப்படும் பிரசவகால விடுமுறை தொடர்பாக புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, அரசசேவையிலுள்ள பெண்கள் தாம்பிரசவிக்கும் எல்லாக் குழந்தைகளுக்கும் 84 வேலைநாள்களை விடுமுறையாகப் பெற் றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவிடயமாக மேலும் தெரிவிக்கப்படுவ தாவது:-

பெண் அரச ஊழியர்களுக்கான பிரசவகால விடுமுறை முன்னர் 42 தினங்களுக்கு மட்டும் வழங்கப்பட்டுவந்தது. பின்னர் முதல் இரண்டு குழந்தைகளுக்கு 84 வேலை நாள்களும், அதற்குப்பின்னர் பிறக்கும் குழந்தைகளுக்கு 42 தினங்களும் கொண்டதுமான விடுமுறை வழங்கப்பட்டுவந்தது.

பொதுநிர்வாக அமைச்சின் புதிய சுற்றறிக் கையின் பிரகாரம் முன்னர் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நடைமுறைகள் இரத்துச் செய்யப்பட்டு பிரசவிக்கின்ற எல்லாக் குழந்தைகளுக்கும் 84 வேலை நாள்களைத் தாய் தமக்குரிய விடுமுறை யாகப் பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புதிய சுற்றறிக்கையின் பிர காரம், பிரசவ விடுமுறை முடிவடைந்த பின்னர் கடமைக்குத் திரும்பிய தாய் குழந்தைக்குப் பால் ஊட்டுவதற்கு வசதியாக வேலை முடிவடை யும் நேரத்திற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் வேலைத்தளத்தை விட்டுவெளியேறு வதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சலுகை ஆறுமாத காலத்திற்கு வழங்கப் பட்டுள்ளது.

கர்ப்பவதியாக இருக்கும் காலத்தில் பிர சவ தினத்திற்கு முந்திய காலப்பகுதியில் அரை மணிநேரம் பிந்திக் கடமைக்குச் செல்வதற்கும் அனுமதி கிடைத்துள்ளது. (எ-11-185)

	ரா. சந்.		சனி
	இராசிச் சக்கரம்		வெ.
			சூரி. ▲ புதன். செ.
		கே.	வியா.

இந்த வார இராசி பலன்

05-09-2004 - 11-09-2004

மாற்றம் :
05.09.2004இல் கார்த்திகை மேடத்தில் சந்திரன் நிற்கும்.

அரசியலில் புதிய கருத்துக்கள் ஏற்படும். பேச்சுக்கள், திட்டங்கள் தொடரும். ஆயினும், மிகப் பிரயத்தனத்திற்கு மத்தியில் சமாதானப் பேச்சை ஐ.நா. முன்னெடுத்துக் கண் காணிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். இந்தியாவின் வடக்கில் சமாதானம், தெற்கில் வன்செயல், எதிர்ப்புக்கு மத்தியில் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிலை உருவாகும். மத்தியகிழக்கில் ஈராக், பலஸ்தீனம், இஸ்ரேல் போன்ற இடங்களில் தொடர்ந்து தீவிரவாதிகளால் அழிவுகள் தொடரும். அரேபிய, இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் உஷ்ண அதிகரிப்பு, திடீர் காற்றழுத்தம் ஏற்படும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

மேடம்

தொழில் ஸ்தானத்தில் நன் மைகள் ஏற்படும். பணவரவு, புதிய துறையில் நாட்டம் என் பன ஏற்படும். சாமர்த்தியச் செயற்பாடு, அதிக பேச்சு, சகோ தர வழியினரால் சஞ்சலம், வீடு, வாசல் செலவுகள் அதிகரிக் கும். பிரயாணங்களை நிறுத்துவது நன்று. வயிற்று நோ. காவல்துறை, பிரயாணத்துறையினர் நன்மைகள் அடைவர்.

அதிர்ஷ்டநாள்கள்:- வியாழன், வெள்ளி, சனி.

இடபம்

உதயத்தை வியாழன் பார்ப் பதனால் பொருள் வரவு ஏற் படும். பெரியவர்கள் உதவிகள் செய்து தருவார்கள். குடும்ப நன்மைக்காக ஓடியாடித் திரி வீர்கள். அந்நியர்கள் தீமை செய்வர். செலவுகள் அதிகரிக்கும். கை, கால் தாக்கம் கொடுக்கும். இடமாற்றங்களால் நன்மை கள் ஏற்படும். தொண்டை வருத்தம் ஏற்படும். வியாபாரிகள் நன்மைகள் அடைவர்.

அதிர்ஷ்டநாள்கள்:- வியாழன், வெள்ளி, சனி.

மிதுனம்

சஞ்சலம், செலவு அதிக ரித்தல், தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உதவுவார்கள். இடமாற்றங்களால் நன்மை ஏற் படலாம். சகோதரத்துடன் மனத் தாங்கல், போட்டிகள் ஏற்படும். பித்தக்கொதிப்பு, நாரிப்பிடிப்பு என்பன வரும். மாமனிடமிருந்து உதவிகள் கிடைக்கும். ஆசி ரியத் தொழில், சங்கீதத்துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மை கள் அடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்கள்:- வியாழன், வெள்ளி, சனி.

கடகம்

பண வரவு, தொழில் பீடத் தில் நற்பலன் நடக்கும். மேல திகாரிகள் உதவி செய்வார் கள். வைத்த பொருள் மறை யும். வைத்தியமென ஓடியாடித் திரிவீர்கள். பெற்றோர் வழியிலிருந்து உதவிகள் கிடைக்கும். வாத விறைப்பு, உளைவு கொடுக்கும். நரம்புச் சோர்வு கொடுக் கும். வாகனச் செலவு, இழப்புக் கொடுக்கலாம். அரசியல் துறையினர் நன்மை அடைவர்.

அதிர்ஷ்டநாள்கள்:- வியாழன், வெள்ளி, சனி.

சிங்கம்

தந்திரப் போக்கு, மனக் குழப்பம், நண்பர்கள் உதவிகள் கிடைக்கும். கல்வி அல்லது தொழிலால் வருமானம் அதிக ரிப்பு, பித்தக் கொதிப்பு, கால் உளைவு என்பன கொடுக்கும். அரசியல் பேச்சு, அபிப்பிராயப் போக்கு வரும். குடும்ப வாழ்வு பேச்சுக் கொடுக்கும். ஆசிரி யர்கள், வியாபாரிகள், போக்குவரத்து வாகனம் தொடர்பான வர்கள் நன்மைகள் அடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்கள்:- வியாழன், வெள்ளி, சனி.

கன்னி

பிறருக்கு உதவுதல், வாக் குக்கலகம், தொழில்ஸ்தானத் தில் மேலதிகாரிகளுடன் பிரச் சினைகள் வரும். வீடு, வாகன சுகம் கிடைக்கும். மாதா வழி யினர்கள் உதவிகள் செய்வர். போக்குவரத்தில் இழப்பு வரலாம். கால் உளைவு, நாரிப்பிடிப்பு கொடுக்கும். இடமாற்றங்கள் நன்மைகள் தரும். ஆசிரியர்கள், சங்கீதத் துறையினர், கலைத் துறையினர் நன்மைகள் அடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்கள்:- வியாழன், வெள்ளி, சனி.

துலாம்

உதயாதிபதியான வெள்ளி 10இல் இருப்பதனால் தொழில் ஸ்தானத்தில் பெரியவர்கள் உதவ' செய்வர். ஆனால், அபிப் பிராயபேதங்கள் வரும். சகோ தரங்களின் உதவிகள் கிடைக்கும். நாரிப்பிடிப்புத் தேடிவரும். சாப்பாட்டில் அளவுடன் இருக்கவும். தூரதேசப் போக்குவரத்துச் சிலருக்கு வரலாம். சட்டத்துறை, ஆசிரியத்துறை, வியாபாரத்துறை உடையவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், வியாழன்.

விருச்சிகம்

கடும் போக்கு, நண்பர்களை எதிர் பார்ப்பீர்கள். சட்டதிட்டப்படி நடப்பீர் கள். கிருமித்தாக்கம், சளித்தொலலை, பண வரவு, பெரியவர்களின் நட்பு, கை, கால் உளைவு தாக்கம் ஏற் படும். சிலருக்கு இடமாற்றங்கள் ஏற்பட லாம். இரும்பு வியாபாரிகள், தொழில் நுட்பத் தொழில் செய்பவர்கள், சட்டத்தொழில், பாதுகாப்புப் பகுதியினர் நன்மைகள் அடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்:- வெள்ளி.

தனுசு

நண்பர்களின் மனப்போக்கைக் கண்டு கலங்குதல், தொழில் ஸ்தானத்தில் முறுகல்நிலை, குடும்பத்தினருக்காக ஓடியாடித் திரிதல், பொருள்களில் நிதானம், தாரத்திற்கோ அல்லது சகோதரத்திற்கோ உடல் நிலை பாதிப்பு வருதல், போக்குவரத்தில் கவனம், உரசல் காயங்கள் வரலாம். சங்கீதப்பிரியர்கள், ஆசிரியர்கள், மருந்துத்துறையினர், சட்டத் துறையினர் நன்மைகள் அடைவார்கள்.

அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, வெள்ளி.

மகரம்

உங்களுக்கு எல்லாவற் றையும் அறியவேண்டுமென்ற ஆவல். தொழில் முயற்சி, புதிய திட்டமிடல், இனஜன ஆதரவு இருக்கும். அலைச்சல் இருந் தாலும் பொருள் வரவு இருக்கும். புதிய பேச்சுக்கள் கொடுக் கும். கால் உளைவு, வயிற்றில் நோ, சளித்தொல்லை என்பன கொடுக்கும். ஆசிரியத்துறை, கடற்றுறை, தொழில்நுட்பத்துறை, சந்தைத்துறை உள்ளவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, வியாழன், சனி

கும்பம்

அட்டமத்து வியாழன் வந் துள்ளதால் போக்குவரத்திலும் பொருளிலும் அவதானமாக இருக் கவும். தொழில் ஸ்தானத்தில் அதிக லீவுகள் எடுக்காதீர்கள். மேலதிகாரிகளின் ஆதரவு இருக்கும். தாய் அல்லது சகோதர வழியினரின் உதவிகள் இருக்கும். திட்டமிட்டு எதையும் செய்ய முடியாமல் இருக்கும். ஆசிரியர்கள், சட்டத்துறையினர்கள், பாதுகாப்புப் பகுதியினர்கள் நன்மைகள் அடைவார்கள். கால் வருத்தத்திற்கு வைத்தியம் செய்வீர்கள்.

அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, வியாழன், சனி.

மீனம்

திட்டமிட்ட செயற்பாட்டில் தடைகள் வரும். பணவரவு கொடுக்கும். பிரயாணங்களில் செலவு, தடை வரும். உறவி னர்கள் பகைப்பர். பொருள்களில் அவதானமாக இருக்கவும். கால் பிடிப்பு, சளித்தொல்லை, சல வருத்தங்கள் கொடுக்கும். வியாபாரிகள், கடற்றொழிலாளர்கள் நன்மைகள் அடை வார்கள். மனைவி வழி உறவினர்கள் உதவிகள் செய்து தரு வார்கள்.

அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, வியாழன், சனி.

மகாதேவா ஜோதிடம்

"அழகெழல்" எண்ணங்களில்

அழகிய (கை) வண்ணங்கள்

ஓவியம் உயர்ந்ததோர் ஒப்பற்ற கட்புலக் கலை வடிவமாகும். மற்றைய புலன்களின் கவன ஈர்ப்புக்கும் இது காரணமாக அமைவதனால் தான் குகை மனிதர்கள் காலத்திலிருந்து இது மிகையாகப் பேசப்படுவதொன்றாகின்றது. உலகின் முதன்மொழி எனவும், பொதுமொழி எனவும் வர்ணிக்கப்படும் இக்கலைவடிவம் இன்றைய அறிவியல் உலகில் பல்வேறுவித மான ஆய்வியலுக்கு உட்படுகின்ற கலைக் களமாக விளங்குகின்றது.

சித்திரக்கலை ஒரு பாடத்துறையாக ஆரம் பத்தில் ஐரோப்பியரின் செல்வாக்கின் நிமித் தம் இலங்கையின் கல்விச்செயற்பாடுகளில் இணைக்கப்பட்டது. வெறும் கைகளுக்கும் கண் களுக்கும் பயிற்சியளிக்கின்ற ஒரு துறையாக இது விளங்கியது. இதன்மூலம், வரைதிறன் எழுச்சிகள் எல்லைப்படுத்தப்பட்டன. புகைப்படக் கலை அல்லது இயற்கைக்காட்சிகளை அனு சரித்தலே முக்கியமாகக் கொள்ளப்பட்டது. பின்னர் இது இயல்பான மாணவர் சிந்தனை யோட்டததிற்குத் தடையாயின. மாணவர்களின சுயாதீன விருப்பு, வெறுப்புகளை ஓவியத்தி னூடாக வெளிப்படுத்த முடியாத நிலையில் அது ஆசிரியர் சார்பான கல்விமுறையாக அமைந் தது. மாணவர்களின் ஆக்கத்திறனை மழுங்க டிக்கும் இச்செயலை சில கலைக்கல்வியாளர் கள் கண்டித்தனர். பிள்ளையின் சுய வெளிப் பாடுகள் கலைக்கல்வி மூலமாக வெளிப்படுத்த இடமளிக்கவேண்டுமென சிறில்பேட் போன்ற கல்வியியலாளர்கள் முன்மொழிந்தனர்.

மாணவர்களின் உள்ளார்ந்தமான ஆற்றல் கள் வெளிக்கொணரப்படும் இவ் ஓவியக்கலை மூலம் அறிவு வளர்ச்சியை முதலாகக் கொண்ட ஆளுமையும் வளர்ச்சியடைகின்றது. சுதந்திர மான எண்ணங்களையும் கருத்துக்களையும் சொல்வதற்கான பரப்பாக இக்கலைக்களம் அமை கின்றது. பாடசாலைப் பாடத்திட்டத்திலுள்ள மற்றைய பாடங்களிலும் பார்க்க அறிவுப் புலமும், ஆற்றல்வளமும், உள இயக்கமும் உரியமுறையில் இணைக்கப்படுகின்ற பாடப் பரப்பாக அழகியல் விளங்குகின்றது.

1. அறிவு
2. திறன்
3. மனப்பாங்கு



மேலே தரப்பட்ட தரவிலிருந்து இதனை நன்கு அறிந்துகொள்ளலாம்.

நவீன கற்றல், கற்பித்தல் முறைகளின் கலைத்துவப் புகுத்தல்கள் இல்லாத கல்விச் செயற்பாடுகளை உப்பில்லாப் பண்டங்களாக உதறிவெறிவது கண்கூடாகின்றது. கற்றலில் முழுமையடைவதற்குரிய ஆதாரங்கள் கலைக் கல்வியூடாக நிரூபனமாகின்றது. பல்வேறுபட்ட சூழல்காரணிகளால் உளக்குறைபாடுகளும், பின் னடைவும் அடைந்த, அடைந்துகொண்டிருக் கின்ற எமது தேசக் குழந்தைகளுக்கு அழகியல் மூலமான அறிவூட்டல்கள் தகுந்த ஆற்றுப்படு தல்களாகின்றன.

எமது பாடசாலைகளில் பெரும்பாலானவை

கலைக்கல்வியினை இரண்டாந்தர நிலையில் வைத்துப் பார்க்கின்ற நிலை காணப்படுகின் றது. போட்டிகளில் பங்கேற்பதற்கும் விருந்தினர் களை மகிழ்விப்பதற்குமான ஒரு தளமாகவும் இதனைப் பயன்படுத்துவது வேதனை தருவதா கும். கலை கவனிப்பற்று இருக்கும் பல நகர்ப் புறப் பாடசாலைகளின் பரீட்சை முடிவுகளில் இன்று ஒன்பது பாடத்திற்கு விசேட அல்லது திறமைச்சித்திபெற ஓவியக் கலையில் ஒன்றுமில்லாத சித்தியீனத்தையே காண்கின் றோம்.

இக்கலைப் புறக்கணிப்புகளால் வெறும் அறிவை மட்டும் விழுங்கிய திமிங்கலங்களாக வெளியேறும் மாணவ சமுதாயம், கலைக் கல்வி மூலம் பெற்றுக்கொடுக்கப்படுகின்ற மானுடப் பண்புகளையும் மனித விழுமியங்க ளையும் இழந்து ஈற்றில் 'ஈராகிங்' மன்னர்களாக மீதப்படுவதைக் காண்கின்றோம். கலைக்கல்வி மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற சமநிலை ஆளுமைவிருத்தி ஆரம்ப காலங்களிலிருந்தே வித்தி டப்படுவதற்கு வழிப்படுத்து தல் கல்விச் சமூகத்தினது கட்டாயக் கடமையாகும். ஆக்க வெளிப்பாட்டுத்திறன், ஆக்கபூர்வ சிந்தனைவிருத்தி, அழகியல் ரசனை, உயர்ந்த மனப்பாங்குகள் என்பவன வற்றை உருவாக்கக்கூடிய நோக்காக விளங்கும் அழகி யல்கலையின் அற்புதங் களை அனைவரும் புரிந்து கொண்டு செயற்படுதல் அவசியமாகிறது.

உலகச் செல்நெறியில் கலைகளின் பார்வையும் பங்கேற்பும் பல்வேறு பரிமாணங்களில் பர விச்சென்று கொள்கின்றது. கலைத் தேடல்கள் முளைவிட்டுக் கிளைவிடுகின்றன. எமது பண்பியல் சுயங்களையும் தேச அடையாளங் களையும் நிலைநிறுத்துவதற்கும் பாதுகாப்பதற் கும் பேணுவதற்கும் கலைத்தழுவல்களே கை கொடுக்கும் காத்திர சாதனமாகும்.

சிந்து வெளியை சிந்தித்தால் சிதறிக்கிடக் கும் சின்னங்கள், எகிப்திய நைல்நதி ஏராளம் கலை சொல்லும் கிரேக்கமும் கூட காத்திரக் கலைப்படைப்பு. இவ்வாறு மேலைத்தேயமும் கீழைத் தேயமும் மேலான கலை சொல்ல, நாம் கீழே தேயக்கூடாது. எமது கலைகளின் கால எச்சங்களில் என்புகள் மட்டும் மீதியாகக் கூடாது. எமது சுயங்களை நிலைநிறுத்தக் கூடிய கலை மரபுகளைக் கட்டியெழுப்பக் கலைம் கொள்ள வேண்டும். காலம் கடந்து வாழ்கின்ற மௌரிய, ஆந்திர, குப்த, பல்லவ, சோழ, பாண்டிய கலை மரபுகள் போல் ஈழத்தமிழர் கலைமரபு என்றும் வரலாறு சொல்ல வழிசமைக்கவேண்டும்.

க.ரட்ணேஸ்வரன்
இணைப்பாளர், நுண்கலைத்துறை,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரியில் நுண்கலைத்துறை எம்மண்ணின் கலைத்துறை வளர்ச்சிக்கு தம்மாலியியன்ற பங்களிப்புக்களை ஆற்றுவதற்கான செயற்றிட்டங்களை வகுத்துச் செயலாற்றி வருகின்றது. அதன் பீடாதிபதி கலா நிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களின் அதீத முயற்சியால் எமது கல்வியற் கல்லூரி யின் தோற்றம் மட்டுமல்ல, இக்கல்லூரியில் கலைத்துறைப் பாடங்களான சித்திரம், சங் கீதம், நடனம், நாடகம் ஆகிய துறைப்பாட நெறிகளும் ஆரம்பமாகி மிளிர்கின்றன. இதன்மூலம், எமது தேசத்தின் குழந்தைகளுக்கு கலைக்கல்வியை தாராளப்படுத்தக் கூடிய தளங் கள் உருவாகியுள்ளன. அதன் ஒரு கட்டமே அண்மையில் எழுந்த "அழகெல்" ஆகும்.

கல்வியியற் கல்லூரி, பாடசாலை, சமூகம் என்பவற்றிடையே சிறந்த இடைவினைகளை ஏற்படுத்துவதன் மூலம்தான் தேவைகளை இனம்காணவும், தேடல்களை அடையவும் முடியும் என்ற உயர்ந்த நோக்கோடும் கல்வி யியற் கல்லூரியின் அடிப்படைகளையும் அதன் செயற்றிட்டங்களையும் பாடசாலைகளும சமூகமும் அறிந்து கொள்ளவேண்டும் என்ற பரந்த சிந்தனையும் இப்போட்டிக்கூடாக கல்வி யியற் கல்லூரி காட்டி நிற்கிறது. இதன்மூலம் உருப்படியான, உயிர்த்துடிப்புள்ள மனிதவளத் துக்கு ஆதாரமாகும் கலைக்கல்விப் பயணத் தில் பங்கேற்போம்; பணிசெய்வோம்.

'கலையோடு இணைந்த எம் கல்வி
நிலையாகப் பெருகிடும் பல்கி'

AREA SALES SUPPEVISOR & SALES REPRESENTATIVE

வீட்டுப்பாவனைக்குரிய பிளாஸ்ரிக் பொருட்-களை உற்பத்தி செய்யும் பிரபலமான நிறுவனம் ஒன்றிற்கு கீழ்காணும் இடங்களுக்கு அனுபவமுள்ள Sales Supervisors / Sales Representatives தேவை.

AREA SALES SUPPEVISOR:
30 வயதிற்கு மேற்படாமல் குறைந்தது 3வருட முன் அனுபவம் (In FMCG) விரும்பத்தக்கது. மும்மொழிகளிலும் சரளமாக பேசக்கூடிய வராக இருத்தல் வேண்டும். கல்வித்தகமை:- G.C.E.(A/L)

SALES REPRESENTATIVE :
27 வயதுற்கு மேற்படாமல் குறைந்தது 1 வருட முன் அனுபவம் (In FMCG) விரும்பத்தக்கது. ஆர்வமுடையவர்கள் உரிய சான்றிதழ்களுடன் இம் மாதம் 7,8,9 ஆம் திகதிகளில் கீழ்காணும் முகரிக்கு மு.ப. 9.00 - 12.00 மணிக்குள் நேரில் வரவும்.

The Business Development Manager,
CAMEL PLASTIC LTD.,
545, Sangaraja Mawatha, Colombo-10.
Tel: 0115371719 Fax: 0112448211
E-mail: Penpal@euraka.lk
Picasso Ads.

ADMINISTRATION CUM SALES OFFICER

யாழ்ப்பாணத்தில் விரைவில் ஆரம்பமாகவுள்ள Singapore Informatics Computer Centre இற்கு கணக்கியல் தெரிந்த நிர்வாக /வியாபார அலுவலர் தேவை. கணனி மற்றும் சந்தைப் படுத்தலில் முன் அனுபவம் உள்ள ஆங்கிலத்தில் சரளமாக உரையாடக்கூடியவர்கள் விரும்பப்படும்.

வரவேற்பாளர் /
இணைப்பாளர் / காசாளர்

ஆங்கிலத்தில் சரளமாக உரையாடக் கூடிய மேற்படி வேலைகளில் முன் அனுபவம் உள்ள Accounts மற்றும் Payments களை கையாளும் தகமை உடையவர்கள் தேவை.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கத்துடன் விண்ணப்பிக்கவும்

K.G.Industries
545, Sri Sangarajah Mawatha,
Colombo-10 / Fax: 2448211
Picasso Ads



சர்வதேச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழக பட்டப்படிப்புக்கான அனுமதி பெறுங்கள்.

புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்

'O' Level Holders study 1 ½ years in Singapore
'A' Level Holders study 1 year in Singapore
Thereafter continue in Singapore, UK or Australia for Final Year

APPLY NOW
For October Intake
(Full time)

University of HUDDERSFIELD

BA (Hons) Entrepreneurship & Business (12 months)

Job Training in Australia (6 Months)

Central Queensland University

Bachelor of Business (Marketing) (12-15 months)

Hartford is a leading education provider listed on the Singapore Exchange (SESDAQ)

HARTFORD BUSINESS SCHOOL
www.hartford.com.sg

Call our representing Agent

TMMP
TOTAL MARKETING MANAGEMENT PROGRAMME
3rd Floor, Confidence Building, No 05, St Anthony's Mawatha, Colombo 03, Sri Lanka.
Tel:94-11- 2564149, 94-11-2564008 Fax:94-11- 2370980 E-Mail:tmmp@sltnet .lk
OFFICES IN SINGAPORE, MALAYSIA, MALDIVES & INDIA
Optimum 2

BODY TONE PROTEIN COMPLEX TABLETS

* கடின உழைப்பாளிகளுக்கு
* சோர்வு தன்மை அகற்ற
* மிதமிஞ்சிய சக்தி தரவல்ல
* உடல் இயக்கத்தை துரிதப்படுத்த
* ஆரோக்கியத்தை மேன்மைப்படுத்த

இயற்கை மூலிகைகளாலான
19 அமினோ அமிலங்களில்
10 அத்தியவசியமான
அமிலங்களை உள்ளடக்கியது

போலிகளை கண்டு ஏமாறாமல்
ORIGINAL BODYTONE
வில்லைகளை பெற்று கொள்ளவும்.

பக்கவிளைவுகள் அற்றது
உறுதிக்கு உத்தரவாதம்

Importers & Distributors
K.S.P. International Pharmacy No. L4, First floor, Central Bus Stand Building, Colombo - 11. Tel : 2449766
அத்துடன் நோயிலிருந்து தேறி வருபவர்களுக்கும், பலவீனமானவர்களுக்கும் உடல் உபாதைகளிலிருந்தும் நிவாரணம தரக்கூடியது
Ceycom

நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

16 ஆவது ஆண்டு 4 ஆவது ஆண்டு

அமரர்
கணபதி தியாகேசு
(காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன மின் பகுதி உயர் உத்தியோகத்தர்)

திருமதி
தியாகேசு அன்னம்மா

07.01.1931 ← பிறப்பு → 05.11.1935
31.08.1988 ← இறப்பு → 21.08.2000

எங்களது அன்புத் தெய்வங்களின் ஆத்மாக்கள் சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.
ஆதியாமலை, உடுப்பிட்டி. (36114)(40-12-18) - பிள்ளைகள்.

கூட்டம்

யாழ். மாவட்ட திணைக்களத் தலைவர்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் யாழ் செயலகத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-117)

படிவம்

தேசிய கல்விக் கல்லூரிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
முடிவு திகதி: 30.09.2004
BHARATHY PATHI PPAKAM.
430, K.K.S. ROAD,
JAFFNA.
(வ/37471)

மரண அறிவித்தல்கள்

சதாசிவம் பாலசிங்கம்

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் பாலசிங்கம் நேற்று (04.09.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - தங்கச்சியம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற சண்முகராசா, பூரணம் (வேலணை) ஆகியோரின் அன்பு மருமகனும் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும் தியாகேஸ்வரன் (ஜேர்மனி), சசிகரன், வசிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரி (ஜேர்மனி), மணிமேகலை, அனுஷாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, மகாலிங்கம், வீரசிங்கம் மற்றும் இரத்தினசிங்கம், துரைசிங்கம் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சுந்தரலிங்கம் (றோயல் சவுண்ட்ஸ் சேவீஸ்), மன்மதராசா (வட்டக்கச்சி) ஆகியோரின் சகோதரனும் நவரட்ணேஸ்வரி (இந்தியா), பாஸ்கரன் (கோட்டக்கல்விப் பணிப்பாளர், ஊர்காவற்றுறை), பாலராசா (பிரான்ஸ்), யோகேஸ்வரி (லண்டன்), ஈஸ்வரன் (சுவிஸ்), புவனேஸ்வரி (சுவிஸ்), ஐங்கரன் (சுவிஸ்), சுவேந்திரா (ஆசிரியை, முழங்காவில் ம.வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனரும் பகிந், திவாபரன், நிதர்சன், கார்த்திகாயினி, கிரியன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஈஸ்வரி வாசா'
சுப்பிரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, மக்கள்.
(36112)(30-12-18)

சுந்தரம் வடிவேலு

கட்டுடை, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் வடிவேலு நேற்று (04.09.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம் - தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும் பவளம் அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற சரஸ்வதி, யோகமலர், நேசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் உமாதேவி, வைகுந்தவாசன் (ஜேர்மனி), கெங்காதேவி, துவாரகன் (ஆசிரியர், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சதாசிவம், நளினி (ஜேர்மனி), பேரின்பநாதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற கிருபாலினி மற்றும் சிவபாலன், வசிதரன், ராம்ஜி (ஜேர்மனி), அஜந் (ஜேர்மனி), அனிஜா (ஜேர்மனி), சாம்பவி, சத்திபாகன், செந்தாழன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி, காலஞ்சென்ற செல்லப்பா, நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டுடை,
மானிப்பாய். (36109)(30-12-18)

தகவல்:
வ.துவாரகன் (மகன்).

திருமதி பாக்கியம் ஆறுமுகம்

காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், இல.14, சிவகுருநாதர் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் ஆறுமுகம் நேற்று (04.09.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் ஆறுமுகம் (பிரபல வர்த்தகர், A.S.ஆறுமுகம், ஊர்காவற்றுறை) அவர்களின் அன்பு மனைவியும் நாகமுத்து - பார்வதியின் அன்பு மகளும் நல்லம்மாவின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கந்தசாமி, பொன்னம்பலம் (A.S.ஆறுமுகம் அன்சன்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), சரஸ்வதி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, சரோஜினிதேவி, தனலக்சுமி, நாகேஸ்வரி, கமலவேணி ஆகியோரின் அன்புத் தாயாரும் தவமணி, தேவகுமாரி காலஞ்சென்ற முருகேசு மற்றும் சபாரத்தினம், பாலசிங்கம், தியாகராஜா, நகுலேஸ்வரன், காலஞ்சென்ற நீதிராஜா ஆகியோரின் அருமை மாமியாரும் சண்முகநாதன், சபாநாதன், சண்முகலிங்கம், சசிகாந்தன், சண்முகராஜா, சிவராணி, சிவலோகநாதன், சிவபாலன், தயாநிதி, சபாநடேசன், சச்சிதானந்தம், சந்திரபாலன், சகாதேவன், சாந்தகுமாரி, சகுந்தலா, யசோதரன், வனஜா, இன்பகாந்தன், துஷியந்தன், சாந்தன், குகாஜினி, திலகராசா, வேணுகா, தயாளன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் திவ்யன், கபிலன், அகிலன், அஷா, அபிரா, ஆதவன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2004) ஞாயிற்றுக்கிழமை இல.14, சிவகுருநாதர் லேன் (பிறவுண் றோட்), யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்றுப் பிற்பகல் 2 மணிக்கு தகனக் கிரியைக்காகப் பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

14, சிவகுருநாதர் லேன்,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(36116)(30-12-18)

தகவல்:
ஆ.பொன்னம்பலம் (மகன்)
(A.S.ஆறுமுகம் அன் சன்ஸ், யாழ்ப்பாணம்).

சின்னத்தம்பி பத்மநாதன் (பற்பு)

இணுவில் மேற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி பத்மநாதன் (பற்பு) அவர்கள் 03.09.2004 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சுந்தரத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், தர்மகுலராணி, அருந்தவமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கணேசலிங்கம், கலைச்செல்வம், புனிதவதி ஆகியோரின் அன்பு மாமனும் மஞ்சுதன் (சுவிஸ்), துரேசன், சிவபாலன், சேந்தன், மயூரன், தேசிகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2004) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில், காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில்.
(36110)(30-12-18)

தகவல்:
து.செல்வம் (மருமகன்).

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
ரோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
ரோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
PACKED BY: ROYAL Industries Colombo 12
☎ : 0112334603
அனைத்துப் பாமசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம் →
(C/36310)

ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ : 021 222 2567

சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு, கர்ப்பவை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த டூலிகையாகும். இதில் விற்றமின் A,C உடன் கல்சியம், இரும்பு போன்ற தாதுப்பொருள்களும் அடங்கும்.
தொடர்பு: BIO TEC INTERNATIONAL
இல.131/2, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P.: 021-4590907
(36105)(40-12-18)

ENG, MBBS, BDS in BANGALORE, INDIA

Affiliated to RajiveGandhi University VTU& Bangalore University.
1. Electronics & Communication Eng.
2. Telecommunication Eng.
3. Computer Science & Eng.
4. Information Science & Eng.
5. Electrical & Electronics Eng.
6. Bio Eng. 7. Mechanical Eng.
8. Civil Eng. 9. Chemical Eng.
10. M.Sc. MBA and more courses available.

அனைவருக்கும் வாய்ப்பாக 10 இற்கும் மேற்பட்ட பிரபல கல்லூரிகளில், மிகக் குறைவான கட்டணங்களுடன் உயர்கல்விக்கான வாய்ப்பு.
SINT
37th Lane, Col.-06
Tel.: 0714-872131
E-mail:sint@rediffmail.com.
(C-37452)(38-12-18-30)

கண்ணீர் அஞ்சலி

சிவகுருநாதன் குருபரன்

காரைநகர் பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றும் பாரதி அவர்களின் மைத்துனரும் திருமதி சிவனேஸ்வரி பாரதி அவர்களின் அன்புத் தம்பியுமாகிய
செல்வன் சிவகுருநாதன் குருபரன்
அவர்களின் திடீர் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரதேச செயலகம்,
காரைநகர்.
(36121)(30-12-18)

பிரதேச செயலர்,
சமுர்த்தி முகாமையாளர்,
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

மரண அறிவித்தல்கள்

சிவகுருநாதன் குருபரன்

(மாணவன், 9ஆம் தரம் - யா/கலாநிதி ஆ.தி.ம.ம.வித்தியாலயம்)

காரைநகர், பொன்னாவளை, களபூமியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுருநாதன் குருபரன் நேற்று (04.09.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவகுருநாதன் - நாகேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் சிவனேஸ்வரி (உதவி அரசாங்க அதிபர் பணிமனை, காரைநகர்), சிவமலர், சிவரூபி, சிவநந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கந்தையா, பரமசண்முகம் (ஓய்வுபெற்ற மருந்துக் கலவையாளர்) அவர்களின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்து மயானத்திக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னாவளை,
களபூமி,
காரைநகர். (சி-37456)(30-12-18)

தகவல்:
சிவகுருநாதன் (தந்தை).

திருமதி குணவதி புண்ணியசிங்கம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் 24/01, கச்சேரி - நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணவதி புண்ணியசிங்கம் 02.09.2004 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புண்ணியசிங்கத்தின் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - தபால் திணைக்களம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - கண்மணியின் அன்பு மகளும் புஸ்பவினோதினி (பிரான்ஸ்), ரதிமலர், மாலினி (பிரான்ஸ்), சிந்திராந்தினி, சுபாசினி ஆகியோரின் அன்புத் தாயாரும் தையல்நாயகி, சின்னத்துரை (ஓய்வுபெற்ற முதலியார்), காலஞ்சென்றவர்களான சதாசிவம் (ஓய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர்), இராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை) மற்றும் இரத்தினசிங்கம், குணநாயகி, சண்முகநாதன், வரதலட்சுமி, பத்மேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜீவரட்ணம் (பிரான்ஸ்), சந்திரகுமார் (சாந்தன்), குமாரிசூரியர் (பிரான்ஸ்), பாஸ்கரன் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், அன்னலெட்சுமி மற்றும் சண்முகசுந்தரம், பரமசாமி, நல்லம்மா, லோகநாயகி காலஞ்சென்ற இலங்காதேவி, குலேந்திரன், ரஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2004) ஞாயிற்றுக்கிழமை 9/06, கொஸ்தாபாவத்தை கடவத்த வீதி, களுபோவில இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் காலை 10 மணிக்கு கொகுவல மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

65, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
077-6179108 (36090)(30-12-18)

தகவல்:
ச.சந்திரகுமார்
(சாந்தன் - மருமகன்).

பொருளியற் கல்லூரி

யாழ்ப்பாணம்.
A/L DAY CLASS
திங்கள், செவ்., புதன், வியாழன்
7 - 8 வணிகக்கல்வி - முரளி
8 - 10. கணக்கீடு - முகுந்தன்
10 - 11.30 பொருளியல் - வரதராஜன்
புதிய பிரிவு நடைபெறுகின்றது.
கலைப்பிரிவு சனி, ஞாயிறு நடைபெறுகின்றது.
(C11196)(40-12-18)

வீடு விற்பனைக்கு

இல.245, நாவலர் வீதியில் அமைந்திருக்கும் சகல வசதிகளுடன் கூடிய வீடும் காணியும் உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்புகளுக்கு மேலுள்ள விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். (36118)(40-12-18-30)

லக்சுமி — இணுவில்

3.9.2004 முதல் MGR (இருவேடம்), லதா, நம்பியார், மஞ்சுளா நடிப்பில்
நினைத்ததை முடிப்பவன்
தினமிருமுறை காட்சி 1100, 300, 700 புதிய நேரம் அடுத்தபடம் திருடா திருடி
(36117) (12)

நிறைஞ்சனாஸ் — சங்கானை

சேரன், சிநேகா நடித்த தினமி 11.00, 2.45, 6.00 பு.ப.
ஆட்டோகிராஃப்
(ரீல் வெள்ளி, சனி, ஞாயிறு.)
STRIKE FORCE (இரவு 8.45 பு.ப.)
(C36305) (12)

ராஜா — யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேநேர வெளியீடு
விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த மதுர
பு.நே.: 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(C-36304)(12)

நாகம்ஸ் — சுன்னாகம்

கமலஹாசன், சிநேகா, பிரபு, பிரகாஸ்ராஜ் நடிப்பில்
வசூல்ராஜா MBBS
காட்சிநேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
07ஆம் திகதி முதல் அள்ளான்
(வி-36415)

பேச்சை ஆரம்பிக்கும் முன்முயற்சியில் தெற்கு வர்த்தகப் பிரமுகர்கள் குழு

இடைநிறுத்தப்பட்டிருக்கும் அரசு - விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முன் முயற்சியில் வர்த்தக சமூகப் பிரமுகர் குழு ஒன்று ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'சமாதானம் ஊடான வர்த்தகம்' என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வர்த்தகர்கள் குழு ஒன்று அண்மையில் இலங்கையிலிருந்து தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்திருந்தது.

அங்கு இனங்களுக்கு இடையேயான முரண்பாடுகள் எவ்வாறு தீர்க்கப்பட்டன என்பது குறித்து இக்குழு விரிவாக ஆராய்ந்திருந்தது.

தென்னாபிரிக்காவில் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்குடன் இக்குழு தெற்கில் உள்ள அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது. இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான வழி முறைகள், செயற்பாடுகள் குறித்து இக்குழு தெற்கில் அரசியல் தலைவர்களுடனும் பேச்சு நடத்தி வருகின்றது.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் இக்குழுவினர் சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ளனர். (ஐ-3)

சமாதான உதைபந்தாட்டம் சென். பற்றிக்ஸ் அணி வெற்றி

வட்டுக்கோட்டை, செப்.5

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடந்த சமாதான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றியீட்டிச் சாம்பியனாகியது.

நேற்று மாலை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியும் மன்னார் சென். சேவியர் கல்லூரியும் மோதின.

விறுவிறுப்பாக நடந்த ஆட்டத்தின் முடிவில் இரு அணிகளும் சமநிலையில் இருந்ததால் தற்காலிக உதை வழங்கப்பட்டது. இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 5-4 என்ற புள்ளி அடிப்படையில் சாம்பியனாகியது.

இச் சுற்றுப் போட்டியில் மன்னார் சென். சேவியர்அணி இரண்டாம் இடத்தையும் இளவாலை புனிதஹென்றியரசர் அணி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் நோயல் விமலேந்திரன் தலைமையில் நடந்த இறுதி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் தென்னிந்தியத் திருச்சபையின் செயற்றிட்ட இணைப்பாளருமான எஸ்.இராசநாயகம் கலந்துகொண்டார்.

அங்கு நடந்த பரிசளிப்பு நிகழ்வில் போட்டியின் நடுவர்கள், போட்டியில் கலந்துகொண்ட பாடசாலை அதிபர்கள், பயிற்றுநர்கள் ஆகியோருக்கு பிரதம விருந்தினர் சமாதான உதைபந்தாட்ட நினைவுச் சின்னத்தை வழங்கினார்.

இப்போட்டியில் ஆட்டநாயகனாக கே. நிஷாந்தன் (மன்னார் சென். சேவியர்), உதைபந்தாட்டத் தொடரின் நாயகனாக கே. சியாந்தன் (மன்னார் சென்.சேவியர்), சிறந்த காப்பாளராக எஸ். எம்மினெக்ஸ் (சென். பற்றிக்ஸ்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-3-161)

மல்வத்த..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் தமிழ்ச்செல்வன் தகவல் அனுப்பியிருந்தார்.

தமிழ்ச்செல்வனின் தகவலைத் தெரிவிப்பதற்காக மல்வத்த பீடாதிபதியை சந்திரசேகரன் நேற்றிரவு சந்திக்கவிருந்தார் எனச் செய்திகள் தெரிவித்தன. (ஐ-3)

புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளைப் பேச்சுக்குக் கொண்டுவருவது கடினமான விடயம்தான். ஆனால், அவர்கள் பேச்சுக்கு வரத்தயாராக இருக்கின்றனர்.

- இவ்வாறு ஜனாதிபதி கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்கள் பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். ஜே.வி.பி. சார்பில் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை. (ஐ-376)

மினிவான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோப்பாய் பொலீஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை நடத்தினர். அதற்கு முன்பாக அங்கு திரண்ட சிலர் மினிவானை அடித்துச் சேதப்படுத்தினர்.

இருபாலையில் உள்ள தனியார் தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றில் இரவு நேரக் காவலாளியாகப் பணியாற்றும் மாணிக்கம் சின்னப்பா (வயது 73) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் எட்டுப் பிள்ளைகளின் தந்தை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-72-7-6-180)

வாடகைக்கு வீடு தேவை

யாழ். மாநகரசபை எல்லைகளுள் கைத்தொழில் நிறுவனம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: T.P.:0777 536108

(C/37473)(40-12-18)

புதிய பிரிவு

ஆரம்பம்: 05.09.2004 10 a.m.

Diploma Courses

★Diploma in Microsoft office
★Diploma in Internet Technology
★Diploma in DeskTop Publishing
★Diploma in Hardware Engineering
★Diploma in Java Programming

புலமைப்பரிசில் திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான விசேட பிரிவு

பதிவிலுக்கு முத்துங்கள்

மேலதிக விவரங்களுக்கு: தலைமை அலுவலகம்: IBMS, # 410,K.K.S. Road, Jaffna. (சி-37375)(12-18-30)

கிளை நிறுவனங்கள்: - NMMV Road, Nelliady. - Sangaththanai, Chavakachcheri.

CATWAS. COM

Computer Academy T.P.021-2223805

No.26, Somasundram Avenue, Chundukuli, Jaffna.

Diploma Courses புதிய பிரிவுகள்

Ms Office 2003	1750/=
D.T.P.	2000/=
Hardware	1500/=
Video Mixing	2500/=
Web Page	3000/=

அறிவோடு விளையாடுங்கள் Kids Programme சிறுவர்களுக்கான மாலை நேர கணனி வகுப்புகள் ஆரம்பம்.

Certificate Courses நடைபெறுகின்றன.

☞ Ms Office பாடநெறியினை மேற்கொள்வோருக்கு மட்டும் அனுமதிக் கட்டணம் இலவசம்.

☞ Ms Office பாடநெறியில் கற்கும் மாணவருக்கு Internet & E-Mail இலவசம். (சி-37440)

கணனிக் கற்கை நெறிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம் 18.09.2004

விசேட கட்டணச் சலுகையில்

பல்கலைக்கழக, தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழக அனுமதிக்கு எதிர்பார்த்துக் காத்திருக்கும் மாணவர்கள் மற்றும உயாகல்வ கற்கும் மாணவர்களுக் கெனவே விசேடமாகக் கட்டணக் குறைப்புடன் இப்பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்

"கணனிக் கல்விக்குத் தனித்துவம்மிக்க IIS நிறுவனத்தில் இணைவதன் ஊடாக நீங்கள் கணனி உலகில் அங்கீகரிக்கப்படுகின்றீகள"

மேலதிக விவரங்களுக்கு:

இயக்குநர், IIS, Jaffna.

(C/37400)(15-12-18-30)

இராணுவத்தை விட்டுத் தப்பிச்சென்றோரை நீக்கிவிட பாதுகாப்பு அமைச்சு தீர்மானம்

கொழும்பு,செப்.5

இராணுவத்தை விட்டுத் தப்பிச்சென்ற சகலரையும் இராணுவத்திலிருந்து நீக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்கள் தமது சேவை தொடர்பான விவரங்களை நேரடியாகவோ கடிதம் மூலமாகவோ நடவடிக்கை தலைமைச் செயலகத்திற்கு அறிவிக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கென எதிர்வரும் செப்ரெம்பர் 15ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையின் மூலம் இராணுவ சேவையிலிருந்து தப்பிச் சென்றவர்கள் கௌரவமாக ஓய்வுபெறமுடியும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

2003ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் திகதி வரை இராணுவத்திலிருந்து தப்பிச்சென்ற இராணுவ வீரர்களாக கணிக்கப்பட்டுள்ளவர்களின் இராஜினாமாக் கடிதங்களை கையளிப்பதற்கு இம்மாதம் 13ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு 3, மலே வீதியில் அமைந்துள்ள இராணுவ தொண்டர் இணைப்பு மத்திய நிலையத்துடன் தொடர்புகொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இதேவேளை -

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றோர் மீண்டும் இராணுவத்தில் இணைந்து கொள்ள விரும்பினால் அதற்கான சந்தர்ப்பமும் ஏற்படுத்திக்கொடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-6)

மோ.சைக்கிள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலதிக சிகிச்சைக்காக உடனடியாகவே யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டவேளை இடைவழியில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரணவிசாரணையின் பொருட்டு யாழ். வைத்தியசாலை பிரேத அறையில் வைக் கப்பட்டுள்ளது. (ஐ-6)

கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாயத் திணைக்களம், கைத்தொழில் திணைக்களம், யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான, விவசாய பீடங்கள், பனை, தென்னை அபிவிருத்திச் சபைகள், நீர்ப்பாசனத் திணைக்களம், விவசாய உற்பத்தி சார் நிறுவனங்கள், தொழில் துறைத் திணைக்களங்கள், நவீன வேளாண் சேவை ஆகியன இணைந்து இக்கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன. (ஐ-3-10-202-352)

ஆயுதக் குழுக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையில் ஈடுபட்ட சமயம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இத்தகைய சம்பவங்கள் இராணுவப் பகுதியில் நடப்பதால் இராணுவம் மீது நம்பிக்கை அற்றுப்போகின்றது. இந்த விடயங்களுக்கு இராணுவம் முழுப்பொறுப்பையும் எடுக்க வேண்டும். போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஊடாக இந்த விடயங்களை இராணுவத்துக்குத் தெரிவித்துள்ளோம்.

இதற்கமைவாக - போர்நிறுத்தக் குழு கேட்டுக்கொண்டதற்கிணங்க - இராணுவத்தை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சந்திக்கவிருக்கின்றோம்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடக்கும் கொலைகள் தொடர்பாகவும், யுத்தநிறுத்த மீறல் தொடர்பாகவும் இச்சந்திப்பில் எடுத்துக் கூறவிருக்கிறோம்.

முன்னர் இந்தச் சந்திப்புக்களை இடைநிறுத்தியிருந்தோம். இந்தச் சந்திப்பின் பின்னர் இடம்பெறும் செயற்பாடுகளைப் பொறுத்துத்தான் சந்திப்பின் பயன் குறித்துக் கூறமுடியும்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் செயற்படும் எமது அலுவலகங்களை முழுமையாக இயக்குவதாயின் முதலில் அங்கு பணியாற்றும் போராளிகளுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கவேண்டும். இராணுவம் தங்கியுள்ள இடங்களுக்கு அருகில் சூட்டுச்சம்பவங்கள் இடம்பெறுகின்றன. எனவே பாதுகாப்பு உத்தரவாதத்தை இராணுவம் வழங்கவேண்டும்.

பாதுகாப்பு உத்தரவாதம் என்றால் எமது அலுவலகங்களைச் சுத்தி இராணுவக் காவல் போடவேண்டும் என்பதல்ல. எமது போராளிகள் சுதந்திரமாக நடமாடி அரசியல் பணிகளை மேற்கொள்ள உத்தரவாதம் வழங்க வேண்டும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கைகளுக்கு அமைவாக இந்தச் செயற்பாடு இருக்கவேண்டும்.

பதற்றம், குழப்பங்கள் இல்லாத நிலையில் பணியாற்றவே நாம் விரும்புகிறோம். செவ்வாய்க்கிழமை சந்திப்பின் பின்னர்தான் இது விடயம் தெளிவாகத் தெரியும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம், இராணுவத்துடன் இணைந்து செயற்படும் சகல ஆயுதக்குழுக்களும் வடக்கு - கிழக்குக்கு வெளியே கொண்டுசெல்லப்படவேண்டும். ஆனால், அது இன்றுவரை செய்யப்படவில்லை கிழக்கில் சுமுகசூழல் கெடுவதற்கு அதுதான் காரணம்.

ஆயுதக்குழுக்கள் யாவும் வெளியேற்றப்பட்டால்தான் உண்மையான பிரச்சினையில்லாத - நல்ல சூழ்நிலை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் காணமுடியும் - என்றார் கௌசல்யன் (ஐ-3)

அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி பிரமுகர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

புதிய அரசு ஆட்சிக்கு வந்து 4 மாதங்கள் கடந்தபோதும் எந்தவித உருப்படியான செயற்பாடுகளையும் முன்வைக்கவில்லை. அதற்குப் பதிலாக வாழ்க்கைச் செலவை உயர்த்தி நாட்டைக் குட்டிச்சுவராக்கும் நடவடிக் கைகளையே அரசு மேற்கொள்கின்றது என்று அவர் மேலும் சுட்டினார்.

ஒட்டுமொத்தமாக சகல சேவைகளும் ஸ்தம்பிக்கும் நிலை தோன்றிவருகின்றது. இந்நிலையைச் சமாளிக்க முடியாவிட்டால் அரசு பதவி விலக வேண்டும் என்று மற்றொரு ஐ.தே.கட்சிப் பிரமுகர் தெரிவித்தார். (ஐ-3)

மரண அறிவித்தல்

மாணிக்கம் சின்னப்பா

இருபாலை, விதானையார் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சின்னப்பா நேற்று (04.09.2004) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - பறுவதம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் மனோன்மணி, குமாரசுவாமி, காலஞ்சென்ற கனகமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் றஜனகுமார் (கனடா), பாமதி, மாலதி, கேமதி (இத்தாலி), சுதாமதி (சுவிஸ்), உஷாமதி, யசோமதி (சுவிஸ்), ரவீஸ்குமார் (லண்டன்), ரஜனி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இந்துமலர் (கனடா), குலேஸ்வரன், சிறிகாந்தன், ஜெகதாஸ் (இத்தாலி), பாஸ்கரன் (சுவிஸ்), யோகநாதன், யோகநாதன் (சுவிஸ்), கிருஸணமூர்த்தி (சுவிஸ்) ஆகியோரின் மாமனுமாவார். மிதுசன், ராகவி, றஜிதா, துவாரகன், துஜிரகன், ரஜீவ்காந், தீபிகா, வர்ஜீனியா, கீர்த்தனா, சுபர்த்தனா, சுனேகா, நிதுனுஜன், சானுஜன், மீனுஜா, ஆதியன், ஆருஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை செக்கடி இந்து மயானத்திற்கு நாளை (06.09.2004) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலை.

தகவல்: செ.யோகநாதன் (மருமகன்).

(36128)(30-12-18)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.09.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூடான்: அமெரிக்காவின் உடனடி இலக்கு?

கடந்த 15 மாதங்களாக தார்பூரில்(Darfur) நடைபெறும் யுத்தத்தினால் 30,000 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டும், 10 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேறியுமுள்ளனர். 22 லட்சம் மக்கள் உணவு மற்றும் மருந்துகள் இன்றி அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் மருந்துகள் உடனடியாகப் போய்ச்சேராவிட்டால் 3 லட்சத்து 50 ஆயிரம் பேர் இறக்கும் மனித அவலம் நிகழும் என்ற ஐயம் தோன்றியுள்ளது.

தார்பூரின் 15 மாதகால யுத்தத்தின் கோரம் ஐ.நா.செயலாளர் கொபி அனான் மற்றும் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் கொலின் பவல் ஆகியோரின் நேரடி விஜயத்தின் பின்னர் செய்தி ஊடகங்களில் சூடுபிடிக்கத் தொடங்கியது.

அதிலும் 19 வருடங்களின் பின்னர் அமெரிக்க உயர் இராஜதந்திரி ஒருவர் சூடான் சென்றிருக்கிறார் என்றால், அதன் முக்கியத்துவத்தைக் கேட்கத் தேவையில்லை. தார்பூர் பிரச்சினையால் சூடான் சர்வதேச ரீதியில் கண்டனத்தையும், மீண்டுமொரு பொருளாதார தடைக்கும்முகம் கொடுக்கும் நிலையையும் எதிர் கொள்கிறது.

சூடானின் மேற்கு மாநிலமான தார்பூரில் அரபு-ஆபிரிக்க கோத்திரங்களுக்கிடையே ஏற்பட்ட சண்டையே அங்கு உருவாகியுள்ள மனித அழிவுக்கு காரணமாய் அமைந்துள்ளது. அங்கு சண்டையில் ஈடுபட்டுள்ள குழுக்களில் அரேபியர்களுக்கு சூடான் அரசாங்கம் உதவி செய்து வருவதாக ஐ.நா. அமெரிக்கா உட்பட்ட மேற்கத்திய நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன.

தார்பூர் பிரச்சினையில் சூடான் அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு அங்கு கட்டின்றித் திரியும் குழுக்களிடமுள்ள ஆயுதங்களைக் களைய வேண்டும். இல்லாவிடின் ஐ.நா.வின் பொருளாதாரத் தடைக்குசூடான்முகம்கொடுக்க நேரிடும் என அவை எச்சரித்து வருகின்றன. ஐ.நா. செயலாளர் கொபி அனானின் திடீர் விஜயம் இதனை வலியுறுத்துவதாகவே அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

தார்பூர் விடயத்தில் அமெரிக்கா அளவுக்கதிகமாகவே மூக்கை நுழைத்துள்ளது.

பெரும்பான்மை நாடுகள் இப்பிரச்சினையைத் தீர்க்க சூடான் அரசாங்கத்துக்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடும் வேளையில், அமெரிக்கா மாத்திரம் இராணுவத் தலையீடு ஒன்று வேண்டும் என வலியுறுத்தி வருகிறது. 25,000 பேர் கொண்ட படையணியொன்றை அனுப்பவும் அது காத்துக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவின் பாட்டுக்கு பக்கவாத்தியம் பாடுவது போல பிரிட்டிஷ் பிரதமர் தனது 5000 பேர் கொண்ட இராணுவத்தை தாயாராக வைத்திருப்பதாகக் கூறியுள்ளார். அவுஸ்திரேலியாவும் தனது பங்கிற்கு ஐ.நா. வேண்டிக் கொள்ளும் பட்சத்தில் படைகளை அனுப்பத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

தார்பூர் மக்கள் அமெரிக்கப் பிரஜைகளோ, கொலின் பவலின் குடும்பத்தார்களோ அல்லர். இவ்விடயத்தில் அமெரிக்காவின் தலையீடு அரசியல் ரீதியானதும், பழிவாங்கும் நோக்கத்தையும்கொண்டதாகும். அமெரிக்காவின் பயங்கரவாத நாடுகளின் பட்டியலில் சூடானுக்கு மூன்றாம் இடம் இருப்பது பலருக்கும் தெரிந்த விடயம். எப்படியேனும் சூடானுக்கு எதிரான தண்டனையை அவசரமாக வழங்கிவிட வேண்டும் என அமெரிக்கா துடித்துக் கொண்டிருக்கிறது. சூடானை ஆக்கிரமிப்பதற்கு ஆதரவாக அமெரிக்க செனட் சபையில் 37 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சூடானைப் பொறுத்தமட்டில் அது தார்பூர் யுத்தத்தில் தலையிட்டு அங்கு நடைபெறும் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வர வேண்டும். இல்லாவிட்டால் அமெரிக்க இராணுவத்தின் ஆக்கிரமிப்பு தவிர்க்க முடியாது போய்விடும். சூடானும் இதனை நான்கு உணர்ந்தே உள்ளது.

தார்பூரில் இயங்கிவரும் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையும் நடவடிக்கையிலும் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கையிலும் சூடான் அரசாங்கம் வேகமாக ஈடுபட்டு வருகிறது. தன்னிடமுள்ள 46,000 தொன் உணவு மற்றும் ஒரு கோடி பெறுமதியான மருந்துப் பொருட்களை விநியோகிக்க ஏற்பாடுகளை அது செய்துள்ளது. இது செப்டெம்பர் மாதம் வரை போதுமானது.

ஆனால், அமெரிக்கா இதில் திருப்தி காணுவதாக இல்லை. சூடானின் உதவிகள் தார்பூரைப் போய்ச் சேரவில்லை என அமெரிக்கா குற்றம் சாட்டுகிறது. சர்வதேச நிவாரணப் பணிகள் நடைபெற சூடான் தடையாக இருப்பதாக அது சொல்லி வருகிறது.

ஆனால், தார்பூர் மாநில ஆளுநர் இதனை மறுத்துள்ளார். சர்வதேச நிவாரணக் குழுக்கள் குறிப்பிடுவது போன்ற எந்தத் தலையீட்டையும் சூடான் அரசாங்கம் மீது சேறுபூசுவதற்காகவே அவை இவ்வாறு கூறுவதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் சூடான் இஸ்லாமிய இயக்கத்தின் செல்வாக்கிற்கு உட்பட்ட ஒரு நாடு. இஸ்லாமிய ஷரியா இங்கு அமுலில் உள்ளது. ஒரு காலத்தில் அமெரிக்கைப்பொம்மையாகச்செயற்பட்ட 'நமீரி'யின் அரசாங்கம் இஸ்லாமிய இயக்கத்தின் துல்லியமான திட்டத்தின் கீழ் 1987 இல் பதவி கவிழ்க்கப்பட்டது. 17 வருடங்களில் சூடானின் வளர்ச்சி ஏகாதிபத்திய நாடுகளையும் பிரமிக்கச் செய்தது.

சூடான் தற்போது எண்ணெய் வளம் மிக்க நாடுகளுள் ஒன்று. மத்திய கிழக்கு நாடுகளோடு சரிசமமாக எண்ணெய் ஏற்றுமதியில் ஈடுபட அது முயற்சித்து வருகிறது. தற்போதைய அதன் வருமானத்தில் 73சதவீதம் எண்ணெய் விற்பனை மூலம் பெறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சூடான் விவகாரத்தில் வேண்டுமென்றே அமெரிக்கா தலையிட பல காரணங்கள் உள்ளன. சூடானின் பூகோள அமைவிடம் மற்றும் வளங்கள் இதில் பிரதானமானவை. அதாவது 2 பில்லியன் அமெரிக்க டொலர்களை எண்ணெய் ஏற்றுமதியால் சூடான் பெற்றுக்கொள்கிறது. 2004 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஒரு நாளைக்கு 2 லட்சத்து 70 ஆயிரம் மசகு எண்ணெய் பீப்பாய்களை சூடான் உற்பத்தி செய்திருந்தது. இவ்வாண்டின் இறுதியில் இதனை 3 லட்சத்து 50 ஆயிரம் பீப்பாய்களாகவும், 2005 ஆம் ஆண்டு முடிவடையும் போது மசகு எண்ணெய் உற்பத்தியை ஒரு நாளைக்கு 5 லட்சம் பீப்பாய்களாக உயர்ந்த சூடான் அரசாங்கம் எண்ணியுள்ளது.

ஆனால், சூடானின் எண்ணெய் ஏற்றுமதியில் ஒரு துளியேனும் அமெரிக்காவுக்குச் செல்வதில்லை. இது தவிர சூடானில் வைரம், தங்கம் என பெறுமதி மிக்க வளங்கள் பொதிந்து கிடக்கின்றன.

ஏனைய நாடுகளை தனது ஏகாதிபத்திய மிரட்டல்களுக்குப் பணிய வைத்திருப்பது போல் சூடானையும் வைத்துக்கொள்ளும் முயற்சி அமெரிக்காவுக்கு இதுவரை பயனளிக்கவில்லை. எனவே, சூடானைத் துண்டாடி அதன் வளங்களை சுரண்டும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ளது.

சூடானின் வடக்கில் ''சூடான் மக்கள் விடுதலை இயக்கத்துக்கு'' நிதி மற்றும் ஆயுத உதவிகளை செய்து சூடானிலிருந்து அப்பகுதியைப் பிரித்தெடுக்க அமெரிக்கா பலவாறாக முயற்சித்தது. இஸ்ரேலின் தலைசிறந்த ஆலோசகர்கள் அங்கு சென்று அனைத்துத் திட்டங்களையும் தீட்டிக்கொடுத்தனர்.

20 வருடங்களாக நடைபெற்ற போர் சமாதான ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் முடிவுக்கு வந்தது. இது ஒரு வகையில் அமெரிக்காவுக்குக் கிடைத்த ஒரு தோல்வியே

தற்போது தார்பூரில் ஏற்பட்டுள்ள ஆயுதக் கிளர்ச்சியைப் பயன்படுத்தி சூடானின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட அமெரிக்கா முயற்சித்து வருகிறது. தார்பூரில் ஆயுதங்களை வைத்துக்கொண்டு சண்டையிட்டுக் கொள்ளும் குழுக்களை அடக்குவதற்கு போதிய அவகாசத்தை சூடான் அரசாங்கத்துக்கு கொடுக்காது அமெரிக்கா தலைமையிலான இராணுவத் தலையீடு ஒன்றை அது வலியுறுத்தி வருகிறது.

தார்பூரை விடவும் அதிக மனித அழிவுகளையும், செலவையும் ஏற்படுத்திய சூடான் மக்கள் விடுதலை இராணுவத்துடனான 20 வருட கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முயற்சிக்காத அமெரிக்கா தற்போது மாத்திரம் அவசரமாகத் தலையிட முன்வந்திருப்பதன் இரகசியம் இதுதான்.

அமெரிக்காவின் இந்த முயற்சியை சூடான் சரியாகப் புரிந்துகொண்டுள்ளது. தனது நாட்டுக்குள் வெளிநாட்டுப் படைகளை அனுப்ப முயற்சித்தால் அதனை எதிர்த்துப் போராடுவது தவிர வேறு வழியில்லை என எச்சரித்துள்ள சூடான் வெளிநாட்டு அமைச்சர் தமது நாடு இன்னுமோர் ஈராக்காக மாறும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தார்பூர் பிரச்சினை

தார்பூரில் உள்நாட்டு யுத்தம் என்பது இன்று நேற்று ஏற்பட்டதொன்றல்ல. 1932 ஆம் ஆண்டளவிலேயே இது உருவெடுத்து விட்டது. தார்பூரின் குடிகளான அரபுக்கள் மந்தை வளர்ப்பதிலும் ஆபிரிக்க கோத்திரத்தவர் பயிர்ச்செய்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர். அரபுக்களின் மந்தைகள் ஆபிரிக்க கோத்திரத்தவர்களின் நிலங்களுக்குள் நுழைவதால் அதிகமான சண்டைகள் ஏற்பட்டன.

1964 இல் ''தார்பூர் எழுச்சி முன்னணி'' என்ற பெயரில் ஒரு குழு தோன்றி அப்போதைய அரசாங்கத்துக்கு எதிராக போராட்டமொன்றைத் தொடங்கியது. தார்பூரில் தோன்றிய குழுக்களுக்குத் தேவையான நவீனரக ஆயுதங்கள் அனைத்தும் எல்லை நாடுகளான லிபியா, ஷாட் ஆகியவற்றிடமிருந்து வந்து சேர்ந்தன.

அண்டை நாடான 'ஷாட்' டில் உள்நாட்டு யுத்தம் தொடங்கிய போது பெருந்தொகையான ஆயுதங்கள் கள்ளத்தனமாக தார்பூருக்குள் எடுத்து வரப்பட்டன. இதனால் தார்பூரில் இருந்த குழுக்கள் வலுப்பெற்றன. என்றாலும், தார்பூரின் புவியியல், காலநிலை, அங்குள்ள கோத்திர அமைப்பு காரணமாக எந்தவோர் அரசாங்கத்துக்கும் இப்பகுதியை முழுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாது உள்ளது.

தார்பூரின் அடிப்படை அபிவிருத்தி தொடர்பாக சூடான் அரசாங்கம் கரிசனை அற்றிருந்தமையும், இங்கு ஏற்பட்ட வரட்சியும் இக்குழுக்களுக்கு மத்தியில் இருந்த பூசலை மேலும் அதிகப்படுத்தின. இந் நிலையில் இதனைக் கட்டுப்படுத்துவதற்காக சூடான் அரசாங்கம் தனது இராணுவத்தை அனுப்பி வைத்தது.

தார்பூரில் உள்ள அரபுக் குழுக்களுக்கு உதவி செய்வதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என தார்பூர் ஆளுநர் முஹம்மத் உஸ்மான் பாக்கிர் குறிப்பிடுகிறார். குறிப்பாக 'தன்ஜவீத்' எனப்படும் குழுவுக்கும் அரசாங்கத்துக்கும் எந்த உறவும் இல்லை என்பதே அவரின் கருத்து. தார்பூரில் சண்டையை நிறுத்துவதற்காக சூடான் அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட இராணுவத்தினருள் 80 வீதத்தினர் ஆபிரிக்க கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள் என்றும், தானும் அக்கோத்திரங்களுள் ஒன்றைச் சார்ந்தவன் என்றும் முஹம்மத் உஸ்மான் பாகிர் தெரிவித்துள்ளார்.

'தன்ஜவீத்'என்ற சொல் அனைத்து அரபுக்களையும் குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் ஒரு சொல். இதில் அரசாங்கத்தில் உள்ளவர்களையும், இராணுவம், பொலிஸ் மக்கள் பாதுகாப்புப் படைகளில் உள்ள அரபுக்களையும் குறிக்கும்.

ஆனால், தார்பூரில் இப்பெயரால் வழங்கப்படும் ஒரு குழு நாசகார வேலைகளில் ஈடுபட்டு வருகின்றது. இதற்கெதிராக சூடான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

நன்றி- அல்-ஹஸனாத்.

இடம் மாற்றம்

கியுமடிகா இலவச பற்சிகிச்சை நிலையம்

இது வரைகாலமும் 2 ஆம் குறுக்குத் தெருவில்

இயங்கி வந்த கியுமடிகா இலவச பற்சிகிச்சை நிலையம்

06.09.2004 திங்கள் முதல்

10A, கத்தீட்ரல் ஸ்ரீட்

(CATHEDRAL STREET) யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு இடம் மாற்றஞ் செய்யப்படுகிறது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம். நாளை (06.09.2004) திங்கட்கிழமை முதலாக சிகிச்சைகளும் ஆரம்பிக்கப்படும்.

10A, கத்தீட்ரல் ஸ்ரீட் யாழ்ப்பாணம் (35982) நிர்வாகி கியுமடிகா

உங்கள் வாழ்நாள் முழுவதும்

நிலைத்து நிற்கக்கூடிய அழகிய நிறங்களுடனும்

பலவித சித்திர வேலைப்பாடுகளுடனும் கூடிய

உயர்தர சுவர்/தரை ஓடுகள்

.... இன்னும் பல அளவுகளில்!

யாழ் நகரில்

பின்வரும் விற்பனை நிலையங்களில்

பெற்றுக்கொள்ளலாம்.

கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதி

NEW KAMAAL CERAMICS,
இல. 37 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2085

JAFFNA CERAMICS,
இல. 2C ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3667

VENKE IMPEX,
இல. 27/3 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6738

லங்கா வோல்டைல் லிமிரெட்,
215, நாவல வீதி, கொழும்பு-5.
தொ.பே: (011) 2 805460/(011) 2 806450

நீடித்து நிலைக்கும் அழகுமயம்

சதுட கொண்டம்கள்

இருவருக்கும் இன்பம் தரும்

சதுட கொண்டம்கள் இருவருக்கும் இன்பம் தரும்

இரத்மலானையிலிருந்து மாலைதீவுக்கு 'எக்ஸ்போ ஏயாரின்' விமான சேவை

வாடகைக்கு அமர்த்தும் திட்டத்தின்கீழ் கடந்த 31ஆம் திகதி முதல் பறப்பு

சுமார் முப்பது வருடங்களின் பின்னர் முதல் தடவையாக இரத்மலானையிலுள்ள கொழும்பு விமான நிலையத்திலிருந்து சர்வதேச விமானப் பயணத்துக்கான பயணிகளை ஏற்றிக்கொண்டு விமானம் ஒன்று மாலைதீவுக்குப் புறப்பட்டது.

'எக்ஸ்போ ஏயார்' விமான சேவை நிறுவனம் பொழுதுபோக்கு விரும்பும் ஒரு தொகுதி பயணிகளை ஒருநாள் உல்லாசப் பயணமாகக் கடந்த 31ஆம் திகதி மாலைதீவுக்கு விமானத்தில் கூட்டிச் சென்று திரும்பியது.

வாடகைக்கு அமர்த்தும் (Charter Flights) விமான சேவைத் திட்டத்தின்கீழ் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தப் பயணம் அன்று காலை 8.15 மணிக்கு இரத்மலானை விமான நிலையத்திலிருந்து ஆரம்பமானது. அன்றிரவு 11.15 மணிக்குத் திரும்பி இரத்மலானைக்கு வந்து சேர்ந்ததுடன் பயணம் முடிவுற்றது.

இந்த உல்லாசப் பயணத்திட்டத்திற்கான பொதியில் மாலைதீவின் உல்லாச ஹோட்டல் ஒன்றில் பயணிகளே தமக்குத் தாமே பரிமாறிக் கொள்ளும் மதியபோசன விருந்து, மாலைத் தீவுத் தலைநகர் மாலேயைச் சுற்றிவரும் உல்லாசப் பயணம் ஆகியவையும் அடங்கியிருந்தன.

விமானங்களை வாடகைக்கு அமர்த்தும் திட்டங்களின் கீழ் சர்வதேச சேவைகளை வழங்குவதற்கு சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையால் அனுமதி அங்கீகாரம் வழங்கப்பட்ட உள்ளூர் விமான சேவை நிறுவனங்கள் மூன்றில் ஒன்று என்ற பெருமையும், அந்த நிறுவனங்களில் சர்வதேச விமான சேவையை முதலில் நடத்திய ஒரே நிறுவனம் என்ற தகுதியையும் 'எக்ஸ்போ ஏயார்' நிறுவனமே பெற்றுக்கொள்கின்றது.

''இந்த விமான சேவை குறித்து முன் விளம்பரங்கள் இல்லை; ஆனால், மக்கள் பங்களிப்போ எதிர்பார்க்காத உச்சம்'' — என்று உண்மையை வெளிப்படுத்துகின்றார் எக்ஸ்போ ஏயாரின் இயக்குநரும், சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரியுமான ஷப்ரி மரிக்கார்.

''இரண்டு அல்லது மூன்று நாள் பயணத் திட்டம் அடங்கிய வாடகைக்கு அமர்த்தும் விமான சேவையை மாலைதீவுக்கு ஒழுங்காக நடத்தலாம் என்று நாம் இப்போது உறுதியாக நம்புகிறோம். இந்த வர்த்தக முயற்சிக்கு நல்ல வரவேற்பு இருக்கும் என்பது நிச்சயம்.

''மாலைதீவிலுள்ள பிரபல உல்லாசப் பயண விடுதிகளுடன் இணைந்து, அங்கும் வர்த்தகத்தை உயர்த்தும் விதத்தில் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகளை நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

''இதேபோன்ற வாடகைக்கு அமர்த்தும் விமான சேவைகளை சென்னை, திருவனந்தபுரம், திருச்சி, பெங்களூர் போன்ற இடங்களுக்கு நடத்தும் திட்டமும் ஆராயப்படுகின்றது'' — என்றார் அவர்.

''இரத்மலானையிலிருந்து இச்சேவையின் ஆரம்பம் உள்ளூர் விமான சேவையில் ஒரு புதிய பாய்ச்சல்.

''சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் இயக்குநர் நாயகம், சுங்கத் திணைக்கள இயக்குநர் நாயகம், குடிவரவு — குடியகல்வு கட்டுப்பாட்டாளர், விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் அமைப்பின் தலைவர் ஆகியோருக்கும் அவர்களின் பணியாளர்களுக்கும் மற்றும் இரத்மலானை விமான நிலைய நிர்வாகம் மற்றும் அதன் ஊழியர்களுக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். இந்தச் சர்வதேச சேவைக்கான சுங்கப் பரிசோதனை மற்றும் குடிவரவு — குடியகல்வு ஒழுங்குகளை அவர்கள் நன்கு செய்திருந்தனர்'' — என்று எக்ஸ்போ ஏயாரின் விற்பனை, சந்தைப்படுத்தல் இயக்குநர் சிராஜ் முகமட் தெரிவித்தார்.

''பிராந்திய விமான சேவைகளை ஒழுங்குபடுத்தக் கூடியதாக இரத்மலானை விமான நிலையம் எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்யப்படலாம் என்பது எமது நம்பிக்கை. கட்டுநாயக்காவிலுள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்குச் செல்வதற்கு எடுக்கப்படும் நேரத்துடன் ஒப்பிடுகையில் இந்த இரண்டாவது சர்வதேச விமான நிலையம் பல சாதக அம்சங்களைக் கொண்டது.

''விமானப் போக்குவரத்து அமைச்சு, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் விமான நிலையங்கள் — விமான சேவைகள் அமைப்பு போன்றவை இந்த இரத்மலானை விமான நிலையம் உட்பட பல உள்ளூர் விமான நிலையங்களை அபிவிருத்திச் செய்வது குறித்து ஆராய்ந்து வருகின்றன என்று அறியவருகின்றது'' — இப்படி சிராஜ் முகமட் மேலும் தெரிவித்தார்.

சூரியகாந்தி
உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
05-09-2004

தமிழர்களுக்கான தீர்வு



"ஜனநாயகத்திற்காகக் குரல் கொடுத்தவர்களும் இந்நாட்டில் இருந்தனர். எனது தந்தையார் ஆட்சிக்கு வரமுந்திய ஆண்டுவரை இருமொழிகளின் சமத்துவத்திற்காக குரல் கொடுத்தவர்களில் அவரும் ஒருவர். இறுதியில் பேரினவாதக் கூச்சல்களுக்கு எதிராக நின்று தாக்குப்பிடிக்க முடியவில்லை"

இவ்வாறு 1998ஆம் ஆண்டு பத்திரிக்கை ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார் சந்திரிகா குமாரதுங்க.

அப்போது ஒரு பலமான நாடாளுமன்றப் பெரும்பான்மையுடன் இருந்தவர். தற்போது கூடாத கூட்டத்துடன் கூடி படாத பாடு பட்டுக்கொண்டு இருக்கின்றார் சந்திரிகா. அந்தக் கூட்டு இணைந்த ஐ.ம.சு. முன்னணியாலேயே நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்கமுடியாமல் உள்ளது. ஜே.வி.பியின் தயவில் ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார். இதனால் அதன் எடுபாட்டுக்கெல்லாம் வளைந்து கொடுக்கவேண்டியநிலை. முன்பு சந்திரிகா கூறியதுபோல் இப்போது அவரே பேரினவாதக் கூச்சல்களுக்கு படாதபாடு படுகின்றார்.

இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சில் தொங்கியுள்ளது சமாதானத்தின் நகர்வுகள். இடைக்கால நிர்வாகம் தொடர்பில் புலிகளுடன் பேசினால் தமது ஆதரவினை விலக்கிக்கொள்வோம் என்கிறது ஜே.வி.பி. ஐ.தே.கட்சியோ புலிகளுடன் அவ்வாறு பேசினால் நிபந்தனைகள் ஏதுமற்ற ஆதரவு வழங்கத்தயார் என்கிறது. பின் அனுரா பண்டாரநாயக்காவின் கருத்தினால் அதனைத் திருப்பிப் பெற்றுக்கொண்டது.

போருக்கான ஏற்பாடா? சந்திரிகாவின் அடுத்த நகர்வு என்ன? மறைந்து போகவுள்ள பண்டார நாயக்காவின் அரசியல் பரம்பரையை காப்பாற்றிக்கொள்வதா? இன்னுமொரு பலமான கேள்வியும் உள்ளது. சமாதானத்தின் பிரியர்கள் என்று தம்மை இனங்காட்டிக்கொண்டுள்ள சர்வதேசத்தின் அடுத்த நகர்வுகள்தான் என்ன?

சிறிலங்காவிற்கு பலநாடுகள் ஆயுதம் வழங்க முன்வந்துள்ளன. சீனாவின் முன்னணி ஆயுத விற்பனை நிறுவனமான



நொறின்கோவுடன் (Norinco) 1995 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் 2000 ஆம் ஆண்டு முடிவடைந்தது. 2001 ஆம் ஆண்டு சமாதானத்துடன் புதுப்பிக்கப்படாமல் இருந்த ஒப்பந்தத்தினை கடந்த 9 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தலைமையில் சீனா சென்ற குழுவினர் பீஜிங்கில் வைத்துப் புதுப்பித்தனர்.

ஜனாதிபதியின் பதவி. அடுத்து யாரை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப் போகிறார்கள். சந்திரிகாவின் தம்பி அனுராவையா? அல்லது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையா? பிரதமர் பதவியை ராஜபக்ஷவுக்கு வழங்கும்போது இராஜினாமாக் கடிதம் வாங்கிய பின்னரே பதவியை வழங்கியவர் சந்திரிகா.

கட்சி வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டவர் என்பதுடன் கட்சியில் உள்ளவர்கள் மட்டத்தில் அதிக செல்வாக்குப் பெற்றவர். சுருக்கமாகச் சொன்னால் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராய் நிற்க அதிக தகைமை இவருக்கே உண்டு.

அனுரா பண்டாரநாயக்கா, ஐ.தே.கட்சியில் இருந்தபோது சந்திரிகாவான சந்திரிகாவை பலமாக எதிர்த்து சாடி பேசியவர். எந்த உறவை தற்போது ஜனாதிபதி உதறித் தள்ள விளைகின்றாரோ(ஜே.வி.பி.) அவர்களுடன் ஐக்கியமாகியுள்ளார் அனுரா. ஐ.ம.சு. முன்னணி உருவாக முன்னர் ஜே.வி.பியுடன் இணைந்து ஜனாதிபதியை எதிர்த்து ஜே.வி.பியின் மேடைகளில் பேசியவர் அனுரா.

ஓர் உறுதியான கொள்கை நிலைப்பாடு இல்லாமல் அலையும் அனுராவை ஜனாபதி வேட்பாளராக்க கட்சியில் உள்ளவர்கள் சம்மதிப்பார்களா? இவைபோக பரம்பரையாகப் பயணித்து வந்த கட்சியினைக் கைவிட சந்திரிகா தயாரா என்பதும் கேள்விக்குறி. தற்போது இன்னும் ஒரு கருத்து நிலவுகின்றது. தற்போதுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்கிவிட்டு அதிகாரமுள்ள பிரதமர் ஆட்சியினை மேற்கொள்வது என்று. இது பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

அவர்கள் யாரைப் பற்றியும் கவலைகொள்ளப்போவதில்லை. இதற்கு மேற்படி அரசுகள் இலங்கை மீதும் பிறநாடுகள் மீதும் மேற்கொண்ட நடவடிக்கைகள் உதாரணமாகின்றன. இதனைவிட இன்னுமொரு சிறந்த உதாரணம் ஜோர்ஜ் பெர்னாண்டஸ். 1997 டிசெம்பர் மாதம் சிறிலங்காவின் ஈழத்தமிழர்கள் ஒருங்கிணைப்பிற்கான சர்வதேச மாநாடு(ICSETS) நடைபெற இரண்டு நாள்களுக்கு முன்பு இதனை தடைசெய்யுமாறு இந்திய உளவுத்துறையால் அப்போதைய குஜ்ரால் அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. அதனையும் மீறி மாநாட்டினை நடத்தினார் பெர்னாண்டஸ்.

- சி.கேசவன் -

ஈழத்தமிழர்களின் அவல நிலை தொடர்பாக அவர்கள் மீது சிங்கள இராணுவம் மேற்கொள்ளும் கொடுமைகளை இந்தியா கண்டிக்காமல் பாராமுகமாக இருப்பது வெட்கக்கேடான விடயம் என மத்திய அரசைச் சாடினார்(இது தொடர்பான செய்திகள் பத்திரிகைகளில் முக்கிய இடம் பிடித்தன அப்போது)
அப்போது பெர்னான்டஸ் சமதாக் கட்சித் தலைவராக இருந்தவர். பின் கடந்த

புலிகளின் பலத்தில்தான் தங்கியுள்ளது

இங்கு ஐ.தே.கட்சியின் நகர்வு சற்று வித்தியாசமாகச் செல்கிறது.
பின்னர் ஜே.வி.பியுடன் சமரசப்போக்கு தன்மையினை வெளிகாட்டிக்கொண்டு, தனது



போக்கில் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார் சந்திரிகா. அதன் ஒரு கட்டம்தான் கட்சியின் தலைமைப் பதவி இராஜினாமா. அந்த இடத்திற்கு தீவிர புலி எதிர்பாளரான சந்திரிகாவின் சொற்கேட்டு நடக்கும் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவை நியமித்துள்ளமை இங்கு குறிப்பிடப்படவேண்டும்.

புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத் திட்டத்திற்கு மாற்றீடாக சந்திரிகாவும் அவரது கட்சி ஆலோசகர்களும் இணைந்து தயாரித்த மாற்றுத்திட்டத்தினை புலிகள் ஏற்கப்போவதாக இல்லை.

அண்மையில் கிளிநொச்சியில் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்த கருத்துகள் இதனையே சொல்லிநிற்கின்றன.
சமாதானத்தின் தற்போதைய நிலை என்ன?

அண்மையில் பதவியேற்ற இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சாந்த கோட்டே கொடவினால் நியமிக்கப்பட்ட மாவட்ட இராணுவத் தளபதிகளின் மாற்றம். யாழ். மாவட்டத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சுனில் – சந்திரபாலவை தொண்டர் படைகளின் தளபதியாக்கி கொழும்புக்கு அனுப்பிவிட்டு திருகோணமலை 22ஆவது டிவிஷன் படைப்பிரிவின் கட்டளைத் தளபதியான சுனில் தென்னக்கோனை யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதியாக நியமித்துள்ளார்.

இவர் இராணுவ, பீரங்கி, புலனாய்வு உளவியல் மற்றும் பிரிவுகளில் முக்கியமான ஒருவராகச் செயற்பட்டவர். அதிலும் தன்னை ஒரு சிறந்த புலானாய்வுச் செயற்பாட்டாளராக இனம் காட்டியவர். யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைவரங்களின் நகர்வுகளைக் கொண்டு பார்த்தால் இவரது மாற்றம் முக்கிய இடம்பெறுகின்றது.

இதேவேளை, வன்னிக்கான கட்டளைத் தளபதியாக இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் பரமி குலதுங்கவும் திருகோணமலைக்கு யாழ்ப்பாண பிரதித் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் குலதுங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்துள்ள அதிகாரிகள் வரிசைகளிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் புலிகளும் தமது புதிய படைப் பிரிவுகளை அறிமுகப்படுத்துவதோடு தமது இராணுவ சம நிலையையும் பேணிவருகின்றனர்.

பரம்பரை அரசியலை பாதுகாப்பாரா சந்திரிகா?

அடுத்த தேர்தலுடன் முடிவுக்கு வருகின்றது

சமாதானத்தின் பிரியர்களின் அடுத்த நகர்வு என்ன?

இலங்கை விடயத்தில் அதிக அக்கறை காட்டும் நாடுகளான அமெரிக்கா, இந்தியா இரண்டிலும் புதிய ஆட்சிப்பீடம். இந்தியாவில் புலிகளை ஆதரிக்கும் கட்சி



இணைந்த அரசு ஆட்சிப்பீடம் ஏறியுள்ளது. அடுத்து தமிழர்களின் மீது அனுதாப அலைகளை வீசி வரும் அமெரிக்காவின் ஜோன் கெரி (இவரே அடுத்த ஜனாதிபதி என்று கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன) இவர்களில் யார் ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றினாலும் இறைமையினைத் தீர்மானிக்கும் சக்திகளை அந்த நாட்டின் மத்திய புலனாய்வு அமைப்புக்களின் கொள்கை வகுப்பில் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே தமிழர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும்.

இல்லையேல் தமது நாட்டின் நலன்களைக் குறியாகக் கொண்டே செயற்படுவார்கள்.

பி.ஜே.பி.(P.J.P)அரசில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர். ஆனால், புதுடில்லியின் பாதுகாப்பு முறைமையை அனுசரித்துச் செல்லவேண்டியவர் ஆனார். ஆனால், அவரால் புதிதாக எந்த மாற்று நிலைப்பாடும் மேற்கொள்ளமுடியாமல் போனது.

இலங்கையின் மூன்று பிரதான கட்சிகளும் சர்வதேச அளவில் போட்டி போட்டுக் கொண்டுள்ள நாடுகளினைச் சார்ந்துள்ளன. பொ.ஐ.மு. இந்தியா சார்ந்த நிலைப்பாட்டையும், ஜே.வி.பி. சீனா சார்பு நிலைப்பாட்டையும்(செப்ரெம்பர் 3 தொடக்கம் 5 வரை நடைபெறவிருந்த ஆசிய நாடுகளின் அரசியல் கட்சிகளின் மாநாட்டுக்கு ஜே.வி.பியினருக்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது. சோமவன்ஸவும் நந்தன குணதிலகவும் பங்குபற்ற இருந்தனர். முன்பெல்லாம் கம்யூனிஸ்ட் கட்சியே பங்குபற்றும்).

அடுத்து ஐ.தே. கட்சி அமெரிக்க, ஐரோப்பிய சார்பு நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளது.

யார் எந்த சார்பு நிலைப்பாட்டினை கொண்டிருந்தாலும் தமிழர்களின் நீதியான கோரிக்கையினை எந்த வெளிச்சக்திகளும் பெற்றுத்தரப்போவதில்லை என்பது மட்டுமே உண்மை.

தமிழர் எதிர்பார்க்கும் தீர்வு புலிகளின் பலத்திலேயே தங்கியுள்ளது என்பதும் உண்மை.

உலக ஒழுங்கைத் தீர்மானிப்பதும் பலம்தான் என்கிறார் தேசியத் தலைவர்.

போர் பற்றிய பயமும் இல்லை——
சமாதானம் மீது நம்பிக்கையுமில்லை——
வினோதமான சூழலுக்குள் யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மக்கள் என்றுமில்லாத அளவுக்கு அரசியல் விவகாரங்களில் சலிப்படைந்து விட்டார்கள் என்பதை பல சமூகவியலாளர்கள் அவதானித்துச் சுட்டிக்காட்டியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உள்ளூர்ப்பத்திரிகைகளில் வர்த்தக, வாணிபச் செய்திகள், பொருளாதாரச் செய்திகள், கலை கலாசார விழாக்கள் சார்ந்த செய்திகள், விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள் போன்றவற்றை நோக்கி யாழ்.வாசகர்கள் காட்டும் ஆர்வத்திலும் அரசியல் விவகாரங்களில் காட்டும் ஆர்வம் பன்மடங்கு குறைந்துள்ளது.

திருவிழாச் சீஸனும் தனியார் ஊடகங்களும்

யாழ்.குடாநாட்டில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களான தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோவில், தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம், நல்லூர்க் கந்தன் ஆலயம் ஆகியவற்றின் வருடாந்த விழாக்கள் நடைபெறுகின்ற காலப்பகுதிகளில் பொதுவாகவே யாழ்.குடாநாட்டு மக்கள் தமது கவனங்களை கொண்டாடத் தளங்கள் நோக்கியும் சமயரீதியான அனுஷ்டானங்கள், விரதங்கள் நோக்கியும் திரும்பி விடுகின்றனர்.

ஆனால், யாழ்ப்பாணத்தை நோக்கி தனியார் தொலைக்காட்சி சேவையொன்றும் தனியார் வானொலி சேவையும் விஸ்தரிக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாண மக்கள் தமது 'சீஸன் திருவிழாக்கள் கொண்டாட்டங்களுக்கு' அப்பால் தமது பெரும் பகுதி நேரத்தை அந்த ஊடகங்களுடன் செலவு செய்து கொள்கின்றனர். அந்த ஊடகங்களில் செய்திகள், அரசியல் விவகாரங்கள் சார்ந்த கலந்துரையாடல்கள், விவாதங்கள் போன்றன வாரந்தோறும் சில நாள்களில் இடம்பெற்றாலும் மக்கள் தமது ஆர்வத்தை தென்னிந்தியத் தயாரிப்புக்களான நாடகங்கள் மீதும் திரைப்படங்கள் மீதும் செலுத்துகின்றனர்.

போர்ப் பீதியும் சமாதான நம்பிக்கையும் இழந்தனர்

இரு தரப்பும் தாமாகப் போரைத் தொடங்கமாட்டாது என்ற நம்பிக்கையில் போர்பற்றிய ஒருவித பீதிநிலையில் இருந்தும் மக்கள் மெல்ல மெல்ல விடுபடத்தொடங்கி விட்டனர். எவ்வாறு சமாதானம் பற்றிய நம்பிக்கையை இழந்த நிலையில் மக்கள் இருக்கின்றனரோ அவ்வாறே போர்பற்றிய பீதியையும் மக்கள் இழக்கத் தொடங்கி விட்டனர். போர் பற்றிய பயமோ சமாதானம் பற்றிய நம்பிக்கையோ இல்லாத நிலையொன்றை எட்டிக் கொண்டிருக்கும் யாழ்ப்பாண மக்கள் விழாக் களிலும், கொண் டாட்டங்களிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பயணங்களிலும் தத்தமது வீடு, கடை போன்றவற்றை நிறுவுவதிலும் புதுப்பிப்பதிலும் தமது காலத்தைச் செலவு செய்கின்றனர்.

யாருக்குமே விளங்காத புதுச் சூழல்

A-9 வீதி திறக்கப்பட்ட பின்னர் வந்து குவிந்துள்ள பல்வேறு பட்ட நுகர்வுப் பொருட்களை ஒப்பிட்டு 'ஆய்வுகள்' செய்வதிலும் நுகர்ந்து வெள்ளோட்டம் நடத்துவதிலும் ஈடுபாடு காட்டும் யாழ்ப்பாணத்து மக்கள் புதுப்புது வான்களிலும் கார்களிலும் குளிரூட்டிய பஸ்வண்டிகளிலும் அங்கு மாறி இங்கு மாறி விரைகின்றனர்.

- டன்ஸ்ரன் லூயிஸ் -

போருமற்ற - சமாதானமும் நிரந்தரமாய் அடையப்படாத - தற்போதைய சூழலின் யதார்த்தத்தை எப்படி எவருமே பிரதி பலிக்க முடியாத நிலை உள்ளதோ - அவ்வாறே சாதாரண பொதுசனங்களாலும் இதனை விளங்கிக்கொள்ள முடியவில்லை.

கரம் சிவந்த கர்ண நிர்வாகிகள்

மக்கள் தமது அகம் நோக்கிய பொருளாதார, சமூகச் செயற்பாடுகளை அதிகம் கவனிக்கத் தொடங்கியுள்ளனர். கல்விசார் பகுதியினர் பயிற்சிகள், கருத்தரங்குகள், பட்டறைகள் என்று ஓடித்திரிகின்றனர். யாழ்ப்பாண நிர்வாக அதிகாரிகள் கொழும்பி லிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வந்துபோகும் பல்வேறு நிறுவனங்களினதும் அமைப்புக்களிலும் பிரதிநிதிகளுக்கு புள்ளி விவரங்களையும் அறிக்கைகளையும் சமர்ப்பித்துச் சமர்ப்பித்து 'கரம்நிறைந்த கர்ணர்களாக' கடமை வீரர்களாக, வீரவாட்டிகளாக வாகனங்களில் வலம் வருகின்றனர். இவர்களில் அனேகர், வயதிலும் அனுபவங்களிலும் "ஆகக் கூடியவர்கள்" என்பது தெரிந்த விடயமே!

புதுப்புது நிர்வாக முகங்கள்

யாழ்.குடாநாட்டின் பல்வேறு திணைக்களங்களிலும் உயர் நிர்வாக மட்டங்களில் நிர்வாக அபிவிருத்திப் பயிற்சி பெற்ற புதுப்புது நிர்வாக முகங்கள் நியமனம் பெற்றுள்ளன என்பது ஒரு நல்ல செய்திதான். இங்கு ஒரு இளம் தலைமுறை நிர்வாகிகள் பதவிக்கதிரைகளை அர்த்தமுள்ள வகையில் அலங்கரிக்கத் தொடங்கியிருப்பது புனர்நிர்மானம். பேண்தகு அபிவிருத்தி சார்ந்த விடயங்களில் பெருமளவு ஊக்கியாக அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

வீதிகள் இயமதூதர்களின் பரிசோதனைக் களங்களா?

அதிகரித்துள்ள வாகனப் போக்குவரத்து நெரிசல் - யாழ். நகரத்தையும் அங்கிருந்து விரியும் யாழ். - வவுனியா வீதி (கண்டி வீதி), காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி என்பனவற்றில் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. தற்பொழுது முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் மோட்டார் சைக்கிள்களும், வேறு மோட்டார் வாகனங்களும் பன்மடங்கு அதிகரித்துள்ளன. மேலும் எரிபொருள் என்பனவற்றை சுமந்து வரும் நீளமான கனரக வாகனங்களின் விசைத்தாக்கங்களும் யாழ்ப்பாணத்து வீதிகளின் அமைப்பு முறைக்குப் பொருத்தமானதாக இல்லை. அதிகரித்த வாகனங்களின் நெரிசல்களும் கனரக வாகனங்களின் அவசரப் போக்குவரத்துக்களும் யாழ். குடாநாட்டு வீதிகளை "இயமதூதர்களின்" பரிசோதனைக் களங்களாக்கியுள்ளன. அண்மையில் யாழ்ப்பாணம் மருத்துவ மனையிலுள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் மருத்துவ நிபுணர் தயாளன் அம்பலவாணரின் நெறிப்படுத்தல் பங்குபற்றுதலுடன் வீதி விபத்துக்கள் தொடர்பான கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அதில் மருத்துவ நிபுணர், வீதி விபத்துக்கள் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துச் செல்லும் போக்கை தெளிவுபடுத்தியதுடன் தடுப்பதற்கான வழிவகைகளையும் விளக்கினார். அவரது கரிசனைகள், அக்கறைகள் அனைவருக்கும் பயன்பட வேண்டும். அங்கு யாழ். மேலதிக அரச அதிபர், புள்ளிவிவரங்களுடன் தாம் எதிர் கொள்ளும் சவால்களை விளக்கினார்.

அவசரப்பயிற்சி மையங்கள்

அதேவேளை அரச துறைகளில் பயிற்சிக்காக நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கான பயிற்சி வழங்கும் மையங்களையும் வள ஆளணிகளையும் ஒழுங்குபடுத்துவதில் இளைஞர் சேவை திணைக்களத்தைச் சேர்ந்த சில அதிகாரிகள் கடும் அவசரத்தில் ஆங்காங்கு ஓடித்திரிந்ததையும் அவதானிக்க முடிந்தது. யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவாகியுள்ள நூற்றுக்கணக்கான பட்டதாரிகளுக்கு ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள பயிற்சி வழங்கும் மையங்கள் அவசரகதியில் உருவாகியுள்ளன. இந்த மையங்களில் திறமையுள்ள அரச அதிகாரிகளும் நிர்வாகிகளும் உருவாகுவார்களா? அல்லது வெறும் கதாப்பிரசங்க மையங்களாக இவை இலக்கினை எய்தாமல் தோற்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். அவநம்பிக்கைகளுடனும் சில நம்பிக்கைகளுடனும் யாழ்ப்பாணம் இடைநிறுத்தமின்றி இயங்கிக்கொண்டே இருக்கிறது.

ஆத்மீக அனுபவங்களை எதிர்நோக்கும் மனிதப் பிறவிகளே நாங்கள்

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின்(CHRD) ஆலோசகராக இருக்கும் திருமதி சுசிலா ராஜா தற்போது நல்லூரில் தங்கியுள்ளார். இவர் 35 வருடங்களுக்கு மேல் பிரித்தானியாவில் வாழ்ந்தவர். பல நிறுவனங்களில் ஆலோசகராக இருந்தவர். சமூகவியலில் M.A. பட்டம் பெற்ற இவர், முகாமைத்துவத்திலும் ஆலோசகர் பயிற்சி பெற்றவர். இத்தகைய ஒருவர் ஆத்மீகத்திலும் மிக ஈடுபாடு கொண்டு நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு மிக அருகில் இருந்துகொண்டு, NALLUR KANTHASWAMY - A SPIRITUAL EXPERIENCE என்ற ஆங்கில நூலை எழுதி வெளியிட்டுள்ளார். பெண்கள் உரிமையில் நாட்டம், அவர்களின் வாழ்க்கையில் உயர்வை ஏற்படுத்துதல் என்று பல துறைகளில் ஆளுமைகளைக் கொண்டுள்ள அவர், ஆத்மீகத்தில் எவ்வாறு நாட்டம் வந்தது என்பதனை விவரித்தார். உதயனுக்கென அவர் வழங்கிய செவ்வி இங்கே பிரசுரமாகிறது.

கேள்வி: வணக்கம். தாங்கள் இங்கிலாந்தில் 35 வருடத்துக்கு மேல் வாழ்ந்தவாகள். பல நிறுவனங்களின் ஆலோசகர். முகாமைத்துவத்தில் பல பயிற்சிகள் அளித்துள்ளீர்கள் என அறிந்துள்ளேன். அப்படியான தாங்கள் எவ்வாறு ஆத்மீகத்தில் ஈடுபட்டீர்கள் என்று அறியலாமா?

பதில்: வணக்கம். நான் பல வருடங்கள் ஐக்கிய இராச்சியத்தில் வாழ்ந்த பின்னர். இலங்கையில் அமைதி நிலைமைகள் தோன்றியவுடன் இலங்கைக்கு வந்தேன். நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு இரண்டு வருடங்களின் முன்னர் வந்தபோது. தீராதத்தன்று தீர்த்தக்கேணி அருகில் உலாவிக்கொண்டிருந்தேன். அப்போது தீர்த்தக் கேணியில் இருந்து பலர் நீரை அள்ளி மற்றவர்கள் மேல் ஊற்றினார்கள். என் மீதும் தீர்த்தத்தை அள்ளி ஊற்றி முற்றாக நனைத்து விட்டார்கள். நான் திடுக்கிட்டு அவ்விடத்திலேயே நின்றுவிட்டேன். இதற்கு நான் கோபப்படவோ எதிர்விளைவு காட்டவோ இல்லை. இது ஒரு வழமையான கலாசாரம்தான். ஒரு வரைச் சுத்தமாக்கும் நிகழ்வு போல் இருந்திருக்கலாம். இதன்பின்னர் தொடர்ந்ததுதான் ஆத்மீக அனுபவங்கள்.

கேள்வி: இந்த ஆத்மீக அனுபவங்கள் தான் இந்த ஆங்கில அனுபவ நூலை எழுதத் தூண்டிய நிகழ்வுகளாக இருந்திருக்கலாம் என நினைக்கிறேன்.

பதில்: ஆம். நான் ஒழுங்காக நல்லூர் கந்தனைத் தரிசிக்கச் சென்றேன். அருகிலேயே ஒரு வீட்டில் இருந்து கொண்டு. ஒவ்வொரு திருவிழாக்கும் சென்றேன். முடிந்தபோதெல்லாம் கோவிலிலேயே தியானம் செய்தேன்.

கேள்வி: இந்நூலை எழுதியுளீர்கள் இதற்கு ஏதாவது காரணமுண்டா?

பதில்: இரண்டு வருடத்திற்கு முன்னர் இங்கு வந்தபோதே எனக்கு சண்முகனில் ஈடுபாடு இருந்தது. ஆழ்ந்த பக்தி இருந்தது. சண்முகார்ச்சனையைக் காண்பது. ஆறு பஞ்சாலாத்திகளையும் ஒன்றுசேரக் காண்பது என்னைப் பரவசப்படுத்திவிடும். நான் பரவசமடைந்துவிடுவேன். நல்லூரில் ஒரு சண்முகார்ச்சனை செய்ய விரும்பிக் கேட்டபோது அதற்குப் பல நாள்கள் காத்திருக்கவேண்டும் என்று சென்னார்கள். நான் திரும்பிச் சென்று கொழும்பில் எனது தாயாருடன் நின்றபோது. அம்மாவின் தொலை பேசியில் ஒரு நாள் ஒரு குருக்களின் குரல் ஒலித்தது.

'உங்கள் வீட்டில் யாரோ சண்முகார்ச்சனை காண விரும்பினர்களாமே. எமது கோயிலில் சண்முகர்ச்சனை செய்யலாம் என்று அவர் கூறினர். அந்த முருகன் கோயிலுக்குச் சென்று நாங்கள் சண்முகார்ச்சனை செய்தோம். ஆனாலும் இது எவ்வாறு நடந்தது அவர் எப்படி எமது எண்ணுக்கும் போன் செய்தார் போன்ற விவ்ரங்கள் இன்னும் எனக்கு விளங்காதவையாகவே உள்ளன. 'சண்முகப்பிரியா' என்பது எனக்கு விருப்பமானது.

பெண்கள் உரிமையில் நாட்டம்

கேள்வி: நீங்கள் ஆன்மீகத்தை உங்களது நிறுவன நிகழ்ச்சிகளோடு எவ்வாறு சேர்த்துக் கொள்கிறீர்கள்?

பதில்: நான் முன்னர் 150 நிறுவனங்களோடு பலநாடுகளில் தென் அமெரிக்கா -2

முகாமைத்துவம் சமூகவியல் நிபுணர் சுசிலா ராஜா சொல்கிறார்

நவம்பர் 2003 இல் மலேஷியாவில் நடக்க விருந்த அருள்மிகு முருகன் சர்வதேச மாநாட்டில் சமர்ப்பிப்பதற்காக நல்லூர்க் கந்தசாமி கோயில் பற்றி ஓர் ஆய்வுக் கட்டுரை தயாரிக்குமாறு இந்திய நிறுவனத்தினால் கேட்கப்பட்டேன். அதனால் நல்லூர்க் குமரன் சமூகத்துடன் நான் இணைந்துகொண்டேன். நான் சங்கமம் கேட்பதில் பல அருமையான நேரங்களைச் செலவிட்டுள்ளேன். நற்சிந்தனைப் பாடல்களைக் கேட்டுள்ளேன். குமரனோடு ஈடுபாடு கொண்ட பல அறிஞர்களையும் பக்தர்களையும் சந்தித்தேன். எனது நண்பி சாந்தினி இந்த ஆத்மீகப் பயணத்தில் உறுதுணையாய் வந்தார். எனது முழு அனுபவமும் இந்த அதிசயமான ஆத்மீகப் பயணத்தின் ஓர் ஆரம்பமே. இது இந்த உலக வாழ்வின் உண்மையான தன்மைகளை விரியச்செய்யும் உள் உணர்வுகளையும் அனுபவங்களையும் தருகின்றன. இவற்றை நான் உங்கள் அனைவருடனும் பகிர்ந்துகொள்ள எடுத்த முயற்சியே இந் நூலாக வடிவெடுத்தது.

கேள்வி: இந்த நூலை எழுதும்போது வேறு யார் யாரைச் சந்தித்தீர்கள்?

பதில்: கோவில் முகாமையாளரைச் சந்தித்தேன். குருக்கள் தனது ஆத்மீக அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார். தேரடியில் மாஸ்டர் என்பவரையும் சேந்தன். கனகரத்தினம் என்பவர்களையும் சந்தித்தேன்.

சண்முகார்ச்சனையில் பரவசப்பட்டு விடுவாராம்

கேள்வி: சண்முகப பிரியா என்ற பெயரில் வருடம். பிரித்தானியா 35 வருடம் ஆலோசகராக இருந்திருக்கின்றேன். 'சிலம்பொலி' என்ற ஒரு மாறுதல்களை ஏற்படுத்தும் குழுவுடன் சேர்ந்து வேலைசெய்தேன். இலங்கைத்தமிழருக்கென பல உதவிகளை இங்குள்ள நிறுவனங்களுக்கு அனுப்பியுள்ளோம். (TWDM-(TAMIL WOMEN DEVELOPMENT MOVENT) என்ற நிறுவனத்தின் மூலம் பெண்கள் உரிமைகள், பிரச்சினைகள், தேவைகள், திறன்களைக்கட்டி எழுப்புதல் எனப்பலவற்றை லண்டனில் செய்தோம்.

நான் முகாமைத்துவ ஆலோசகராக இருந்தபோதிலும் பெண்கள் உரிமை போன்றவற்றில் அதிக அக்கறை கொண்டேன். கடந்த இரண்டு வருடமாக இலங்கையில் பெண்கள் உரிமை, நிறுவன அபிவிருத்தி, விழுமியங்களுடன் கூடிய பயிறிற்சிப்பட்டறைகள் இங்கு செய்கின்றோம். சமூக அணிதிரளல், தலைமைத்துவம் வலுவு,ட்டல் போன்றவற்றை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற இடங்களில் பயிற்சிப்பட்டறைகள் நடத்தினோம். பயிற்சியில் பங்குபற்றிய நிறுவனங்கள், பேரினால் பாதிக்கப்பட்ட, அத்துடன் சமூகப்பிரச்சினைகளை எதிர்நோக்கும் சமூகம் சார்ந்த நிறுவனங்களுக்கான வலையமைப்பினூடாகத் தெரிவுசெய்யப்பட்டன.

ஆறுமாத இடைவெளியில் சமூக ஊக்கவியல் வலுவு,ட்டல், மனித உரிமைகள், தலைமைத்துவம், பால்ரீதியான அபிவிருதி, நல்ல ஆளுமை, முரண்பாடுகளைத் தீர்த்தல், முகாமைத்துவம் போன்ற பயிற்சிகள் நடைபெற்றன. எதிலும் முழுமை காணவேண்டும் என்ற நோக்கோடு ஆத்மீகமும் இதனோடு சேர்க்கப்பட்டது. பயிற்சிப்பட்டறைகளில் பாவித்த தந்திரோபாயங்களை உள்ளடக்கிய கோட்பாடு பின்வருமாறு அமையும்:-

★ தனிநிர்வாக சமூக மட்டத்தில் ஆத்மீகம்

★ ஆத்மீகம் - நாங்கள் ஆத்மீக அனுபவங்களை எதிர்நோக்கும் மனிதப் பிறவிகள்.

★ ஆவல் - தேவையைப் பலரது பங்களிப்புடன் அடை வது.

★ புரணத்துவம் - யாவரும் ஆத்மீக ரீதியில் ஒருவரோடொருவர் தொடர்பு கொண்டுள்ளனர்.

★ இலகுவான திட் டம் - இலக்கைத்திட்டத்தின் மூலம் அடைவது

★ கடமையும் பொறுப்பும் - எமது கடமைகளையும். பொறுப்பையும் நிறைவேற்றுதல்.

★ குழுவேலை - கதம்பமான சமுதாயத்தை ஒன்றிணைப்பது.

★ விழுமியங்கள் - மனிதரின் இயல்பான விழுமியங்களை நம்மிலும் மற்றவர்களிலும் வெளிப்படுத்தல்.

★ ஆனந்தம் - வாழ்க்கையை ஆனந்தமாகக் கொண்டுசெல்லுதல்.

★ மீளாய்வு - எமது கனவுகள் நனவாகினவா? மீளாய்வு செய்து நன்றி கூறுவோம்.

மனித நேய அடிப்படையில் நடத்தப்பட்ட பயிற்சிப்பட்டறைகள் இங்கு பங்கு பற்றியோரின் கற்பனைகளைத் தூண்டியதுடன் அவர்களின் திறமைகளையும் அதிகரிக்க வைத்துள்ளது. ஆத்மீக முகாமைத்துவத்தில் புதுவிதமான தந்திரோபாயம் தன்னைத்தானே அறிதல். கடைசியில் எல்லாம் ஒன்றுடன் ஒன்று தொடர்புற்றிருத்தலை உணர்தல். மரபணு (DNA) எல்லோருக்கும் வேறு வேறு. இதனை விட வெளியில் இருக்கும் உடலைத் தாண்டி அகநோக்கு நோக்கினால்தான் அபிவிருத்தியும் முன்னேற்றமும் இருக்கும்.

இங்கு ஒரு 21 வயது இளைஞரை உமது எதிர்கால நோக்கமென்ன என்று கேட்டேன். அவர் சொன்னார் 'சாவதுதான்' என்று. மேற்கு நாடுகளில் அப்படிச் சொல்லமாட்டார்கள். தமிழர்களின் பண்பாட்டைப்பற்றிச் சொல்கிறார்கள்; மனித நேயத்துடன் இருப்பது தான் பண்பாடு. ஆத்மீகம் என்பது இறைசக்தியைக் கண்டுபிடித்தல்; தன்னுக்குள்ளும். பிறருக்குள்ளும்.

தம்மைப் புரிந்துகொள்ளாத் தன்மை

கேள்வி: இங்குள்ள நிறுவனங்களில் ஆத்மீகம் சார்ந்த அணுகுமுறைகள் இருக்கின்றனவா?

பதில்: உண்மையான உலகம் எல்லாவற்றையும் உள்ளடக்கிய புரணத்துவமானது. இதனைத்தான் (ENTER FOR SOCHIAL ACTION) இல் ஆலோசகராக இருந்தபோது) உணர்ந்தேன். எல்லா நிறுவனங்களிலும் எதனையோ அடையப்பார்க்கிறார்கள். ஒவ்வொருவரும் தான்தான் பெரியவர் என்று நினைத்துக் கொண்டு POWER TACTICS, POWER GAMES விளையாடுகிறார்கள். இதனை ஏன் செய்கிறார்கள் என்றால் அவர்கள் தம்மைத்தான் புரிந்து கொள்ளவில்லை என்பதாகும். உடம்புடன் சம்பந்தப்பட்ட EGOதான் "நான்" எனக் கருதுகின்றேன். அதனைக் கவனிப்பதுதான் TO MESSAGE THE EGO எல்லா நிறுவனங்களிலும் செய்யப்படுகின்றது எனலாம். வீடுகளில். கோவில்களில் - எவ்விடத்திலும் இது இருக்கின்றது. (பழைய காலத்தில் தேவைப்பட்டிருக்கலாம்)

புதிய உலகத்திற்கு இது தேவையில்லை. இதனை மாற்றவேண்டும். தன்னைத்தானே அறிதல்வேண்டும். காற்றடைத்த பையை வைத்துக் கொண்டு எத்தனை பேருக்கு எவ்வளவு காலத்திற்கு பு,ச்சாண்டி காட்ட முடியும். எனவே "நான்" என்பதை விட்டு இறைசக்தி பல நிலைகளில் வெளிப்படக்கூடியதாக இருக்கவேண்டும். அன்பான. ஆதரவான. விட்டுக் கொடுக்கின்ற. சந்தோசமான (ஆடுதல். பாடுதல்) வெளிப்பாடுகளாக இருக்கவேண்டும். இவ்வாறான பண்புகளை நாம் விட்டு விட்டோம் என்றுதான் சொல்லவேண்டும். இவற்றை அடிப்படையாகக்கொண்ட பல வேலைப் பட்டறைகளை நடத் துகின்றோம். பெற்றோர் பிள்ளைகளுக்குப பாதுகாவலராக இராது கட்டுப்பாடு விதிப்பவர்களாக இருக்கின்றார்கள். இதனை மத்திய வகுப்பு அளுத் தம் எனலாம். இந்த மத்திய வகுப்பு எண்ணமே நெருக்கீடாக இருக்கின்றது. இதுதான் சமூகம். ஒருவருடன் ஒருவர் சேர்ந்து வாழவேண்டும். நான் பெரிது. மற்றவர் சிறிது என்ற எண்ணமே இருக்கக் கூடாது. பெண்கள் தம்மிடமுள்ள இறைசக்தியைத் தேட வேண்டும். எதிலும் பு,ரணத்து வமான அணுகுமுறை இருக்கவேண்டும்.

ஆங்கிலத்தில் அவர் எழுதிய நூல்

எல்லாவற்றிற்கும் மேலே ஆத்மீகம்

கேள்வி: உங்கள் வாழ்வில் ஆத்மீகத்தை இணைத்துக்கொள்ளவேண்டும் என்ற பு,ரணத்துவமான தேடல் எப்போது ஏற்பட்டது.

பதில்: நான் நீண்டகாலம் பல வசதிகளோடு வாழ்ந்துவிட்டேன். பலரைச் சந்தித்துவிட்டேன். இங்கிலாந்தில் BERNIE GRANT என்ற கறுப்பினத் தலைவரோடு தொழிற்கட்சியில் செயற்பட்டேன். எனது பெற்றோருடன் அந்த நாளில் திருநெல்வேலியில் இருந்து கொண்டு சுண்டுக்குளி பெண்கள் பாடசாலையில் படிக்கும்போது கலையில். நடனத்தில் ஈடுபடுத்தினார்கள். அரங்கேற்றமும் நடந் தது. பின்னர் மேற் படிப்பு வெளிநாடுக ளில் பலவிதமான பயிற்சிகள் செய்துள் ளேன். 60 மைல் சைக்கிளில் ஓடியி ருக்கிறேன். பரசூட்டில் குதித்திருக்கிறேன். என்னதான் இருந்தபோதும் இதற்கு மேல் என்ன என்று நினைக்கும்போது ஆத்மீகம்தான் வருகின்றது.

செவ்வி:
இரா.சந்திரசேகரசர்மா

மனிதன் பு,ரணத்துவத்தை அடைவதற்குப்பிறந்தவன். தானே போட்ட விலங்கிற்குள் கட்டுப்பட்டுக் கிடக்கின்றான். மந்தைக் கூட்டமாகவே காணப்படுகின்றான். சுதந்திரமான ஆத்மாவாக வருவதுதான் நோக்கமாக இருக்கவேண்டும். வாழ்க்கையில் அழுது. விழுந்து. மகிழ்ந்து. ஈடுபட்டு அனுபவத்திருக்கின்றேன். உண்மையில் வாழ்ந்தவர்கள் பக்குவப்பட்டவர்களாக இருப்பார்கள். வாழாதவர்கள் பக்குவப்படவில்லை என்பது அர்த்தம்.

பெண்கள் படிப்பை முடித்துவிட்டு கல்யாணத்திற்காகக் காத்திருக்கிறார்கள். வாழவில்லை. நான் படித்தவற்றைக் கொண்டு மற்றவர்களுக்கு உதவலாம் என முயல்கின்றேன். இவற்றிலிருந்து நானும் கற்றுக் கொள்ளலாமா? எவ்வளவோ கற்றுக்கொண்டேன் நல்லூர்க்கந்தனில் ஈடுபாடு கொண்டு விட்ட பின்னர் நான் எவ்வளவோ உணர்ந்து கொண்டேன். கற்றுக்கொண்டேன்.

(முகாமைத்து ஆலோசகர் என்ற முறையில் நல்லூர் கந்தசுவாமி கோவிலை எவ்வாறு பார்க்கிறீர்கள் என்று கேட்டபோது திருமதி சுசிலா ராஜா கூறிய பக்திபுர்வமான பதில்களையும் அவரது கதிர்காமக்கந்தன் பாத யாத்திரை அனுபவங்களையும் அடுத்தவாரம் பார்க் கலாம்.)

வீதிகளா? கொல்களங்களா...?

"டேய் மச்சான் றெயின் வருகுதடா கெதியா இங்காலை கரைக்கு வா"

காங்கேசன்துறை வீதியால் ஒருவருக்கு ஒருவர் சமாந்தரமாக எனக்கு முன்பாக துவிச்சக்கர வண்டிகளில் பயணஞ்செய்து கொண்டிருந்த இரண்டு இளைஞர்களுள் ஒருவன் தனக்கு வலப்பக்கமாக வீதியின் மையப்பகுதிக்கு அண்மித்து வந்துகொண்டிருந்த மற்றைய இளைஞனுக்கு விடுத்த எச்சரிக்கைத் தன்மையான அவசர உத்தரவைக் கேட்டு நானும் நிமிர்ந்தபோது எதிரே நீலநிறம் கொண்ட பவுஸர் வாகனம் அதனை அடுத்து சிவப்பு நிறமான பவுஸர் வாகனம் ஆகியன வடக்குத் திசை நோக்கி அதிக வேகத்துடன் புழுதி கிளப்பியபடி விரைந்து மறைந்தன.

அது ஒரு காலை வேளை. மாணவர்கள், அலுவலர்கள், தனியார் தொழிற்றுறையினர் எனப் பலதரப்பினரினதும் மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கரவண்டிகள், வான்கள், கார்கள் என்பனவற்றால் காங்கேசன்துறை வீதி நிரம்பி வழியும் நேரம்! கொழும்பிலிருந்து எரிபொருள் ஏற்றிக்கொண்டுவரும் மிகநீளமான பவுஸர் வண்டிகள் அவ்வேளையிலேயே காங்கேசன்துறை வீதியால் காங்கேசன்துறை எரிபொருள் களஞ்சியத்தை நோக்கி புதாகரமான இரைச்சலுடன் பயங்கரமான இறுமாப்புடன் விரைவது வழக்கமாகும்.

புகையிரதப் போக்குவரத்துக்குரிய தண்டவாளங்கள் எல்லாம் இருந்த இடங்கள் தெரியாமல் தொலைந்து பதினைந்து ஆண்டுகளாகப் போகின்றன. தண்டவாளங்கள் இருந்த இடங்களில் கொட்டில்களும் கோயில்களும் முளைத்துவிட்டன. கந்தர்மடம் ஆத்திகுடிப் பிள்ளையாரின் பக்தர்கள் புகையிரதப் பாதையை அண்மித்தே ஆலயத்தை விஸ்தரித்து உள்ளனர் என்பது உதாரணமாகும். கீரையும் வாழையும் நட்டுப் பயன்பெறுவோரும் உண்டு. தண்டவாளம் போன பாதையை தமது காணிப்பகுதிகளோடு சேர்த்து உறுதி எழுதி விற்க முற்பட்டவர்களும் உண்டு. புகையிரதம் யாழ். குடாநாட்டுக்கு வருவதாகக் கனவுகூட வரும் நிலையில்லாத கட்டத்தில் றெயின் வருதடா என்று அவன் சொன்னதைக் கேட்டதும் விநோதமாக இருந்தது. அந்த இளைஞர்களில் ஒருவன் அவ்விரு பவுஸர் வண்டிகளையும் புகையிரதத்துக்கு ஒப்பிட்டமைக்குக் காரணம் அவற்றின் மிதமிஞ்சிய நீளமும் அக்கனரகங்களின் போக்குவரத்தில் ஏற்படும் அதிர்வு, இரைச்சல் என்பனவும் ஆகும்.

மிகவும் மொத்தமான நீளமான காட்டுமரங்களை ஏற்றிய கனரகமான நீளமான 'றெயிலர்களை' பின்னே பொருத்திய வாகனங்களும் வேகமாகச் செல்கின்றன. இராணுவ வாகனங்கள் விரைகின்றன. ஆக பத்தொன்பது இருபது வயதுகளுடைய சாரதிகள் செலுத்தும் பல சிறுரக வான்கள் சீறிப் பறக்கின்றன.

A-9 வீதியால் யாழ். குடாநாட்டுக்குள் நுழையும் அத்தனை வாகனங்களினது சாரதிகளிடமும் முதல்நாள் இரவு அல்லது முதல்நாள் பகலும் இரவுமாக ஓய்வு, நித்திரை இன்றி கொழும்பு போன்ற தென்பகுதி நகரங்களிலிருந்து பயணித்த களைப்பும் தூக்க மயக்கமும் குடிகொண்டபடியேதான் இருக்கும். சிலரிடம் மதுமயக்கமும் இருக்கலாம்.

இவற்றைவிட இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகள், தனியார் போக்குவரத்துச் சேவை வான்களுடன் போட்டி போட்டுக்கொண்டு ஒன்றையொன்று துரத்திச் செல்வது மற்றுமொரு ஆபத்துக்கட்டமாகும். இவற்றுக்கெல்லாம் ஈடுகொடுப்பதற்கு எங்கள் வீதிகளின் அகலம் போதாது.

காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி, மானிப்பாய் வீதி போன்ற யாழ். குடாநாட்டின் முக்கியத்துவம்மிகுந்த போக்குவரத்துப் பாதைகளில் தினமும் சிறுவிபத்துகளிலிருந்து பெரிய விபத்துகள் வரையில் நான்குதொடக்கம் பத்துவரையில் நிகழ்கின்றன.

இவற்றுள் இறக்கும் தறுவாயில் உள்ளோரும் கடுங்காயங்களுக்கு உள்ளாகுவோரும் தான் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்படுகின்றனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி A-9 வீதி திறக்கப்பட்டு ஏறத்தாழ இரண்டரை வருடங்கள் உருண்டோடி விட்டநிலையில், யாழ். குடாநாட்டை எறிகணைகளும், பீரங்கிகளும் பிய்த்தெறியும் அபாயநிலை இல்லாதநிலையில் குடாநாட்டின் இன்றைய வீதிகளே கொலைக்களங்களாகியுள்ளன.

கடந்த முப்பதாம் திகதி திங்கட்கிழமை மாலை ஐந்துமணி, யாழ். போதனா வைத்தியசாலைக்கு அண்மையிலுள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவ, மாணவியர், பல்துறை சார் பிரமுகர்கள், சாதாரண பொதுமக்கள், செய்தியாளர்கள் ஆகியோர் மத்தியில் விவரண விளக்கப்படங்களை கணனிப் பவர் பொயின்ற் தொகுப்பின் உதவியுடன் விளக்கவுரை நிகழ்த்தியபடி இருந்தார் சத்திரசிகிச்சை நிபுணர் தயாளன் அம்பலவாணர். யாழ். மருத்துவமனையின் மருத்துவ நிபுணரான இவர், வீதிவிபத்துகள் பற்றியே விளக்கிக்கொண்டிருந்தார்.

விபத்துக்கள் தரும் வியப்பு

சர்வதேசச் சவால்

சர்வதேச ரீதியாக இடம்பெறும் பல்வேறு வகையான விபத்துகள் மத்தியிலும் வீதி விபத்துகள் 2020 ஆம் ஆண்டில் சாவுகளை விளைவிக்கும் இரண்டாவது பெரிய காரணியாகிவிடும் என்று கூறினார் அவர். இது ஓர் அகில உலகப் பிரச்சினை என்றும் அகில உலகத்துக்கும் சவால் என்றும் சுட்டிக்காட்டினார். உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளிவிவரத்தை ஆதாரம் காட்டினார்.

வீதி விபத்துகளைப் பொறுத்தவரையில் ஆசிய நாடுகளில் நிலைமை மேலும் மேலும் மோசமடைவதற்குரிய காரணங்களை அவர் விளக்கினார்.

ஆபத்துகளை விளைவிக்கும் சாரதிகள், அதிகரித்துப் பல்கிப் பெருகியுள்ள வாகனங்கள், ஊழல் மயப்பட்ட பொலீஸ்துறையினரின் சுயநலமித்தனங்கள் என்பன ஆசிய நாடுகளில் நிலைபெற்றுள்ளதைச் சுட்டிக்காட்டிய தயாளன் அம்பலவாணர், புள்ளி விவரங்கள் சிலவற்றை இவ்விடத்தில் ஆதாரப்படுத்தினார்.

யாழ்ப்பாண வீதிகளில் விபத்துகள்

இலங்கையில் வருடமொன்றுக்கு இரண்டாயிரம் பேர் வீதி விபத்துகளுக்கு பலிக்கடாக்கள் ஆகின்றனர் என்பதைத் தெரிவித்த மருத்துவநிபுணர், 1982, 2004 ஆகிய ஆண்டுகளை மையப்படுத்தி யாழ்ப்பாண மாவட்டத்தின் வீதி விபத்துகள் தொடர்பான நிலைமையை விளக்கமுயன்றார். 1982ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தின் சனத்தொகை 2004ஆம் ஆண்டின் யாழ்ப்பாணச் சனத்தொகையிலும் மிகவும் அதிகமாகும். ஆனால், வீதி விபத்துக்கள் 2004இல் தான் அதிகரித்த அளவில் உள்ளன. அதாவது மொத்த விபத்துக்களில் வீதிப் போக்குவரத்து விபத்துக்கள் 25% ஆகும்.

விபத்துக்களில் யாழ்ப்பாணம் கொழும்பை விஞ்சிவிட்டது

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பதிவுசெய்யப்பட்ட மொத்த விபத்துக்களில் 19% மாத்திரமே வீதி விபத்துக்களாகும். அதாவது கொழும்பை விட யாழ்ப்பாணம் வீதி விபத்துக்களை அதிக அளவில் சந்திக்கத் தொடங்கிவிட்டது என்று சத்திர சிகிச்சை நிபுணர் கூறியபோது, அனைவரும் வியந்தனர். யாழ்ப்பாணத்தில் மாதந்தோறும் மூன்று தொடக்கம் ஐந்து பேர் வீதி விபத்துக்களில் மரணிக்கின்றனர் என்று தெரிவித்த மருத்துவ நிபுணர், இந்நிலையில் சமூகத்துக்கு இந்த விபத்துக்களால் ஏற்படும் பின்னடைவுகளையும் விவரித்தார்.

க.வே.தனஞ்செயன்

★ விபத்துக்குள்ளாகும் ஒரு தனிப்பட்டவர் மட்டுமல்ல அவர் சார்ந்த முழுக்குடும்பமுமே துன்பப்படுகின்றது.

★ குடும்பத்தின் உழைப்பாளி முடங்குவதனால் அல்லது இறப்பதனால் உழைப்பு இழப்பு.

★ ஒரு வள ஆளணியாக அமைந்திருக்கக்கூடிய ஒருவர் இழக்கப்பட்டால் குடும்பப் பொருளாதாரத்துக்கு மட்டுமல்ல நாட்டின் பொருளாதாரத்துக்கும் இழப்பாகும்.

★ மருத்துவப் பராமரிப்புக்கு ஏற்படும் அதிகரித்த செலவு என்பன போன்ற பின்னடைவுகளையும் சவால்களையும் அவர் சுட்டிக்காட்டினார்.

வீதி விபத்துக்கள் எப்படி நிகழ்கின்றன?

வீதிப்போக்குவரத்து விபத்துக்கள் மனிதன் (Man), வாகனங்கள் (Vehicles), சூழல் (Environment) ஆகியவற்றுக்கிடையிலான ஒன்றுக்கொன்று பாதகமான தொடர்பால் ஏற்படுகின்றன. மனிதக் காரணிகள், சாரதிகளுக்கான போதிய பயிற்சியின்மை, வீதிகளின் ஒழுங்கீனங்கள், போக்குவரத்து வழிப்புணர்வு இன்மை, மதுப்பாவனை, நித்திரைமயக்கம் அல்லது களைப்பு, பொறுப்புணர்வு இன்மை, சேதப்பட்ட அல்லது பழுதடைந்த வீதிகள், வீதிப்போக்குவரத்து குறியீடுகள், அறிவித்தல்கள் அமைக்கப்படாத நிலைமை, முறையாகப் பராமரிக்கப்படாத பழுதுற்ற வாகனங்கள், அதிகரித்த போக்குவரத்து நெருக்கடி, பொலீஸ்துறையினரின் குறைபாடு, சட்டம், ஒழுங்கு அமுலாக்கத்தில் குறைபாடு போன்றன வீதி விபத்துக்களுக்கு காரணங்களாக இருக்கின்றன. இக்காரணங்கள் யாழ். குடாநாட்டில் தீவிரமாகவுள்ளன.

உயிரைப் பலிகொள்ளும் பயங்கர ஆயுதங்கள்!

போர் ஓய்ந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் உயிரைப் பலிகொள்ளும் பயங்கர ஆயுதங்களாக மோட்டார் சைக்கிள்கள் மாறியுள்ளன எனவும் அவர் சுட்டிக் காட்டினார். பதினெட்டு வயதுக்குட்பட்ட பல இளைஞர்கள் திரைப்படக் கதாநாயகர்கள் போல பாவனை செய்து மோட்டார் சைக்கிளில் வலம் வரத் துடிக்கின்றனர் எனவும் விவரணத்தில் காட்சியாகக் காண்பிக்கப்பட்டது.

பாடசாலைகளில் வீதிப்போக்குவரத்து தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டவேளைகளில் வழங்கப்பட்ட வினாக்கொத்துக்கள் தொடர்பாகவும் அவர் விவரித்தார்.

வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கான சிபாரிசுகள்

வீதிப்போக்குவரத்து விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு பின்வரும் விடயங்களை மருத்துவ நிபுணர் சிபார்சுகளாகத் தெரிவித்தார்.

★ விழிப்புணர்வை மேம்படுத்தல்.

★ சாரதிகளுக்கான ஒழுங்குகளையும் விதிகளையும் அமுலாக்குதல்.

★ சட்டம், ஒழுங்கைப் பேணுதல்.

★ பாடசாலை மட்டங்களிலிருந்து பாதுகாப்பான போக்குவரத்து முறைகளை ஊட்டுதல்.

★ அதிகரித்து வரும் வாகனங்கள், வீதிப்போக்குவரத்து நெருக்கடிகளுக்கு ஏற்ப வீதிகளை அகலப்படுத்துதல், பாதைகளை அதிகரித்தல்.

★ வீதிகளுக்கு வேகத்தணிப்பு ஒழுங்குகளையும் போக்குவரத்துக் குறியீடுகள், அறிவித்தல்களையும் நிறுவுதல். பல சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக மாணவர்களே வீதி ஒழுங்குவிதிகளைத் தீவிரமாக மீறும்வகையில் சைக்கிள்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் பிரயாணிக்கின்றனர் என்றும் சத்திரசிகிச்சை நிபுணர் சுட்டிக் காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விபத்துக்கள்	2004 (ஜூன் வரை)	1982
மொத்த விபத்துக்கள்	1288	743
வீதி போக்குவரத்து விபத்துக்கள்	316 (25%)	141 (19%)

தனிப்பட்ட ஒவ்வொருவரும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள், சுகாதாரத்துறையினர், பொலீஸ், மத்திய அரசு, மாகாண அரசு, உள்ளூராட்சி அமைப்பு, சம்பந்தப்பட்ட அரசாங்கத் திணைக்களங்கள், ஏனைய அரசசார்பற்ற உதவும் அமைப்புக்கள் யாழ்ப்பாணத்தின் போக்குவரத்து விபத்துக்களை தவிர்க்கத் தமது பங்கை வழங்கவேண்டும் என்று மருத்துவ நிபுணர் தயாளன் அம்பலவாணர் வேண்டுகோள் விடுத்தார்.

தமிழீழத்தில் இயற்கை அழிந்தால் சிங்கள தேசத்தையும் அது தாக்கும்

சுற்றுச் சூழல் நிலைமை பற்றி சூரியகாந்திக்கு கரிகாலன் செவ்வி

வட்டக்கச்சியில் இடம்பெற்ற விவசாயக் கண்காட்சியின்போது தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் உதயனுக்கு வழங்கிய பிரத்தியேகச் செவ்வி.

கேள்வி :- விவசாயக் கண்காட்சி குறித்து...?

பதில் :- வன்னிப் பகுதி விவசாயிகள் மிகப்பெரிய யுத்தத்துக்கு முகங்கொடுத்துப் பெரும் பொருளாதாரக் கஷ்டங்களையும் துன்பங்களையும் எதிர்நோக்கினார்கள். நெருக்கடிகளுக்கு மத்தியிலும் உள்ளூரிலே கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களைக் கொண்டும் ~ எரிபொருள் தட்டுப்பாடு அமுலில் இருந்தபோது உழவு மாடுகளைப் பயன்படுத்தி நீர்பாய்ச்சும் முறைகளைச் செயற்படுத்தியும் விவசாயம் செய்துவந்தவர்கள் எமது விவசாயிகள்தான்.

உர வகைகள் தடைசெய்யப்பட்டிருந்த நேரத்தில் இயற்கையாகக் கிடைக்கக்கூடிய உரங்களைப் பயன்படுத்தி விளைச்சலைப் பெற்று எமது மக்களைப் பட்டினிச் சாவிலிருந்து பாதுகாத்து ~ விடுதலைப் போரை வெல்லுவதற்குப் பக்கபலமாக நின்றவர்கள் விவசாயிகள்தான். எனினும், புதிய விவசாய முறைகளையோ, நவீன விவசாயக் கருவிகளையோ பார்ப்பதற்கும் ~ பயன்படுத்துவதற்கும் ~ பெற்றுக்கொள்வதற்கும் வன்னிப் பகுதி விவசாயிகளுக்கு வசதி இல்லாத சூழல் நிலவிவந்தது.

தென்பகுதியில் இப்பொழுது விவசாயம் நவீன மயப்படுத்தப்பட்டு ~ பல புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கின்றன. கூடிய இலாபம் தரக்கூடிய பயிர் இனங்கள் பலவும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. எனவே, அத்தகைய புதிய விவசாய முறைகளையும் பயிர் இனங்களையும் இயந்திரப் பொறிமுறைகளையும் எமது விவசாயிகளுக்கு அறிமுகம் செய்யும் நோக்கத்துடனேயே இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

கேள்வி :- பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விவசாயிகளுக்கு எத்தகைய பணிகளைச் செய்கிறது?

பதில் :- எமது தேசியத் தலைவர் அவர்கள் இந்த விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்த காலத்திலிருந்தே பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தையும் இதனுடன் இணைந்த ஒரு பிரிவாக வைத்துச் செயற்படுத்திக்கொண்டு இருக்கிறார்.

எங்களுக்கான சுயநிர்ணய உரிமையினைப் பெறுவதாக இருந்தால் பொருளாதார விடுதலையோடு கூடிய ஒரு தேசிய விடுதலைதான் எங்களுடைய மக்களைச் சொந்தக் காலில் நிற்கக்கூடிய சூழலை ஏற்படுத்தும் என்பது தலைவரது அசைக்கமுடியாத நம்பிக்கை.

விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்த காலத்திலிருந்தே ~ நாங்கள் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த பொழுது கூட தலைவர் அவர்கள் காட்டுக்குள் ஒரு பண்ணையை அமைத்து அதில் இளைஞர்களையும் இணைத்துக்கொண்டு அவர்களுக்கு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

இளைஞர்களுக்குப் போராட்டச் சிந்தனையை ஊட்டி அவர்களைப் போராளிகளாகத் திரட்டுவதற்குரிய ஒரு வழியாகவும் கூட இந்தப் பண்ணைமுறை காணப்பட்டது. விவசாயிகளையும் அவர்களுடன் இணைந்த மக்களையும் எங்களுடைய போராட்டத்துடன் இணைத்து வைத்திருப்பதன் ஊடாக நாங்கள் விடுதலையை வென்றெடுக்கலாம் என்று தலைவர் உறுதியாக நம்பினார்.

அதற்கு ஆதாரமாக கடந்த காலப் பொருளாதாரத் தடைகள் அனைத்தையும் முறியடித்துப் போராட்டத்தில் பெரும் வெற்றியை அடைவதற்கு விவசாயிகள் பங்காற்றியிருக்கின்றார்கள். அதற்காகத் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விவசாயிகளுக்குப் பக்கபலமாக நின்று செயற்பட்டு வருகிறது.

கடன் வசதிகளை வழங்குதல் இயற்கையான உரங்களைத் தயாரித்து விநியோகித்தல் போன்ற செயற்பாடுகளை எமது நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. விவசாயிகளின் நன்மை கருதி அவர்களுக்குப் பக்கபலமாக நின்று வேண்டிய உதவிகளைச் செய்துகொண்டு வருகிறது.

கேள்வி:- வன்னிப் பிரதேசத்திலுள்ள விவசாயிகள் எத்தகைய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள்....?

பதில்:- இப்பொழுது வன்னிப்பிரதேசத்துக்கு எல்லாப் பொருள்களையும் தடையின்றிக் கொண்டுவருவதற்குரிய சூழல் உருவாக்கப்பட்டிருக்கிறது. நிதித்துறை கூட விவசாய உள்ளீடுகளைக் கொண்டுவருவதற்குரிய தீர்வைகளை நீக்கியிருக்கிறது. எனவே, புதிய பயிரினங்களையும் நவீன பொறிமுறைகளையும் கொண்டுவருவதில் எந்தப் பிரச்சினைகளும் இருக்கவில்லை. ஆனால், அவற்றைக் கொண்டு வருகின்ற மார்க்கங்கள் தெரியாத நிலையில்தான் விவசாயிகள் இருக்கின்றார்கள்.

தென்பகுதியில் விவசாய உபகரணங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இருக்கின்றன. ஆனால், அவர்களுடனான தொடர்புகள் இல்லாத நிலை இருந்தது. இந்த விவசாயக் கண்காட்சி மூலமாக அந்தத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இங்கு வந்து கண்காட்சியைப் பார்வையிட்டு விவசாயிகள் இந்த உபகரணங்களைக் கொள்வனவு செய்து தருமாறு கேட்டிருக்கின்றார்கள். அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு நாங்கள் முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம்.

கேள்வி:- அரசின் உதவித் திட்டங்கள் ஏதேனும் விவசாயிகளுக்குக் கிடைக்கின்றதா?

பதில்:- விவசாயத்துறையை அரசு வடக்கு ~ கிழக்கு மாகாண சபைக்குக் கீழ் கொண்டுவந்திருக்கிறது. இதனால் நிதி உதவிகள் மிகவும் குறைவாகவே வழங்கப்படுகின்றன. அதனால் விவசாயத் திணைக்களங்களினால் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய உதவிகள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன.

அதிலும் வன்னியைப் பொறுத்தவரை இங்கு உரிய விவசாய அதிகாரிகளோ இன்னமும் நியமிக்கப்படவில்லை. அவர்களுக்கான காரியங்களே இங்கு ஒழுங்காக இல்லை.

'நியாப்' திட்டம் இங்கு ஓரளவுக்கு விவசாய அமைப்புக்களுக்கு ஊடாக விவசாயிகளுக்கு உதவி வருகிறது. இங்குள்ள குளங்களைப் புனரமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

கைத்தொழில் துறை வளர்ச்சி

கேள்வி:- கைத்தொழில் துறையில் வளர்ச்சி இங்கு எப்படி இருக்கிறது?

பதில்:- கைத்தொழில் துறையைப் பொறுத்தவரை இங்கு மிகவும் மந்தமாகவே இருக்கிறது. அதற்கான முக்கிய காரணம் இங்கு சந்தை வாய்ப்புகளும் மூலப் பொருள்களும் இல்லாமைதான். அத்துடன், கைத்தொழில் துறையில் உரிய பயிற்சிகளை வழங்கக்கூடியவர்களும் இங்கு இல்லை.

இருப்பினும் ஓரளவுக்காவது படிப்படியாக கைத்தொழில் துறையை வளர்த்தெடுப்பதற்கு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முயற்சிகளைச் செய்து வருகின்றது.

பனம் பொருள்களிலே உற்பத்தி செய்யப்படுகின்ற கைப்பணிப் பொருள்களுக்கு நல்ல கேள்வி ஏற்பட்டிருக்கிறது. அதனால், அதனை ஊக்குவித்து உற்பத்தியை அதிகரிப்பதற்கு நாங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

கைத்தறிப் புடைவைகள் உற்பத்திகள் ஒரு காலத்தில் இங்கு அமோகமாக இருந்தன. ஆனால், இப்போது வன்னியில் அந்தத் தொழில் மிகவும் அருகிவிட்டது. எனவே, அவ்வாறான தொழில்களுக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டி வளர்ப்பதற்கு நாங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

பனை வளம்

கேள்வி:- தமிழர் தாயப்பகுதிகளின் பனை வளம் குறித்து...?

பதில்:- தமிழீழப் பிரதேசங்களில் பனை வளம் வெகுவாக அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. யுத்த காலத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இராணுவம் வகை தொகையின்றி பனைகளைத் தறித்தது.இப்போதும் அங்கு இராணுவத்தாலும் தனியாரினாலும் பனைகள் அழிக்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில்தான் பனை அழிப்பு உச்சம்.



ஒரு சில அரச அதிகாரிகளும் இந்தப் பனை வள அழிப்புக்கு அனுசரணையாக இருக்கின்றார்கள் என்று எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அதனைப் பார்த்துக்கொண்டு நாங்கள் பேசாமல் இருந்துவிடமுடியாது. எனவே, அதனைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருக்கிறோம்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கிராம சேவையாளர்கள், பிரதேச சபைகளிடம் பனை அழிப்பைத் தடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. எனினும், அவர்களையும் மீறிப் பனைகளைத் தறிப்பதற்கு இராணுவமும் ஒத்துழைப்புக் கொடுக்கிறது. இன்று உலகளாவிய ரீதியில் இயற்கை அழிக்கப்படுவதைத் தடுப்பதற்கு எவ்வளவோ முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கின்றார்கள். ஆனால், ஸ்ரீலங்காவில் நிலைமை மோசமாகவே இருக்கிறது.

தமிழ்ப் பிரதேசங்களில் இயற்கை அழிக்கப்படும்போது அது சிங்கள தேசத்தையும் தாக்கும் என்பதை அரசு புரிந்துகொள்ளவேண்டும். இந்த விடயத்தில் மிகவும் பொறுப்புடன் செயற்படவேண்டிய தேவை இருக்கிறது.

கேள்வி:- பனை வளத்தை மீளக் கட்டியெழுப்புவதற்குப் பொருண்மியம் நடவடிக்கை எடுத்துள்ளதா?

பதில்:- ஆம். அழிக்கப்பட்ட பனை வளத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காகப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஒவ்வொரு வருடமும் மீள் நடுகையை மேற்கொண்டு வருகிறது. இருக்கின்ற பனைகளைப் பாதுகாப்பதற்கும் தீவிர அக்கறையுடன் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம்.

செவ்வி கண்டவர்: அற்புதா

கடந்த காலங்களில் இராணுவத்தால் அழிக்கப்பட்ட பனைகளை மீளவும் ஈடுசெய்வதற்கு எமக்கு எத்தனையோ ஆண்டுகள் தேவை. இருந்தாலும், எமது வளத்தைக் கட்டி வளர்ப்பதற்காகப் பொருண்மியம் இயலுமானவரை முயற்சிகளை மேற்கொள்கின்றது.

கேள்வி:- இன்றைய பொருளாதார நிலைமைகள் குறித்து.....?

பதில்:- இப்போது சமாதான காலமாக இருந்தாலும் மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியினால் அரசு செய்வதறியாது திணறிக்கொண்டிருக்கிறது.

எரிபொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. அதனால் எல்லாப் பொருள்களினுடைய விலைகளும் அதிகரிப்பதற்குச் சாத்தியங்கள் இருக்கின்றன.

எனவே, இன்றைய சமாதானச் சூழலில் நாங்கள் எங்களைப் பலப்படுத்திக் கொள்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றோம்.

அரசு எமது பகுதி மக்களின் சில விடயங்களில் இப்போதும் புறக்கணித்துக்கொண்டுதான் இருக்கிறது. உதாரணமாக விவசாயிகளுக்கான உரமானியம் வழங்கும் திட்டம் ஏனைய பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் தமிழீழப் பிரதேசங்களில் அது அறிமுகப்படுத்தப்படவில்லை.

இந்தநிலையில், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழ மக்களின் பொருளாதார வளத்தை மேம்படுத்தி அவர்களைத் தமது சொந்தக் காலில் நிற்கச் செய்வதற்குப் பல திட்டங்களை வகுத்துச் செயற்படுத்திக்கொண்டு வருகிறது.

சமூகச் செயற்பாடுகளில் இளைஞர்களது பார்வையும், சிந்தனையும் மாறவேண்டும்

சமூகமட்ட செயற்பாடுகளில் நமது இளைஞர்களின் பங்களிப்பிலும் பார்வையிலும் சிந்தனையிலும் மாற்றம் அவசியமானது என்கிறார் யாழ்.இந்துக் கல்லூரியின் உயர்தரம் கலைப்பிரிவு மாணவனான குமாரவடிவேல் குருபரன்.

கல்வி தொடர்பான எமது சமூக சிந்தனை வெகு விரைவாக மாற்றப்படாவிட்டால் சவால்களை எதிர்கொண்டு தாக்குப்பிடிக்கும் நிலைக்கு எங்கள் இளைஞர்களால் முன்னேற முடியாமற்போகும் என்றும் கூறுகின்றார் குருபரன்.

வெளிநாடுகளின் பிரதிநிதிகள் பலர் அங்கம் வகிக்கும் 'சமாதானத்துக்கான முன்னெடுப்பு' என்ற குழுமம் ஏற்பாடு செய்திருந்த 'இலங்கை மீதான பார்வை -2003' என்ற சர்வதேச மாநாடு கடந்த ஜூன் 19ஆம் திகதி முதல் 27 ஆம் திகதிவரை சிங்கப்பூரில் நடைபெற்றது. அந்த மாநாட்டில்

'சமாதானத்துக்கான குரல்' அமைப்பின் யாழ்.பிரதிநிதி குருபரன் கூறுகிறார்

யாழ்ப்பாணத்தின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டவர் குமாரவடிவேல் குருபரன்.
தென்னாசியாவுக்கான ஐக்கிய உலகக் கல்லூரிகள் இணைந்து உலக இளைஞர், யுவதிகள் மாநாட்டை ஆண்டு தோறும் நடத்திவருகின்றன.
2002 இல் 'காஷ்மீர் மீதான பார்வை' என்ற

அகில இலங்கை சிறந்த மாணவ முதல்வன் விருதை குருபரன் பெறுகிறார்.

தலைப்பில் இந்த மாநாடு நடைபெற்றது. அடுத்த ஆண்டு 'இலங்கை மீதான பார்வை' என்று தலைப்பிடப்பட்டு மாநாடு நடத்தப்பட்டது.

இந்த மாநாட்டில் 'சமாதானத்துக்கான குரல்' என்ற இளைஞர் அமைப்பு உருவாக்கப்பட்டு பல நாடுகளிலும் அது செயற்பட்டுவருகின்றது. அந்த வகையில் யாழ்ப்பாணத்திலும் 'சமாதானத்துக்கான குரல்' அமைப்பை ஸ்தாபிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார் மாணவன் குருபரன்.

கடந்த மே மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 2ஏ,பி சித்தி பெற்று யாழ். மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் மூன்றாவது இடத்தையும் பெற்றவர் இவர்.

'சமாதானத்துக்கான குரல்' அமைப்பின் செயற்பாடு மற்றும் சிங்கப்பூர் மாநாட்டின் நோக்கம், அதனூடான இளைஞர்களின் செயற்பாடு என்பன குறித்து அவர் வழங்கிய செவ்வியில் இருந்து...

கேள்வி:- 'இலங்கை மீதான பார்வை' என்ற மாநாடு உண்மையிலேயே இலங்கை விவகாரத்தின் மீது கவனத்தை ஈர்த்ததா?

பதில்:- ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, இந்தியா, சுவிற்ஸர்லாந்து உட்பட பல நாடுகளின் ஒருங்கிணைபபாளர்களான இளைஞர்கள் பங்குபற்றிய இந்த மாநாட்டில் 'சமாதானத்தில் இளைஞர்களின் பங்கு' என்ற தலைப்பில் இருபது நிமிடங்கள் உரையாற்றினேன். யாழ்ப்பாணத்தில் நலன்புரி நிலையங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட இளைஞர்கள் இருவரும் இந்த மாநாட்டில் பங்குகொண்டனர். உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்தவர்களின் அவலங்களை விளக்கி அவர்கள் பேசிய போது அது மிகவும் மனதை உருக்குவதாக அமைந்தது.

இலங்கையில் பிரச்சினை உள்ளது என்பதை வெளிநாட்டு இளைஞர்கள் தெரிந்து வைத்திருக்கின்றனர். ஆனால் தமிழர்களுடைய பிரச்சினைகளின் நியாயப்பாடுகள் பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லை.

கேள்வி:- இலங்கை இனநெருக்கடி தொடர்பான நிகழ்ச்சிகள் மாநாட்டில் இடம்பெற்றனவா?

பதில்:- மாநாட்டில் கலந்துகொண்ட இலங்கை ஒருங்கிணைப்பாளர்களை இன அடிப்படையில் பிரித்து சுதந்திரத்துக்கு முந்திய மற்றும் பிந்திய கால வரலாற்று நிகழ்வுகளையும் சம்பவங்களையும் தனித்தனியாக வெளிப்படுத்துமாறு கோரப்பட்டது. இதன் மூலம் சிங்கள, தமிழ் வரலாறு பற்றிய ஒரு பார்வை பார்வையாளர்களுக்குக் கிடைத்தது.

கேள்வி: சமாதானத் துக்கான குரல் என்ற அமைப்பின் செயற்பாடு எப்படி இருக்கும்?

பதில்: சமாதானத் துக்கான குரல் மூன்று முக்கிய விடயங்களில் கவனம் செலுத்தும். அவை -

1) உள்ளகரீதியாக இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் - புனர் வாழ்வு-

2) போரால் பாதிக்கப் பட்ட சிறார்களின் மறு வாழ்வு -

3) இனங்களுக்கு இடையிலான கலாசார ஊடாட்டம்
இந்த மூன்று முக்கிய விடயங்களிலும் 'சமாதானத்துக்கான குரல்' செயற்பாடுகளை முன்னெடுக்கும்.

இந்த அமைப்பின் யாழ்ப்பாணத்துக்கான பிரதிநிதியாகவும், தேசிய ஒருங்கிணைப்புக் குழுவிலும் நான் பணியாற்றவுள்ளேன்.

கேள்வி: சமாதானத்தின் குரலின் நடவடிக்கையாக யாழ்ப்பாணத்தில் எத்தகைய பணிகளை முன்னெடுக்கப் போகின்றீர்கள்?

பதில்: இளைஞர்களை முன்னிறுத்தி செயலமர்வுகளை நடத்தியுள்ளோம். யாழ் பாடசாலைகளின் மாணவ தலைவாகளுக்கான தேசிய ஒருமைப்பாட்டு செயலமர்வு சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவிகளின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டது.

தனித்தனியாக யாழ்ப்பாணத்திலும், தென்னிலங்கையிலும் இளைஞர்களின் சமூக செயற்பாடுகளை ஊக்குவிக்கத் திட்டங்கள் வகுக்கப்படவுள்ளன.

இலங்கையில் இளைஞர் நாடாளுமன்றம் ஒன்றை கூட்டுவதற்கான யோசனை ஒன்றை ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற இளைஞர் நாடாளுமன்றத்தின்போது முன்வைத்தோம். அது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

கேள்வி: யாழ்ப்பாண இளைஞர்களுக்கும் வெளிநாட்டு இளைஞர்களுக்கும் இடையே எத்தகைய வேறுபாடுகளை அவதானித்தீர்கள்?

பதில்: இங்கு உயர்தரக் கல்வி பெற வந்த பின்னர் கல்வியில் மட்டுமே முழுக் கவனத்தையும் செலுத்தும் நிலை காணப்படுகின்றது. ஆனால் வெளிநாடுகளில் கல்வியோடு ஏனைய செயற்பாடுகள் பலவற்றிலும் இளைஞர்கள் ஈடுபடுகின்றனர். கல்வி கற்கும் அதே நேரம் சமூகமட்டத்தில் சேவையாற்ற இளைஞர்கள் தயாராக இருக்கவேண்டும். சமூகமட்டத்தில் எமது இளைஞர்களின் பங்களிப்பும், பார்வையும், சிந்தனையும் மாற்றமடையவேண்டும். வெறும் புத்தகக் கல்வி எதிர்கால உலகின் சவால்களைச் சமாளிக்கப்போதாது. இளைஞர்கள் இவ்வாறு கல்வி மீது மட்டும் முழுக்கவனத்தையும் செலுத்துவதற்கு கல்வி பற்றிய எங்கள் சமூகசிந்தனையே காரணமாகின்றது.

சிட்னி பல்தேசிய இளைஞர் நாடாளுமன்றில் ஏனைய இலங்கைப் பேராளர்களுடன்...

கல்வி பற்றிய எங்கள் சமூகச் சிந்தனை வெகு விரைவிலேயே மாற்றப்படவேண்டியதாகவுள்ளது.

உயர்கல்வித் தெரிவில் பிள்ளைகளை பெற்றோர்கள் தங்கள் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப வழிநடத்துகின்றனர். இது கல்வி பற்றிய எமது சமூக சிந்தனையின் பிற்போக்குத்தனம் ஆகும்.

பெற்றோர்கள் சமூக அழுத்தங்களில் இருந்தும், கௌரவப் பிரச்சினைகளில் இருந்தும் விடுபடாதவரை கல்வித்துறையில் மாற்றம் நிகழவாய்ப்பில்லை.

இங்கு உயர்தரம் கற்க வரும் ஒரு மாணவனின் புறச்செயற்பாடுகள் அற்றுப்போவதற்கு பெற்றோர்களே காரணமாகயிருக்கின்றனர்.

கேள்வி: தங்களின் கல்வித்துறை தெரிவு பற்றி கூறுவீர்களா?

பதில்: யாழ். இந்துக்கல்லூரியில் உயர்தரக் கல்வி பயின்றுள்ளேன். ஜீ.சீ.ஈ. சாராணதரப் பரீட்சையில் பத்துப்பாடங்களிலும் அதிவிசேட சித்தியையும் இந்த ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் மூன்று அதிவிசேட சித்திகளையும் பெற்றுள்ளேன். உயர்தரத்தில் கலைத்துறையைத் தெரிவுசெய்வதில் பெற்றோர்கள் எனக்கு ஆதரவாக இருந்தார்கள். என்னை எனது வழியில் தட்டிக்கொடுத்து அவர்கள் காட்டிவந்த அக்கறைதான் என்னுடைய பரீட்சைச் சாதனைகளுக்கு காரணமாய் அமைந்தன.

கேள்வி: தற்கால உலகின் போக்கில் ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் பற்றி

இளைஞர் நாடாளுமன்றத்தின் மனித உரிமைக் குழுவின் ஏனைய உறுப்பினர்களுடன் குருபரன்.

என்ன கருகிறீர்கள்?

பதில்: இன்றைய உலகமயமாகுதலில் ஆங்கிலக்கல்வியின் அவசியத்தைப் புறக்கணிக்க முடியாது. ஆயினும் நாங்கள் இப்போது எமது தமிழ் மொழியில்தான் அதிக அக்கறை காட்டவேண்டி உள்ளது. தாய் மொழியின் தமிழ்மொழியின் - அவசியம், முக்கியத்துவம் இன்றைய இளைஞர்களால் உணரப்படுவதில்லை. இது தமிழ்மொழிக்கு ஒரு பெரும் வீழ்ச்சிக் கட்டம் ஆகும். எனவே ஆங்கிலத்திலும் சம அளவில் தமிழிலும் நாம் கவனம் செலுத்தவேண்டி இருக்கிறது.

கேள்வி: நாட்டில் சமாதானத்தை முன்னெடுப்பதற்கு பெரும் பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வரும் இவ்வேளையில் உங்களது 'சமாதானத்துக்கான குரல்' அமைப்பு சமாதானத்தை ஏற்படுத்துவதில் எத்தகைய பங்கு வகிக்கும்?

பதில்: சமாதானத்தின் குரலின் செயற்பாட்டு பங்காளர்களாக சிங்கள, தமிழ் இளைஞர்களே இருக்கப்போகின்றார்கள். அரசியல் மூலம் எட்டப்படும் சமாதானத்தைவிட அதற்கு அப்பால் சமூகங்களின் மட்டத்தில் புரிந்துணர்வின் ஊடாக உருவாகும் சமாதானமே நிலைபெற்றிடும். எனவே சமூகமட்டத்தில் இன ஐக்கியத்தை, சகோதரத்துவத்தை பேணும் திட்டங்களை 'சமாதானத்தின் குரல்' முன்னெடுக்கும்.

செவ்வி:
நேசகுமாரன்

சிரிக்க வைக்கும் விளம்பரங்கள்

அப்படியும் சில துப்பறியும் நாவல்கள் வந்திருக்கின்றன. ஒரு விபத்து நடக்கிறது. அந்த விபத்து உண்மையாக நடந்ததா அல்லது ஒரு பெருந்தொகையைக் காப்புறுதியாகப் பெறுவதற்காகக் சம்பந்தப்பட்டவர்களால் 'சோடிக்கப்பட்டதா' என்பதைக் கண்டறியவேண்டும். அதற்காக குறிப்பிட்ட காப்புறுதி அமைப்பைச் சேர்ந்த உளவுப் பிரிவினர் விசாரணைகள், ஆய்வுகள் என்று நடத்தி உண்மையைக் கண்டறிகிறார்கள். அதுவே அந்த நாவல்களின் சுருக்கம். யாரும் பொய்யான கோரிக்கையை வைத்து காப்புறுதி நலன்களைப் பெறமுடியாது.

திருட்டுக்கு - நெருப்புக்கு எதிராக என்றும், வாகனங்களாயின் அவை சுமந்து செல்லும் பொதிகளுடன் என்றும் (INSURED WITH GOODS) காப்புறுதிகள் மேற்கொள்வதுண்டு. ஆனால், அப்படியான அசம்பாவிதங்கள் நடந்தால் மட்டுமே அவைகளுக்குக் காப்புறுதி நலன்கள் கிடைக்கும்.

அதற்காக காப்புறுதி செய்யாமலும் இருந்துவிட முடியாது. எடுத்துக்காட்டாக நகைகள் அடகு பிடிக்கும் ஒரு நிறுவனம் திருட்டு - நெருப்புக்கு எதிரான காப்புறுதி செய்து கொள்ள

வேண்டும் என்றால், அதைச் செய்து, காலத்துக்குக் காலம் அதற்கான தவணைக் கட்டணத்தையும் செலுத்திக் கொண்டிருக்கவேண்டும். இல்லாவிட்டால் கதை நடத்துவதற்கான அரசாங்க அனுமதி அதற்குக் கிடைக்கமாட்டாது.

ஆயுள் காப்புறுதியைப் பொறுத்தவரை, காப்புறுதி செய்து கொண்டவர், ஒப்பந்தப்படி முதிர்வின்போது முழு நலன்களையும் பெறலாம். ஆனால், அவர் இடையிலே மண்டையைப் போட்டுவிட்டால் அப்பொழுதே முழு நன்மைகளும் கிடைக்கும். (சில வேளை அதிகப்படியாகவும் கிடைக்கும்) அத்துடன் தவணைப் பணமும் மேற்கொண்டு அவர் பெயரால் செலுத்த வேண்டியதில்லை.

அதற்காக ஆயுள் காப்புறுதி செய்துகொண்டவர்களை விரைவாகச் செத்துப்போங்கள் என்று நான் சொல்லுவதாக நீங்கள் நினைக்கக்கூடாது. அதற்காகத்தானே அவர்களை எல்லாம் முதலில் வைத்தியப் பரிசோதனைகளுக்கு உட்படுத்துகிறார்கள்.

கடைக் காப்புறுதி போன்றவைகளில் விபத்து நடந்தால் மட்டுமே காப்புறுதி நன்மைகள் கிடைக்கும். அதற்காகக் கடையைத் தாமாகவே எரித்து விட்டோ அல்லது அங்கு திருட்டு நடந்ததாகக் காட்டியோ அல்லது அப்படி நடப்பதற்கு உடந்தையாக இருந்துவிட்டோ காப்புறுதி நன்மைகளைப் பெற முடியாது. அப்படி (?) எங்காவது ஒருசில சம்பவங்கள் நடந்திருக்கலாம். ஆனால் அது விதியல்ல, மோசடி.....

ஒருவர் தமது வலது கை விரல்களை பெருந்தொகைப் பணத்துக்குக் காப்புறுதி செய்திருக்கிறார் என வைத்துக் கொள்வோம். அப்படி ஓர் இழப்பு அவருக்கு அவராலோ அல்லது பிறராலோ நேராமல் கவனித்துக்கொள்ளும் தார்மீகப் பொறுப்பு அந்தக் காப்புறுதி நிறுவனத்துக்கும் இருக்கிறது. கம்பெனி 'வங்ரோந்து' அடைவதை அவர்களும் தான் விரும்புவார்களா?

இவ்வளவும் எதற்காக என்றால் ஒரு சில மாற்றங்களுடனான இந்த வானொலி விளம்பரத்தைத்தான் பாருங்களேன் விளங்கும்.

★ ★ ★

● பெண்: (பதறியபடி) இஞ்சருங்கோ.... அங்கை எங்கடை கடை வெள்ளத்திலை மூழ்கிறது. நீங்கள் என்னடாவென்றால் இங்கை ரீவி. பார்த்துக்கொண்டிருக்கிறியள்....

● ஆண்: அதற்கு ஏன் அப்பா பதறுகிறீர்? நான் கடைக்காப்புறுதி செய்திருக்கிறன். வெள்ளம் நெருப்பு எவைகளால் பாதிப்பேற்பட்டாலும் முழுமையாக எங்களுக்குக் கடைக் காப்புறுதி கிடைக்கும்.

● பெண்: (அமைதியாக) அப்ப பிறகென்ன? நல்லாய் இருந்து ரீவியைப் பாருங்கோ....

★ ★ ★

இன்னொரு வேடிக்கையான வானொலி விளம்பரம் அதையும் சில மாற்றங்களுடன் தருகிறேன் -

★ ★ ★

● குரல்: கூரையிலை ஏறியிருந்து உண்ணாவிரதம் இருக்கிறது....கவனம்....கவனம்.... (அடுத்து 'பஸர்', 'ஐயோ' என்ற சப்தங்கள்)

● மீண்டும் குரல்: சொன்னால் கேட்டால் தானே.... கூரை மீது ஏறியிருந்து உண்ணாவிரதம் இருப்பதானாலும் எங்கடை கூரைத் தகடு என்றால் அசையாது....

★ ★ ★

கூரை மீது ஏறியிருந்து போராட்டம் உண்ணாவிரதம் என்று அடிக்கடி இங்கு நடப்பதை ஒரு விதத்தில் கொச்சைப்படுத்துவது போலவும் இது அமைந்திருக்கிறது.

ஒரு சமயம் சிங்களப் பல்கலைக்கழக மாணவர்கள் கூரை மீது அமர்ந்து ஏதோ போராட்டம் நடத்தியபோது அப்போது, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அ. அமிர் த லிங்கம் அவர்கள் தாமும் கூரை மீது ஏறி அவர்களைச் சமரசப்படுத்தி கீழே இறக்கி வந்த சம்பவம் நினைவுக்கு வருகிறது.

சிறைச்சாலைக் கூரை மீது ஏறியிருந்து போராட்டம், உண்ணாவிரதம் என்றெல்லாம் அடிக்கடி இங்கு நடப்பது சாதாரண நிகழ்வுகள். இதிலே தமிழ் சிங்களக் கைதிகள் என்ற வேறுபாடுகள் கிடையாது.

சிறைச் சாலைகளிலே எத்தனையோ சட்ட திட்டங்கள், கட்டுப்பாடுகள் என்றெல்லாம் இருக்கும் போது அதையெல்லாம் மீறி எப்படிக் கைதிகள் சிறைக் கூண்டை விட்டு வெளியேறி, கூரைமீது ஏறிச்செல்ல முடிகிறது?

எது எப்படி இருந்தபோதிலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூரைத் தகடுகள் பஸர் என்று உடைந்து நொருங்கி கைதிகள் 'ஐயோ' என்று விழுந்ததாகச் சரித்திரம் இல்லை. அப்படியானால் அங்கு பொருத்தப்பட்டவைகளும் குறிப்பிட்ட விளம்பரதாரர்களின் குறிப்பிட்ட வகைக் கூரைத் தகடுகளாகத்தான் இருக்குமோ?

- சண் அங்கிள் -

போரின் ஓய்விலே புத்துயிர் பெறட்டும்

குண்டுகள் பட்ட
பனைகளில்
வண்டுகள் வந்தமர்ந்து
கள்ளருந்தட்டும்!
பகைவனின் காலடிபட்டு
பாழாகிப் போன
புகையிலைச் செடிகள்
மீண்டும்.....
பூப்பெய்தட்டும்!

மாமரக்கிளிகள்
தேன்கனியுண்டு
பாமழை பொழியட்டும்!
கந்தக மேகங்களில்
மீண்டும்
மழைத்துளி விழுந்து
கருக்கட்டட்டும்!
சுப்பரும் சொக்கரும்
'சோக்காய்' அமர்ந்து
'மப்படித்து' மகிழட்டும்!

நாட்டினைத் துறந்து
ஓடிய உறவுகள்
மீண்டும்.....
தேடியே வரட்டும்!
நொறுங்கிய கூரைகளும்
விழுந்த சுவர்களும்
அழிந்த வீதிகளும்
எரிந்த மனைகளும்
கலங்கிய விழிகளும்
கவிழ்ந்த தலைகளும்
மீண்டும்.....
போரின் ஓய்விலே
புத்துயிர் பெறட்டும்!

மு.வே.யோ.வாஞ்சிநாதன்.
(புலம்பெயர்ந்த நாட்டிலிருந்து)

முடியாதது ஒன்றுமில்லை

இயலாது என்று ஒருபோதும்
சொல்லாதே
மற்றவனால் இயலும்போது
எப்படி உன்னால் முடியாமல்
போகும்?
ஐந்து தடவை முயற்சி செய்து
தோல்வி என்றால் கூட அதைக்
கைவிடாதே சிலவேளை ஆறாவது
தடவையில் கூட உனக்கு
வெற்றி வாய்ப்பு காத்திருக்கக் கூடும்

முயற்சிகள் தோல்வியில் முடிந்தால்
அது வீண்போய்விட்டது என
எண்ணாதே. அவையே உனது
எதிர்கால முன்னேற்றத்துக்கு முக்கியமான
படிக்கல்லாக அமையக்கூடும்

முடியாது என்ற சொல்லை உன்
மனத்திரையிலிருந்து அழித்துவிட்டு
முடியும் என்ற சொல்லைப்
பொறித்துக்கொள் விரைவில் வெற்றி
வாய்ப்புகள் உன் முகவரி தேடி வந்து கதவைத் தட்டும்
தோல்வியால் வாழ்க்கைப் பாதையில்
தவறிவிழுந்தால் கூட மீண்டும்
துணிவோடு எழுந்து நில் இந்த
உலகத்தை ஒரு நாள் வெற்றி
கொள்ள நிச்சயம் உன்னால் முடியும்.

- அ.யூடா மறீனி

யாரோடு நோவோம்...?

நீதிமன்றமொன்றில் லொறிச் சாரதியொருவரைச் சந்தித்தேன். அவர் செய்த குற்றம் கரும் புகையைக் கக்கியபடி வாகனத்தைச் செலுத்தியது. சம்பந்தப்பட்ட நேரம் நீதிபதி அவ்வழியே சென்றிருக்கிறார். அவரே சம்பந்தப்பட்ட லொறியையும், சாரதியையும் நீதிமன்றுக்கு அழைத்து, தண்டப்பணம் விதித்து, குறித்த காலத்துக்குள் லொறியைத் திருத்தி நீதி மன்றிடம் உரிய அறிக்கையைச் சமர்ப்பிக்கப் பணித்திருந்தார்.

நீதிபதியாக இருந்ததால் இந்த 'நல்ல' செயலைப் புரிந்தார். சமூக நலனில் அக்கறை கொண்ட ஒவ்வொருவருக்கும் இவ்வாறான 'தீமை'களைத் தடுத்து நிறுத்த வேண்டிய கடப்பாடுண்டு. ஆனால் 'நீதிமன்று' 'வழக்கு' என்று அலைய எவருக்கும் விருப்பமில்லாததால் இத்தகைய தீமைகள் தொடர்கின்றன.

படையினரின் கணிசமான 'ட்றக்' வண்டிகள் மிகமோசமாகக் கரும்புகையை வெளித்தள்ளியபடி செல்வதை நீங்கள் கண்டிருப்பீர்கள். சில பொலீஸ் வாகனங்கள் கூட இதற்கு விதிவிலக்கல்ல அன்றியும், இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள், தனியார் பஸ்கள் போன்றனவும் கணிசமான அளவில் இவ்வாறே செல்கின்றன.

இவற்றின் பின்னால் செல்லவேண்டியவர்கள் பாடோ படுதிண்டாட்டம். அன்றொரு நாள் இ.போ.ச.பஸ் ஒன்றின் பின்னால் செல்ல நேர்ந்தது. உண்மையில் நான் கடலுக்குள் கணவாயொன்றின் பின்னால் செல்வதாகவே உணர்ந்தேன். ஏனெனில், கணவாய் தன்னைத் துரத்தும் பகை விலங்குகளிடமிருந்து தன்னைக் காப்பதற்கு கரிய மையை வெளித்தள்ளி எதிரிகள் திசைதெரியாது கலங்க, அது ஓடி மறைந்துவிடும். அவ்வாறுதான் இந்த பஸ்வெளிவிட்ட புகை காரணமாக, முன்னாலுள்ளவை பார்வைக்குப் புலப்படவில்லை. இந்தப் புகையைச் சுவாசிக்க நேர்பவர்கள் பரிதாபமானவரே. அவ்வாறாயின் தமது பிரதேசத்தின் கணிசமான தரப்பினர் பரிதாபகரமானவர்களே.

குண்டுங் குழியுமாகப் புழுதியை வாரியிறைக்கும் நமது வீதிகள், தெருக்கள், புகைதள்ளும் வாகனங்கள், உள்ளூராட்சி அமைப்புக்கள் குப்பைகளை வாரி அள்ளிச் செனறு எரிப்பது, ஆங்காங்கே வெடிக்கும் குண்டுகள் என்று நமது 'சூழலை'க் கபளீகரம் செய்யும் விடயங்கள் ஏராளம்.

பொலித்தீன்கள் நிலங்களிலும், நீர் நிலைகளிலும் நிறைந்து கிடக்கின்றன. கூடவே கால்நடைகளின் வயிற்றுக்குள்ளும் பிளாஸ்ரிக் பொருள்களே எங்கும் நீக்கமற நிறைத்துள்ளன. இவை விளைவிக்கும் ஆபத்துக்களை யாரும் கண்டுகொள்வதில்லை.

கொழும்பிலோ, புறநகரங்களிலோ புகை கக்கும் வாகனங்கள் பயணிக்கமுடியாது. பயணித்தால் எவ்வாறாவது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுவிடும்.

ஆனால், இங்கு இவை தாராளமாக ஓடுகின்றன. பொலீஸார் இவற்றைக் கண்டுகொள்வதில்லை? கண்டுபிடித்து, பெற்றுக்கொண்டுவிட்டு விடுகின்றனரா?

இதுவிடயத்தில் இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். ஏனெனில், இது சமூக ஆரோக்கியம் சம்பந்தப்பட்டது. குப்பை கூளங்களை அகற்றுவதில் உள்ளூராட்சி அமைப்புக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சாதாரணமானதல்ல. வாகனங்கள் இன்மை, சுகாதாரத் தொழிலை ஆற்றுவதற்கு முன்வரும் ஆளணி இல்லாமை, இருக்கும் பற்றாக்குறையான ஆளணியுடன் பணிகளை ஆற்றவேண்டிய நிலைமை, கழிவுகளை மீளுருவாக்கும் வசதிகளோ நிலைமாற்றும் வசதிகளோ இல்லாமை என எண்ணற்ற பிரச்சினைகளை அந்த அமைப்புக்கள் எதிர்நோக்குகின்றன. உரிய வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் அரசு கரிசனை கொள்ளாமையே முக்கியமான பிரச்சினையாகும்.

சுவிற்ஸர்லாந்தில் வீட்டுக் கழிவுகளை குறித்த பாத்திரங்களில் (இவை லீற்றர் அளவுடையவை) பிளாஸ்ரிக், தகரம் கடதாசி என வேறு பிரித்து வைத்திருக்கவேண்டும். இவற்றை அகற்றுவதற்கு சுவிஸ் அரசாங்கம் அளவுக்கேற்ப குறித்த தொகைப் பணத்தை அறவிடுகின்றது. அகற்றப்படுபவற்றுள் மீளுருவாக்கம் செய்பவை போக, எஞ்சிய கழிவுகள் கப்பல் மூலம் தென்னாபிரிக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கே கொட்டப்படுகின்றன. அல்லது அழிக்கப்படுகின்றன. மேற்கு நாடுகளின் தொழிற்சாலைகள் பலவும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கே மாற்றப்பட்டுள்ளன.

இந்நாடுகள் தமது 'சூழல்' தொடர்பாகக் கொண்ட அக்கறையின் வெளிப்பாடுகளே இவை.

நமக்கு அந்த அக்கறை எப்போது வரும்?

- ஏகலைவன்

புலம்பெயர் உறவுகள்: பரும்பாரும்...! படாதபாரும்...!

[illegible]ர்க்கமே என்றாலும் அது நம்முரைப் போலவருமா? இளையராஜாவின் குரல் இசையில் அமைந்த பாடல். எமது புலம்பெயர் உறவுகளால் அடிக்கடி உச்சரிக்கப்படுவது. மறக்காமல் மனதில் நிழலாடுகின்றதுமான பாடல்.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக யுத்தங்களோடும் சிந்திய இரத்தங் களோடுமே ஈழத்தமிழர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சமாதான சாயல் காற்று இம்மண்ணில் வீசினாலும் தமிழரின் மனதில் பட்ட காயங்கள் இன்னும் ஆறவில்லை என்பது உண்மை.

அன்றைய காலத்தில் பேரினவாதிகளின் கோர வெறியாட்டங்களினால் ஊரை, உறவுகளை இழந்து உயிரைக் கையில் பிடித்தபடி நகருவதற்கு இலக்கின்றி நகர்ந்தான். உலகத்தின் திசையெங்கும் அகதியாய் அலைந்தான். அங்கே அகதி அந்தஸ்துக் கோரி வாழ்ந்துகொண்டிருக்கிறான்.

இப்போது தாய்மடியை நாடி அவர்களது வரவு அதிகரித்து வருகிறது உறவுகளைப்பிரிந்து வாடிய தனிமைத் துயரங்களும் சொந்தமண்ணைக் காணும் ஆவலும் அவர்களை ஈழத்தை நோக்கி வரவைத்தன. அதுமட்டுமல்ல ஈழமண்ணில் ஆணிவேர் பதித்த பரம்பரையின் இளந்தளிர்கள் வெளிநாடுகளைச் சொந்தத்தளமாகக் கொண்டு எமது இனத்தின் மூலம் தெரியாமல் வாழ்வை போக்கிக் கொண்டிருக்கின்றனர். தாய்மண்ணை காட்டுவதற்காக பெற்றோர்கள் அவர்களை அழைத்து வருகின்றனர்.

அந்நிய மொழியும் கலாசாரமும் அவர்களது அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன. ஐரோப்பிய நாடுகளில் தமிழ் மெல்ல வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இருந்தும் அங்கே மெல்ல மெல்ல செத்துக்கொண்டிருக்கிறது என்றே சொல்லத்தோன்றுகின்றது. தமிழ் மண்ணிலும் அதுதான் நடக்கிறது.

வெளிநாடுகளில் வாழ்கின்ற எமது எதிர்கால சந்ததி தமிழ் தெரியாத தமிழராகவே வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் காலம் வெகுதூரத்தில் இல்லை. வேறு வழியின்றி தங்கி வாழ்கின்ற நாட்டின் முறைமைகளுக்கு இசைவாக்கப்படவேண்டிய கட்டாய சூழ்நிலை.

தொழில் புரிவதாயினும் சரி கல்வி கற்பதாயினும் சரி நிரந்தர பிரஜாவுரிமை பெறுவதற்கும் தற்காலிகத் தங்குமிட அந் தஸ்துக் கோரி வாழ்கின்ற நாட்டின் தேசிய மொழியினைப் பயின்றாக வேண்டும். இல்லையேல் தொழில் புரிவது போன்ற பிற கருமங்களை ஆற்றுவது கடினம். தமிழ், தமிழ் என்று வாழ்ந்த ஈழநாட்டில் இருந்து தூரவிலகி இப்போது வாரத்துக்கு ஒருதடவை அல்லது மாதத்திற்கு ஒருதடவையே தமிழைக் கற்பதற்கு புலம்பெயர்நாடுகளில் நேரம் ஒதுக்கப்படுகிறதாம். அதுவும் நம்மிடையே தோன்றி தமிழ் நலம் பெற்று திசையெங்கும் வாழவேண்டும் என்ற தணியாத விருப்பினால் தமிழ்ப் பிரியர்கள் சிலர் சிறுகல்விக் கூடங்களை அமைத்து தமிழ்க் கல்வியை போதித்து வருகிறார்கள். எப்படி இருந்தும் உயர் கல்வியை அந்த நாட்டுமொழியிலே தான் கற்கவேண்டும்.

இதைவிட இன்னொரு சோகம் என்னவென்றால் வானத்தில் பல வருடங்களுக்கு ஒருமுறை தோன்றுகின்ற அபூர்வநட்சத்திரக் காட்சி போல பெற்றோர்களுடன் பிள்ளைகள் ஒரே நேரத்தில் சேர்ந்திருப்பது அபூர்வமாம். ஏனென்றால், எல்லோரும் வேலை... வேலை... என்று விளிக்கிறார்கள். யாரோடு நோவோம்? யாருக்கு எடுத்துரைப்போம் என்ற அவலநிலை அவர்களுக்கு.

எப்போது இலங்கையில் சமாதானம் மலரும் என்று எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள் ஏனெனில், பசித்த வயிற்றுக்கு ஊர்க் கிணற்று தண்ணியள்ளிக் குடித்தால் போதும் பசி பறந்துவிடும். அந்தச் சந்தோசத்திற்கு எல்லையே கிடையாது என்கிறார்.

இந்த நிலையில் இருந்து வேதனை யுறுவோர் சிலர். இலங்கையை மறந்து இலங்கையும் ஒருநாடா எனக் கேட்பவர் பலர். அண்மையில் வெளிநாட்டிலிருந்து யாழ்ப்பாணம் வந்த நம்மவர் ஒருவர் வீட்டுமுற்றத்திலே கதிரையில் அமர்ந் திருந்தார். அவரைப் பார்ப்பதற்காக உறவினர் பலர் அங்கே வந்திருந்தனர். அவர்களில் ஒருவர் நிறை வெறியில் வந்திருந்தார். அப்போது வெளிநாட்டிலிருந்து வந்தவர் மரத்தில் இருந்த காகம், கா.. கா.. என கத்தியதைப் பார்த்து விட்டு வந்திருந்தவர்களை பார்த்துக் கேட்டாராம். இது என்ன பறவை கத்துகின்றது... என்று. காகத்தை தெரியாத வெள்ளைக்காரன் தோரணையில் அவர் கேட்ட கேள்விக்கு அங்கே வந்திருந்த போதை மனிதன் இங்கே எழுதமுடியாத வார்த்தைகளால் பேசிவிட்டு திருப்பிக்கேட்டாராம். உனக்கு பாட்டி சுட்ட வடையை தூக்கின காகத்தை கூடத்தெரியாதா? என்று எப்படி இருக் கிறது.

இங்குள்ளவர்களும் அந்நிய கலாசாரப்போக்கிலே வாழ முனைகின்றனர். பேச்சு வழக்கில் இருந்து கூட தமிழ் மொழியைப் புறக்கணிக்கின்றார்கள். தமிழ்ப் பாரம்பரிய ஆடை அணிகளை வெறுக்கின்றனர். அம்மா என்று அழகுத் தமிழால் உச்சரிக்கப் பழகாத பச்சிளம் குழந்தைகளுக்கு மம்மி, டாடி என்று சொல்லிக்கொடுக்கின்றனர். புறநாறாறில் தந்தை போருக்குப் போகும்போது வீரமுத்தம் கொடுத்து போய்வாருங்கள் வெற்றியுடன் என்று பீஞ்சு கையசைத்து விடைகொடுத்து அனுப்பியது. இன்று காலம் மாறி (ப்)பாய், (ப்)பாய் என்று அர்த்தம் புரியாமல் பிதற்றுகின்றது.

எமது நாட்டில் தமிழில் இருந்து பலர் விடைபெற முயற்சிக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு ஒரு வெளிப்படை உண்மை ஒன்றைச் சொல்லத் தோன்றுகிறது. எமக்கென்று ஒரு நாடு தமிழீழம் என்ற பெயரோடுதான் அமையப்போகின்றது.

- சுயர்சன் -

இங்கு வரும் புலம்பெயர் உறவுகள் விஷமத்தனமான நடவடிக்கைகளிலும் இறங்கத் தவறுவதில்லை. பயனுள்ள விவசாயநிலங்கள், குடிமக்கள் வாழ்கின்ற நிலங்கள், பிரதான வீதிகளை அண்மித்த நிலங்கள் கடைத் தொகுதிகள் என்பவற்றை தமது எதிர்கால நோக்கம் கருதி அதிக விலை கொடுத்து வலிந்து வாங்குகின்றனர். இதனால், தாய்மண்ணில் வாழ்பவர்கள் நம் நாட்டுக்குள்ளேயே அகதிகளாய் வாழ்பவர்கள் பெரும் துன்ப துயரங் களுக்கு ஆளாகின்றனர். அதைவிட இவர்கள் வெளிநாடு சென்றுவிட ஏராளமான விவசாயநிலங்கள் பயிர்ச்செய் கையின்றி தரிசு நிலங்களாகவே உள்ளன. பயிர் செய்து வாழ்ந்த குடும்பங்கள், . அன்றாட கூலிவேலை செய்து வாழ்ந்த குடிகள் இன்றுபெரும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலை மாறவேண்டும் தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த உலகம் இருந்து பலன் என்ன? பாரதியின் இந்தக் கருத்திற்கு இணங்க அனைவரும் சமத்துவமாக தனிமனித உரிமையோடு வாழ வழிசெய்ய வேண்டும். வேற்று நாடுகள் எமைப் பார்த்து பொறாமை கொள்ளக்கூடிய வகையில் தமிழீழம் என்ற சூரிய தேசத்தில் ஒன்றாகக் கூடிவாழும் காலம் எப்போது வரும். அந்த நாளுக்காக நம்பிக்கையுடன் காத்திருப்போம்.

சொந்த ஊரில் சொந்த வீட்டில் அலுவலகம் நடத்தும் கிராமசேவகர்

ஒரு கிராமசேவகரின் சேவை என்பது அக்கிராமத்தின் அனைத்து மக்களோடும் தொடர்புபட்டதாகும். இதானால்தான் இங்கு உறவினர், நண்பர், பகைவர் என்ற பாரபட்ச மின்றிச் சேவையாற்றுவது ஒவ்வொரு கிராம சேவகரதும் கடமையாகும். இதனால்தான், ஒரு பகுதிக்கு அப்பகுதியைச் சேராத வேறு பகுதி யைச் சேர்ந்த ஒருவர் கிராமசேவகராக நியமிக் கப்படுவது முறையாகும்.

ஆனால், இதற்கு மாறாக அண்மையில் ஒருபகுதிக்கு அதே பகுதியைச் சேர்ந்த ஒரு வர் கிராமசேவகராக நியமிக்கப்பட்டுள்ளார். போதாக்குறைக்கு அவர் தனது வீட்டிலேயே கிராமசேவை அலுவலகத்தையும் நடத்தி வரு கிறார். இந்நிலையில் இவர்களிற்கு பிடியாதவர் கள் கோபக்காரர்கள் கிராமசேவகரிடம் போகும் போது கிராமசேவகரின் மனைவி நேரடியாக தொடர்புபட்டு பழிவாங்குவதாக அப்பகுதி மக்கள் விசனமடைகின்றனர். இதனால், அப் பகுதி மக்கள் கிராமசேவகர் சேவையைப் பெறு வதில் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு ஒரு வாசகர் கடிதம் எழுதியுள் ளார். அவர் மேலும் கூறுகிறார்.

குறித்த கிராமசேவகர் மாற்றப்பட வேண் டும் அல்லது உடனடியாக அவர் தன் அலுவ லகத்தையேனும் தன் வீட்டுக்கு வெளியே கொண்டுவரவேண்டும் என அப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர். பொறுப்புடைய அப் பகு திக்கான உதவி அரச அதிபர் இதனை கவ னத்தில் எடுப்பாரா? என்று.

இந்த நிலை எங்கு, எந்தச் செயலர் பிரிவில் என்பதையெல்லாம் அவர் எமக்கு எழுதியிருந் தாலும் அந்தச் செயலருக்குத் தெரியாமல் அல் லது நினையாப்பிரகாரமாக இது நடைபெற் றிருக்கலாம் என்பதால் சம்பந்தப்பட்டவர்கள் இதில் கவனம் எடுப்பார்கள் என்ற நம்பிக்கை யால் மேலும் விவரங்களை வெளியிடாமல் விடுகின்றோம்.

கிராமசேவகர்களில் எத்தனையோ பேர் மக் கள் சேவகர்களாகவிருந்து பணியாற்றுகிறார் கள் என்பதற்குப் பலசான்றுகள் உண்டு. இரவு பகலென்று இந்தச் சேவையில் அயராது உழைக்கிறார்கள்.

ஆனால், இந்தப் பதவியை துஷ்பிரயோகம்

சத்தமும் — சந்தடியும்

செய்தே வாழ்கிறவர்களும் அவர்களை மாற் றும்படி மக்கள் கோரி வருவதும் பல இடங் களில் நடைபெற்றுவரும் சங்கதிதான்.

இந்த விடயம் பற்றிக் கதைத்துக் கொண் டிருந்தபோது ஓர் அன்பர் கிராம சேவகர்கள் பற்றிய சிலவிவரங்களைச் சொன்னார்.

எங்களூர் விதானையார் - அதுதான் கிராம சேவகர் - கந்தோரில் இருக்கிறார் என்றால் அவர்தான் அப்பகுதி பிரதேச செயலர் போன்ற நினைப்பில் ஒரு தர்பாரே நடத்துவார்.

கிராமசேவகருக்காக மக்களா? அல்லது மக்களுக்காக கிராமசேவகரா? என்ற கேள்வி களுக்கெல்லாம் அங்கு இடமில்லை. ஏய், அங்கே நில். நீ வரிசையில் வா. நீ அடுத்த வாரம் என்னை வந்து பார் - பிரதேச கந்தோரில் என்னை வந்து சந்தி.

இநதத் தோரணையில்தான் அவரது காட்டுத் தர்பார் நடைபெறும். அற்கேற்றாற்போல் அவ ருக்கு சில அடியாள்கள். அவர்களுக்கு ஏதோ 'சம்திங்' அவர் மூலம் கிடைக்கவேண்டும் இல்லையென்றால் இவர்கள் ஏன் அவருக்கு பின்னால் சுத்துகிறார்கள்?

ஏதாகிலும் அவசரக்காரியம் நடக்க வேண்டு மானால் காரியாலயத்தில் அவரைச் சத்திப்பது முயற்கொம்பு. அருகாமையிலுள்ள தவறணையே அவரது காரியாலயமாக மாறிவிடும்.

இபபடியானவர்களுக்கு எதிராகப் பெட்டிசன் களும் போடுவதுண்டு மேலதிகாரிகளும் இதைக் கண்டும் காணாததுமாக இருந்து விடுகிறார்கள்.

கடந்த காலத்தில் நிவாரணமாகச் சிமெந்து போன்ற பொருள்களை வெளிநாட்டு உதவி யுடன் வழங்கப்பட்டனவல்லவா? இவை களை இந்தக் கிராமசேவகர்கள் தனக்கு வேண்டியவர்களுக்கும் அடிவருடிகளுக்கும் பகிர்ந்துகொடுத்துப் பாக்கெட்டை நிரப்பிக் கொண்டார் என்று கேள்வி. அதுமட்டுமல்ல பாதிக்கப்பட்ட மக்களுக்கென 25ஆயிரம் ரூபா வழங்கப்பட்டதல்லவா? அது இடைநடு வில் நிறுத்தப்பட்டுவிட்டது. சிலபேர் பயனை டைந்தார்கள் உண்மையாகவே -நேரடியாக பாதிக்கப்பட்ட அனேகர் இம்மாதிரி சேவகர் களின் செயற்பாடுகளினால் ஒரு சதம் கூடப் பெறமுடியாமல் போய்விட்டது.

இந்த நிவாரணத்துக்காக ஒதுக்கப்பட்ட பணம் அப்போதய ஆட்சியாளர்களாலேயே 'அபேஸ்' பண்ணப்பட்டுவிட்டதாகக் கதை.

எதுவானாலும், மக்கள் இடம் பெயர்ந்து திரும்பிய பின்னர் வழங்கப்பட்ட கொடுப்பன வுகள் பொருள் விநியோகங்கள் பற்றியெல்லாம் ஒரு விசாரணை நடக்குமானால் இம்மாதிரி ஆசாமிகளின் செயற்பாடுகள் பற்றிய பல விவ ரங்கள் வெளிவரக்கூடும்.

நந்தன் எழுதுவது...

இவ்வாறு அவர் மூச்சு விடாமல் பேசி முடித்தார்.

நீர் சொல்வதைப் போல ஒருவர் இருவர் இருக்கலாம். எல்லாரையும் அவ்வாறு கூற முடியாது என்று நான் கூறினேன்.

அதைத்தான் நானும் கூறுகிறேன் நல்ல வர்கள் நாலும் தெரிந்தவர்கள் மக்கள் நலன் அக்கறையுடன் பணிபுரிகிறவர்கள் பலர் இருக் கிறார்கள். ஒரு சில புல்லுருவிகளால் மற்றவர்க ளுக்கும் தலைக்குனிவு ஏற்பட்டு விடுகின்றது என்றார் நண்பர். தனது கூற்றை மேலும் விஸ் தரித்து வியாக்கியானம் செய்ய ஆயத்தமாகும் நிலையில் வேறு நண்பர் ஒருவர் உள்ளே புகுந்தார்.

அதனால் கதை அத்துடன் முற்றுப் பெற் றது.